## (ஊ) அரசாங்க நிதி

1967 ஒற்றோபர் தொடக்கம் 1968 செத்தெம்பர் வரைக்குமான நிதியாண்டின் அரசிறைத் தொழிற்பாடுகள், முந்திய நிதியாண்டுகளின் தொடர்பான தரவுகளுடன் பின்னிணைப்பு IIஇன் 17ஆம் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளன. இறுதி மூன்றாண்டுகளுக்கான தரவுகள், கீழே அட்டவணை II (ஊ) 1இற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை II (ஊ) 1

### அரசாங்கத்தின் நிதித் தொழிற்பாடுகள் (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1965/66 | 1966/67 | 1967/68 தற்காலிகமானவை | 1968/69 மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| 1. தேறிய பண மிகை/குறை (—) ... | – 566.0 | – 606.8 | – 715.7 | – 701.2 |
| (அ) அரசிறை ... ... ... | 1,833.3 | 1,954.8 | 2,156.4 | 2,338.5 |
| (ஆ) செலவு ... ... ... | – 2,399.3 | – 2,561.6 | – 2,872.1 | – 3,039.7 |
| (1) மீண்டெழுஞ் செலவு ... | – 1,860.5 | – 1,895.3 | – 2,186.2 | – 2,297.9 |
| (2) மூலதனச் செலவு ... ... | – 528.4 | – 624.7 | – 714.4 | – 741.8 |
| (3) முற்பணக் கணக்குகளும் ஏனையவையும் (ஆ) ... | – 10.4 | – 41.6 | + 28.5 | — |
| 2. பணக்குறையின் நிதியீட்டம் ... | 566.0 | 606.8 | 715.7 | 701.2 |
| (அ) கடன்தொழிற்பாடுகளிலிருந்து பெற்ற தேறிய வருவாய்கள் ... | 648.4 | 629.2 | 751.8 | 701.2 |
| (1) தேறிய உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு ... | 112.2 | 72.3 | 9.8 | — |
| (2) தேறிய உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... | 418.2 | 348.3 | 551.8 | 298.0 |
| (3) தேறிய அந்நிய நிதி ... | 118.0 | 208.6 | 190.2 | 403.2 |
| (ஆ) பணமிச்சங்களின் வீழ்ச்சி (இ) ... | – 82.4 | —22.4 | – 36.1 | — |
| 3. நிதித் தொழிற்பாட்டின் தேறிய பிரிவுத் தாக்கம் (ஈ) ... | 122.4 | 56.1 | 267.4 | 11.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தயவுசெய்து பின்னிணைப்பு IIஇல் உள்ள அட்டவணை 17வது அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

(ஆ) விடயங்களின் மொத்தம் பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 17இனது 1 (ஆ) 3 தொடக்கம் 1 (ஆ) 7வரை.

(இ) ( - ) சய அடையாளம் அதிகரிப்பைக் காட்டும்.

(ஈ) விவரங்களுக்கு அட்டவணை II (ஊ) 8ஐத் தயவுசெய்து பார்க்கவும்.

மீளப்பார்வையிடும் ஆண்டான 1967/68இல் மொத்த அரசிறையானது, 21,564 இலட்சம் ரூபாய்களாகக் காணப்பட்டபோது மொத்த வாக்களிக்கப்பட்ட செலவானது[1] 29,006 இலட்சம் ரூபாய்களாகவிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது, இவை முறையே, 10.3 சதவீதத்தாலும், 15.1 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளன. மீண்டெழுஞ் செலவு 21,862 இலட்சம் ரூபாய்களாகவிருந்தது. இது, 1966/67ஆம் ஆண்டின் நிலையைவிட 15.3 சத

1, அட்டவணை II (ஊ) 1ன் விடயங்கள் I (ஆ) 1, I (ஆ) 2னதும், பின்னிணைப்பு IIன் அட்டவணை 17னதும் மொத்தம்.

வீதம் உயர்ந்திருந்தது. மூலதனச் செலவானது முன்னைய ஆண்டுக்குரிய 6,247 இலட்சம் ரூபாய்களிலிருந்து 7,144 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. 1967/68ல் முற்பணக்கணக்குத் தொழிற்பாடுகள் 285 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேறிய வருவாயையேற்படுத்தின. மாறாக, 1966/67ல் இது 416 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேறிய கொடுப்பனவாக விருந்தது. இத்தொழிற்பாடுகளிலிருந்து ஏற்பட்ட தேறிய பணக்குறையானது 7,157 இலட்சம் ரூபாய்களாகும். ஒப்புநோக்கும்போது, இப்பணக்குறை 1966/67இல் 6,068 இலட்சம் ரூபாய்களாகவும், 1967/68இல் 5,660 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தது. 1967/68இல் ஏற்பட்ட பணக்குறையானது, உள்நாட்டுச் சந்தை மூலங்களிலிருந்து பெற்ற கடன்பாடாகிய 5,518 இலட்சம் ரூபாய்களாலும், அந்நிய நிதியில் இருந்து பெற்ற 1,902 இலட்சம் ரூபாய்களாலும், உள்நாட்டுச் சந்தையல்லாத மூலங்களில் இருந்து கிடைத்த 98 இலட்சம் ரூபாய்களாலும் நிதியீட்டப்பட்டது. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் உதவியாலெழுந்த இணைக்கிணை நிதிகளின் மாற்றங்களுக்காகச் சீராக்கஞ் செய்யப்பட்ட பின்பு, தேறிய பணக்குறையின் விரிவுத்தாக்கம் 2,674 இலட்சம் ரூபாய்களாகவிருந்தது. மாறாக, இவ்விரிவுத்தாக்கம் 1966/67இல் 561 இலட்சம் ரூபாய்களாகவும், 1965/66இல் 1,224 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன.

மேற்காணும் மாற்றங்கள் இடம்பெற்ற 1967/68ம் நிதியாண்டு அரசாங்க நிதித் துறையிற் குறிப்பிடத்தக்க ஆண்டாகும். இது, 1967/68 இற்கான வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபின் முனையப்பட்ட பல முக்கிய பொருளியற் சீர்திருத்தங்களால் ஏற்பட்டதாகும். இச்சீர்திருத்தங்கள் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளிற் குறிப்பிடத்தக்க விளைவுகளை உண்டுபண்ணின. முதலில், 1967 நவெம்பரில் ரூபா நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. இது அரசாங்கச் செலவின் இறக்குமதிப் பங்கை உயர்த்திற்று. அரசாங்க ஊழியர்களுக்கும், இளைப்பாறற் சம்பளம் பெறுபவர்களுக்கும் மேலதிகமான ஓர் இடைக்காலப் படி வழங்கியதன் காரணமாக, செலவுகளிற் கூடுதலான தோர் அதிகரிப்பு ஏற்பட்டது. நாணய மதிப்பிறக்கத்தின்பின் உடனடியாகச் சில முக்கிய ஏற்றுமதிப் பொருட்களின்மீது விதிக்கப்பட்ட புது வரிகளும், நாணய மதிப்பிறக்கத்தின்பின் முக்கிய ஏற்றுமதிகளின் ரூபா விலைகளிலேற்பட்ட திருத்தமும் அரசிறையில் அதிகரிப்பை விளைவித்தன. இரண்டாவதாக, 1968 மேயிற் புகுத்தப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம், அரசிறையில் மேலும் அதிகரிப்பை விளைவித்தது. இது பல இறக்குமதிகளின்மீதிருந்த இறக்குமதி — உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் அகற்றப்பட்டதாலும், அதேநேரத்திற் சில இறக்குமதி வரிகள் குறைக்கப்பட்டு அல்லது அகற்றப்பட்டதாலும் அரசிறையில் ஏற்பட்ட குறைவினால் ஓரளவிற்கு எதிரீடு செய்யப்பட்டது. 1968 ஓகத்திற் பிரசெல்ஸ் இடுபெயர்த் தொகுதிமுறைத் தீர்வையைப் பின்பற்றியதன் விளைவாக, இதுகாறும் இறக்குமதிகள்மீது மொத்தச் சந்தைப்பெறுமதியின் அடிப்படையில் விதிக்கப்பட்ட தீர்வை, கொ. கா. க. பெறுமதி அடிப்படைக்கு மாற்றப்பட்டமையால் அரசிறையில் மேலுமோர் வீழ்ச்சி ஏற்பட்டது. இச்சீர்திருத்தங்களின் மொத்த விளைவாக 1967/68 இன் வரவுசெலவுத் திட்டம் புகுத்தப்பட்டபொழுது எதிர்பார்க்கப்பட்டதிலும்பார்க்க அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின் இறுதி வரவுகளில் மிக வேறுபாடான மாற்றங்காணப்பட்டது.

1968/69ஆம் நடைமுறை நிதியாண்டுக் காலத்தில் அரசிறை 23,385 இலட்சம் ரூபாய்களாகவும், வாக்களிக்கப்பட்ட செலவானது 30,397 இலட்சம் ரூபாய்களாகவும் அமையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. பின்னையது, மீண்டெழுஞ் செலவாக 22,979 இலட்சம் ரூபாய்களையும், மூலதனச் செலவாக 7,418 இலட்சம் ரூபாய்களையும் கொண்டுள்ளது. இந்த மதிப்பீட்டின்படி தேறிய பணக்குறை 7,012 இலட்சம் ரூபாய்களாகும். இப்பணக்குறை உள்நாட்டுச் சந்தை ரூபாய்களிலிருந்து பெறும் கடன்பாடாகிய 2,980 இலட்சம் ரூபாய்களாலும், அந்நிய மூலங்களிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் உச்ச வருவாயாகிய 4,032 இலட்சம் ரூபாய்களாலும் நிதியீட்டம் செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேறிய பணக்குறையின் விரிவுத்தாக்கம் 115 இலட்சம் ரூபாய்கள் மட்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

அரசிறை

1966/67 நிதியாண்டில், அரசாங்க வரவுசெலவு செயற்பாட்டின் திருப்தியான அம்சங்களிலொன்றாகக் குறிப்பிடத்தக்க அரசிறை அதிகரிப்பு (1,214 இலட்சம் ரூபாய்களால் அல்லது 6.6 சதவீதத்தால்) ஏற்பட்டமை 1967ம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையில் அவதானிக்கப்பட்டது. 1967/68ன் நிதியாண்டில், அரசிறை எழுச்சி அடைந்தமை அவதானிக்கப்பட்டது. இந் நிதியாண்டில் உண்மையான (தற்காலிகமான) அரசிறை ரூபா 2,016 இலட்சம் ரூபாய்களால் அல்லது 10.3 தவீதத்தால் அதிகரித்து 21,564 இலட்சம் ரூபாய்களையடைந்தது.

கடந்த பதின்மூன்று ஆண்டுகளுக்கான அரசிறையினது எண்தொகைகளும், 1968/69 ஆண்டிற்கான மதிப்பீடுகளும் பின்னிணைப்பு IIன் அட்டவணை 19ற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. அரசிறை 1958/59 தொடக்கம் 1967/68 வரைக்குமான பத்தாண்டுகளில் ஆண்டொன்றிற்குச் சராசரி 5.35 சதவீதத்தாலும் (கூட்டு), கடந்த ஐந்து நிதியாண்டுகளிற் சராசரி 6.24 சதவீதத்தாலும் (கூட்டு) அதிகரித்துள்ளது. இதனால், 1967/68ம் ஆண்டில் அரசிறை அதிகரிப்பு விகிதம் கடந்த ஐந்தாண்டு காலத்தினதும், பத்தாண்டு காலத்தினதும் சராசரி அதிகரிப்பு விகிதத்தைவிடக் குறிப்பிடத்தக்களவு உயர்ந்துள்ளது.

1964/65ல் முடிவடையும் ஐந்து நிதியாண்டுகளில் தனியாளுக்குரிய அரசிறை வருவாய்கள் (பஞ்சாங்க ஆண்டின் நடுப்பகுதியிலுள்ள எண்தொகைகளின் அடிப்படையில்)1 உயர்ச்சிப் போக்கினைக் காட்டியிருக்கும் வேளையில், அவ்வருவாய் 1965/66ல் 160 ரூபாய்களாகச் சிறிதளவு குறைந்து, இது 1966/67ல் 166 ரூபாய்களாக உயர்ந்தது. இது, 1967/68ற் குடிசன அதிகரிப்பு விகிதத்தோடு இணைந்த அரசிறையின் உயர்விகித அதிகரிப்பினாற் குறிப்பிடக்கூடிய அளவுக்கு உயர்ந்து 180 ரூபாய்களையடைந்தது.

1967/68ம் ஆண்டின் மூலமதிப்பீடாகிய 20,057 இலட்சம் ரூபாய்களுடன் ஒப்பிடும்போது, 1967/68ன் உண்மையான (தற்காலிகமான) அரசிறை 1,507 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டியுள்ளது. இது, முன்னைய இரு நிதியாண்டுகளிலும் முறையே, ஏற்பட்ட மொத்த அரசிறையின் மிகை மதிப்பீடுகளாகிய 646 இலட்சம் ரூபாய்களுக்கும் 783 இலட்சம் ரூபாய்களுக்கும் மாறாகவிருந்தது. 1967/68ல் அரசிறையின் உயர்ச்சி பெரும்பாலும் ஏற்றுமதித் தீர்வைகள், வருமான வரி, அரசாங்கத் தொழிற்றுறை வருவாய்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும்பார்க்க உயர்ந்த அரசிறையைக் கொடுத்ததனால் ஏற்பட்டதாகும். மறுபுறத்தில், இறக்குமதித் தீர்வைகளில் இருந்து கிடைத்த வருவாய் மதிப்பீட்டிலும்பார்க்கக் குறைவாகவிருந்தது. இக்குறைவு, அநேக இறக்குமதிகள்மீது உத்தரவுச் சீட்டுக் கட்டணங்களை நீக்கியதாலாகும்.

நடைமுறை நிதியாண்டாகிய 1968/69ல் மொத்த அரசிறை 23,385 இலட்சம் ரூபாய்களாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இது 1967/68ம் ஆண்டிலும்பார்க்க 1,821 இலட்சம் ரூபாய்கள் அல்லது 8.4 சதவீதம் அதிகமாகும். இந்த அதிகரிப்புவீதம் 1967/68லும்பார்க்கக் குறைவானதாகும். இருந்தபோதிலும், இது பத்து அல்லது ஐந்து ஆண்டுகளின் சராசரி அதிகரிப்பு விகிதத்திலும் (கூட்டு) கூடியதாகும். இறக்குமதி ஏற்றுமதித் தீர்வைகளிலேற்படுமென எதிர்பார்க்கப்படுகின்ற அரசிறை வீழ்ச்சியைக் கணிசமானளவில் எதிரீடுசெய்யத்தக்க முறையில், அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்களின் விற்பனை, உள்நாட்டுப் பொருள்வரிகள், அரசாங்கத் தொழிற்றுறை வருவாய்கள் என்பனவற்றிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் அரசிறை உயர்ச்சியே இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும்.

---

1. பதிவாளர் தலைமையதிபதியின்படி 1968ம் ஆண்டின் நடுப்பகுதியிலுள்ள மதிப்பிடப்பட்ட தொகை 1,19,64,000 ஆகும்.

அட்டவணை

அரசிறை — 1966/67 இலிருந்து

| மூலங்கள் | உண்மையான 1966/67 | |
|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | சதவீதம் |
| 1. இறக்குமதித் தீர்வைகள் (அ) ... ... ... இவைகளாவன | 544.3 | 27.8 |
| (அ) தானியமும் கோதுமை மாவும் ... ... | 30.0 | 1.5 |
| (ஆ) சீனி ... ... ... ... | 26.2 | 1.3 |
| (இ) பருத்தி நூல், முறுக்கு நூல் போன்றவை ... ... | 43.9 | 2.2 |
| (ஈ) புகையிலையும் சிகரெட்டும் ... ... ... | 28.1 | 1.4 |
| (உ) மண்ணெண்ணெயும் மோட்டார் திராவகங்களும் ... | 173.7 | 8.9 |
| (ஊ) உரவகைகள் ... ... ... ... | 10.5 | 0.5 |
| (எ) சிமெந்து தவிர்ந்த கட்டடப்பொருட்களும்வன்பொருட்களும் | 11.4 | 0.6 |
| (ஏ) போக்குவரத்து உபகரணங்கள் ... ... | 49.2 | 2.5 |
| (ஐ) இயந்திரங்கள் ... ... | 18.6 | 1.0 |
| (ஒ) கைத்தொழில் மூலப் பொருட்கள் ... ... | 12.7 | 0.6 |
| (ஓ) ஏனைய பொருட்கள் (ஆ) ... ... | 46.8 | 2.4 |
| (ஔ) இறக்குமதிகளின் மீதான உத்தரவுச்சீட்டுக் கட்டணங்கள் (இ) | 34.4 | 1.8 |
| 2. அ. செ. உ. விற்பனை மூலமான வரவுகள் (ஈ) ... ... | — | — |
| 3. ஏற்றுமதித் தீர்வைகள், இவைகளாவன ... ... | 230.0 | 11.8 |
| (அ) தேயிலை (தேயிலை வரியும் உட்பட) (உ) ... ... | 205.2 | 10.5 |
| (ஆ) இரப்பர் ... ... ... ... | —1.5 (ஊ) | — 0.1 |
| (இ) தேங்காய் ... ... ... ... | 19.8 | 1.0 |
| 4. உள்நாட்டுப் பொருள்வரி (எ) ... ... ... | 355.0 | 18.2 |
| (அ) சாராய விற்பனை இலாபம் ... ... ... | 106.8 | 5.5 |
| (ஆ) உள்நாட்டுக் குடிவகையின் மீதான தீர்வை ... ... | 12.8 | 0.7 |
| (இ) புகையிலை வரி... ... ... ... | 138.8 | 7.1 |
| (ஈ) மொத்த விற்பனை வரி ... ... ... | 72.2 | 3.7 |
| 5. வருமான வரி ... ... ... ... | 310.0 | 15.9 |
| 6. பூதல் வரி ... ... ... ... | 8.8 | 0.5 |
| 7. தனியாளுக்கான வரி ... ... ... | 13.1 | 0.7 |
| 8. தேசிய லொத்தர்... ... ... ... | 11.9 | 0.6 |
| 9. அரசாங்க முயற்சிகளிலிருந்து கிடைத்த மொத்த வரவுகள் (ஏ) இதில் | 250.2 | 12.8 |
| (அ) புகையிரத சேவை வருமானம் ... ... | 102.1 | 5.2 |
| (ஆ) மின்சாரத் திணைக்கள வருமானம் ... ... | 55.9 | 2.9 |
| (இ) தபாற் தந்திப் போக்குவரத்து வருமானம் ... | 56.9 | 2.9 |
| (ஈ) துறைமுக வருமானம் ... ... | 33.8 | 1.7 |
| 10. ஏனைய வருமானம் ... ... | 231.5 | 11.8 |
| மொத்தம் ... ... | 1,954.8 | 100.0 |

(அ) உத்தரவுச் சீட்டு முறையின்கீழ் அமைந்த இறக்குமதிகளின் மீதான உத்தரவுச் சீட்டுக் கட்டணங்களை உள்ளடக்கும்.

(ஆ) அரசாங்க அரசிறைப் பாகுபாட்டில் காட்டப்பட்டுள்ள விடயம்.

(இ) உத்தரவுச்சீட்டின்கீழ் உள்ளவை.

(ஈ) 1968, மே 6ந் தேதி தொடக்கம் ஏற்படுத்தப்பட்டது.

(உ) தேயிலை வரியையும் உள தலைப்பு 3இன்கீழ் பாகுபடுத்தப்பட்டுள்ள வருமானத்தையும் உள்ளடக்கும். தலைப்பு 1இல் உள்ள சில்லறைகள் - சுங்கம்.

(ஊ) இவ்விடயத்தின்கீழுள்ள எதிரிடையான தொகை அரசிறையிலிருந்து செய்யப்பட்ட மீளளிப்பினாலாகும்.

*II* (ஊ) 2

**1968/69வரை**

| மூலமதிப்பீடுகள் 1967/68 | | உண்மயான (தற்காலிகமானவை) 1967/68 | | மூலமதிப்பீடுகள் 1968/69 | |
|---|---|---|---|---|---|
| தொகை ப. இ. ரூ. | சதவீதம் | தொகை ப. இ. ரூ. | சதவீதம் | தொகை ப. இ. ரூ. | சதவீதம் |
| 579.8 | 28.9 | 514.0 | 23.8 | 409.4 | 17.5 |
| | | | | | 0.9 |
| 21.6 | 1.1 | 23.2 | 1.1 | 22.1 | 1.3 |
| 30.8 | 1.5 | 33.5 | 1.6 | 31.2 | 0.5 |
| 21.7 | 1.1 | 27.5 | 1.3 | 11.1 | 1·2 |
| 48.0 | 2.4 | 30.9 | 1.4 | 27.0 | 6.8 |
| 120.0 | 6.0 | 135.3 | 6.3 | 159.0 | 0.8 |
| 15.1 | 0.8 | 11.9 | 0.6 | 18.8 | |
| 7.6 | 0.4 | 16.7 | 0.8 | 12.0 | 0.5 |
| 59.2 | 3.0 | 38.8 | 1.8 | 30.0 | 1.3 |
| 22.5 | 1.1 | 15.7 | 0.7 | 9.0 | 0.4 |
| 32.1 | 1.6 | 22.0 | 1.0 | 5.0 | 0.2 |
| 48.6 | 2.4 | 50.0 | 2.3 | 39.0 | 1.7 |
| 100.6 | 5.0 | 67.0 | 3.1 | 1.2 | 0.1 |
| — | — | 77.0 | 3.6 | 360.0 | 15.4 |
| 237.3 | 11.8 | 318.9 | 14.8 | 289.8 | 12.4 |
| 206.8 | 10.3 | 223.3 | 10.8 | 233.0 | 10.4 |
| 1.0 | ... | 10.1 | 0.5 | 9.0 | 0.4 |
| 25.9 | 1.3 | 68.1 | 3.2 | 42.6 | 1.8 |
| 387.6 | 19.3 | 393.8 | 18.3 | 433.0 | 18.5 |
| 110.0 | 5.5 | 110.0 | 5.1 | 111.0 | 4.7 |
| 16.2 | 0.8 | 14.1 | 0.7 | 13.4 | 0.6 |
| 165.0 | 8.2 | 168.4 | 7.8 | 195.0 | 8.3 |
| 71.0 | 3.5 | 79.2 | 3.7 | 92.0 | 3.9 |
| 270.0 | 13.5 | 315.9 | 14.6 | 275.0 | 11.8 |
| 9.0 | 0.4 | 9.0 | 0.4 | 9.0 | 0.4 |
| 17.0 | 0.8 | 13.6 | 0.6 | 16.0 | 0.7 |
| 13.2 | 0.7 | 15.4 | 0.7 | 18.0 | 0.8 |
| 267.8 | 13.4 | 273.4 | 12.7 | 280.7 | 12.0 |
| 103.1 | 5.1 | 106.7 | 4.9 | 104.3 | 4.5 |
| 66.5 | 3.3 | 65.8 | 3.5 | 74.8 | 3.2 |
| 68.3 | 3.4 | 64.6 | 3.0 | 65.0 | 2.8 |
| 29.9 | 1.5 | 36.3 | 1.7 | 36.6 | 1.6 |
| 240.0 | 11.2 | 225.3 | 10.4 | 248.8 | 10.6 |
| 2,005.7 (ஐ | 100.0 | 2,156.4 (ஐ | 100.0 | 2,338.5 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(எ) அரசாங்க அரசிறைப் பகுப்பினது உள்நாட்டு வருமானத்தின்கீழ் பகுக்கப்பட்டுள்ள தேயிலை வரியை விலக்குகின்றது.

(ஏ) 1966/67ன் உண்மையான எண்தொகையில் 5. 1. 67 தொடக்கம் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்ட ஒலிபரப்புத் திணைக்களத்தின் 16 இலட்சம் ரூபாய்களும் அடங்கும்.

(ஐ) பின்னிணைப்பு *II*ல் உள்ள 19ம் அட்டவணையின் அடிக்குறிப்பு (ஆ)விற் கொடுக்கப்பட்டுள்ள காரணங்களால் இவ்வெண்தொகைகள், வெளிடப்பட்ட அரசாங்கக் கணக்கிலுள்ள எண்தொகைகளுடன் வேபடுபவை.

1966/67 (உண்மையான), 1967/68 (மூலம்), 1967/68 (உண்மையான தற்காலிகமான), 1968/69 (மூலம்) ஆகியவற்றின் அரசிறையின் விரிவான விடயங்கள் முன்பக்கமுள்ள அட்டவணை II (ஊ) 2ல் ஒப்பிடப்பட்டுள்ளன.

### சுங்க வருமானம்[1]

இறக்குமதித் தீர்வைகளையும் (இறக்குமதிகளின் மீதுள்ள உத்தரவுச் சீட்டுக் கட்டணங்களையும் உள்ளடக்கி), ஏற்றுமதித் தீர்வைகளையும் (தேயிலை வரியை உள்ளடக்கிய) கொண்ட சுங்க வருமானம் 1967/68ல் 586 இலட்சம் ரூபாய்களால் அல்லது 7.6 சதவீதத்தால் அதிகரித்து, 8,329 இலட்சம் ரூபாய்களையடைந்தது. இறக்குமதித் தீர்வைகளிலேற்பட்ட 303 இலட்சம் ரூபாய்கள் அல்லது 5.6 சதவீத வீழ்ச்சியை மேலதிகமாக எதிரீடுசெய்து, ஏற்றுமதித் தீர்வைகளிலேற்பட்ட 889 இலட்சம் ரூபாய்கள் அல்லது 38.7 சதவீத அதிகரிப்பே இதற்குக் காரணமாகும். 1968/69 நிதியாண்டிற் சுங்க வருமானம் 1,337 இலட்சம் ரூபாய்கள் அல்லது 16.1 சதவீதத்தால் வீழ்ச்சியடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஏற்றுமதித் தீர்வைகளில் எதிர்பார்க்கப்படும் 291 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9.1 சதவீத வீழ்ச்சியும், இறக்குமதித் தீர்வைகளில் எதிர்பார்க்கப்படும் 1,046 இலட்சம் ரூபாய்களால் அல்லது 20.4 சதவீத வீழ்ச்சியும் இதற்குக் காரணமாகுமெனினும், அந்நியச் செலாவணி உரிமைச் சான்றிதழ் விற்பனையாற் கிடைக்குமென எதிர்பார்க்கப்படும் உயர்ந்த வருவாய்களால் இது மேலதிகமாக எதிரீடுசெய்யப்படும் என்பது கவனிக்கத்தக்கது.

### இறக்குமதித் தீர்வுகள்

இறக்குமதிகளிலிருந்து கிடைக்கும் அரசிறை[2] 1966/67ல் 675 இலட்சம் ரூபாய்களால் அல்லது 14.2 சதவீதத்தால் அதிகரித்தது; இது 1967/68ம் ஆண்டில் 303 இலட்சம் ரூபாய்களால் அல்லது 5.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மண்ணெண்ணெய், மோட்டார் திராவகம், திரவ எரிபொருள் ஆகியவற்றில் 384 இலட்சம் ரூபாய்களாலேற்பட்ட வருமான வீழ்ச்சி முக்கிய காரணமாகும். மாறாக, முன்னைய ஆண்டில் இப்பொருட்களின் மூலம் 467 இலட்சம் ரூபாய்கள் அதிகரிப்புக் காணப்பட்டது. இதற்குக் காரணம் இப்பொருட்களின் இறக்குமதி 1967/68ல் முந்திய ஆண்டினதைவிட வீழ்ச்சியடைந்திருந்தமையேயாகும். இதேபோலவே தானியவகை, கோதுமை மா (68 இலட்சம் ரூபாய்கள்), பருத்தி நூல், முறுக்கு நூல் (164 இலட்சம் ரூபாய்கள்) என்பனவற்றில் வீழ்ச்சியேற்பட்டது. போக்குவரத்து உபகரணங்கள், இயந்திரங்கள் என்பவற்றில் முறையே 104 இலட்சம் ரூபாய்களும் 29 இலட்சம் ரூபாய்களும் கொண்ட வீழ்ச்சிகள் ஏற்பட்டமைக்கு இறக்குமதிகளின் பெறுமானம் குறைந்ததும், இறக்குமதித் தீர்வைக்[3] குறைப்பும் காரணங்களாகும். இவ்வாறான முக்கிய வீழ்ச்சிகளின் ஒருபகுதி இறக்குமதித் தீர்வை வருவாயில் அதிகரிப்பை ஏற்படுத்திய சீனி (73 இலட்சம் ரூபாய்கள்), வன்பொருட்கள், கட்டடப் பொருட்கள் (53 இலட்சம் ரூபாய்கள்), கைத்தொழில் மூலப்பொருட்கள் (93 இலட்சம் ரூபாய்கள்) 'ஏனைய பொருட்கள்' (32 இலட்சம் ரூபாய்கள்) என்பவற்றால் எதிரீடுசெய்யப்பட்டது. இவற்றின் உயர்ச்சிக்கு இறக்குமதியளவில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

1967/68ல் இறக்குமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த உண்மையான (தற்காலிகமான) வருவாய் மேற்குறித்த ஆண்டின் மூலமதிப்பீட்டு வருவாயிலும்பார்க்க 658 இலட்சம் ரூபாய்களால் அல்லது 11.3 சதவீதத்தாற் குறைந்திருந்தது. இக்குறைவுக்கு முக்கிய காரணம் பின்வரும் விடயங்களில் எதிர்பார்க்கப்பட்ட வருவாயிலேற்பட்ட வீழ்ச்சியாகும். அவைவயான,

---

1. இறக்குமதிகள் ஏற்றுமதிகள் பற்றிய எண்தொகைகள் சுங்கத் தரவுகளையடிப்படையாகக் கொண்டுள்ளன.
2. உத்தரவுச் சீட்டு முறைக்குக் கீழுள்ள இறக்குமதிகளின் உத்தரவுச் சீட்டுக் கட்டணங்களும் உட்படும். சில உதவி இறக்குமதிகள் தவிர்ந்த ஏனையவற்றின் மீதான உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் 1968 மேயில் நீக்கப்பட்டன.
3. 1968 ஒகத்து 2னதும், 1968 ஒகத்து 9னதும் முறையே 14,813/2ஆம் இலக்க, 14,814/1ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

உத்தரவுச் சீட்டு முறையின்கீழ் அமைந்த இறக்குமதிகளின் உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் (336 இலட்சம் ரூபாய்கள்), போக்குவரத்து உபகரணங்கள் (204 இலட்சம் ரூபாய்கள்), புகையிலை, சிகரெட் (171 இலட்சம் ரூபாய்கள்), கைத்தொழில் மூலப் பொருட்கள் (101 இலட்சம் ரூபாய்கள்), இயந்திரங்கள் (68 இலட்சம் ரூபாய்கள்). இந்த வீழ்ச்சியில் ஒருபகுதி மண்ணெண்ணெய், மோட்டார் திராவகம், திரவ எரிபொருள் (153 இலட்சம் ரூபாய்கள்) வன் பொருட்கள், கட்டடப் பொருட்கள் (91 இலட்சம் ரூபாய்கள்), பருத்தி நூல், முறுக்கு நூல் (58 இலட்சம் ரூபாய்கள்) என்பனவற்றிலிருந்து கிடைத்த உயர்ந்த வருமானத்தால் ஓரளவு எதிரீடுசெய்யப்பட்டது. இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டண வருமானம் வீழ்ச்சியுற்றமைக்கு, 1968ம் ஆண்டு மே மாதம் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் புகுத்தப் பட்டபோது, அநேகமான இறக்குமதிகளின் உத்தரவுச் சீட்டுக் கட்டணம் நீக்கப்பட்டதே காரணமாகும்.

1968/69ம் நிதியாண்டில் இறக்குமதிகளிலிருந்து கிடைக்கும் வருவாய் 1967/68ம் ஆண்டிலும்பார்க்க 1,046 இலட்சம் ரூபாய்களால் அல்லது 20.4 சதவீதத்தால் வீழ்ச்சியடையுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. முக்கிய மாக இறக்குமதிக்கான உத்தரவுச் சீட்டுக் கட்டணம் (சில உதவி இறக்குமதி களின்மீது மட்டும் தற்போது விதிக்கப்படும்) 658 இலட்சம் ரூபாய்களால் மேலும் வீழ்ச்சியடைவதே இதக்குக் காரணமாகும். ஏனைய முக்கிய எதிர் பார்க்கப்படும் தீர்வைச் சேகரிப்பு வீழ்ச்சி, பின்வரும் விடயங்களிலாகும். அவையாவன கைத்தொழில் மூலப் பொருட்கள் (170 இலட்சம் ரூபாய்கள்), பருத்தி நூல், முறுக்கு நூல் (164 இலட்சம் ரூபாய்கள்), ஏனைய பொருட்கள் (110 இலட்சம் ரூபாய்கள்) ஆகும். இந்த வீழ்ச்சியின் ஒருபகுதி வருமான அதிகரிப்பையேற்படுத்துமென மதிப்பிடப்பட்டுள்ள மண்ணெண்ணெய், மோட்டார் திராவகம் (237 இலட்சம் ரூபாய்கள்), உரம் (69 இலட்சம் ரூபாய்கள்) என்பவற்றுல் ஓரளவு நிவர்த்தி செய்யப்படும்.

இவ்வாறு அரசிறையின் ஒரு மூலமான இறக்குமதித் தீர்வைகளில் வீழ்ச்சி யடையும் போக்கு அவதானிக்கப்பட்டுள்ளது. உண்மையில், 1966/67ம் ஆண்டில் அரசிறையில் 27.8 சதவீதத்திற்குக் காரணமாக இருந்த இறக்கு மதித்தீர்வைகள், 1967/68ம் ஆண்டில் 23.8 சதவீதமாகக் குறைந்ததுடன், 1968/69ல் 17.5 சதவீதமாக மேலும் வீழ்ச்சியடையுமென்று எதிர்பார்க்கப் பட்டுள்ளது. இதற்கு முக்கிய காரணம், 1968இல் ஆரம்பிக்கப்பட்ட இறக்குமதி வரிவிதிப்பு முறையில் சில மாற்றங்களேயாகும். இவற்றின் பலா பலன்களை 1967/68ல் இருந்து உணரக்கூடியதாகவிருக்கும்.

மிக முக்கிய மாற்றம் 1968ம் ஆண்டு மே மாதம் 6ந் தேதி அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் புகுத்தப்பட்டதேயாகும்.1 இந்தத் திட்டத்தின்கீழ் சகல இறக்குமதிகளுமுட்பட்ட விடயங்கள் மூன்று பட்டி யலில் வகுக்கப்பட்டன. அவையாவன, பட்டியல் 1, இது அரசாங்க உணவு இறக்குமதிகள், மருந்து வகைகள், உரம், பெற்ரோலியப் பொருட்கள் என்பனவற்றையும், அநுமதிப் பங்குகளுக்குட்பட்ட மருந்துகள், விவசாயக் கருவிகள் செய்வதற்கான இறக்குமதிகள் என்பனவற்றைக் கொண்டுள்ளது. பட்டியல் 2, அநுமதிப் பங்குக்கு உட்பட்ட இறக்குமதி உத்தரவுச் சீட்டுகளை வேண்டிநிற்கும் விடயங்களைக் கொண்டுள்ளது. பட்டியல் 3, கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ் இறக்குமதி செய்யப்படவேண்டிய (முக்கிய மான கைத்தொழில் மூலப் பொருட்களின்) விடயங்களைக் கொண்டுள்ளது. 2ம், 3ம் பட்டியலுக்கு உட்பட்ட எல்லா இறக்குமதிகளுக்கும் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் இச்சான்றிதழ், கேள்வி மூலம் மத்திய வங்கியால் விற்கப்பட்டது. 1968 யூன் 26 தொடக்கம் 100 ரூபாய்களுக்கான சான்றிதழ் ஒவ்வொன்றிற்கும் 44 ரூபாய்கள் என்ற நிலையான விலை விதிக்கப்பட்டது. இந்தச் சீர்திருத்தத் துடன் பெருந்தொகையான விடயங்களின்மீதான இறக்குமதித் தீர்வைகள் குறைக்கப்பட்டன. உதாரணமாக, கைத்தொழில் இயந்திரங்கள், உறுப்புக்

1. 1968 மே 5ன் 14,800/3ம் இலக்க அரசாங்க வர்த்தமானி. இத்திட்டத்தைப்பற்றிய மேலதிக விவரங்களுக்கு இவ்வாண்டறிக்கையின் 'வெளிநாட்டு வர்த்தகம்' என்ற பகுதியைப் பார்க்கவும்.

கள், உள்ளூர் உற்பத்திக் கைத்தொழிலுக்கான அடிப்படை மூலப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிகளுக்கு விதிக்கப்பட்ட தீர்வைகள் நீக்கப்பட்டன (எனினும், சில சந்தர்ப்பங்களில் விடயங்களை மேலதிகமாக இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்காக இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்பட்டன). அதே நேரத்தில் ''சிறப்பு உதவி உத்தரவுச் சீட்டுகளின்'' கீழ் அமைந்த இறக்குமதிகள் தவிர்ந்த இறக்குமதிகளுக்கான உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் நீக்கப்பட்டன.1

1968 ஒகத்து 3ந் தேதி தொடக்கம் இலங்கையின் சுங்கத் தீர்வைப் பட்டியல், பன்னாட்டு முறைமையாக ஏற்கப்பட்ட 'பிரசெல்ஸ்' தீர்வை இரு பெயர்த் தொகுதி முறைக்கு அமைய மாற்றப்பட்டது.2 இதன் விளைவாக, வரிவிதிப்பின் அடிப்படை, மொத்தச் சந்தைப் பெறுமானத்தின்படியன்றி கொ.கா.க.3 விலைப் பெறுமதியின் நியமிக்கப்படுவதான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புகள் குறைவடைந்தன.

எனினும், இறக்குமதித் தீர்வைகளின் பொதுவான வீழ்ச்சியை, அரசிறையின் புதிய மூலமான அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தினல் அதிகரிக்கும் வருவாயுடன் தொடர்புபடுத்தி நோக்குதல் வேண்டும். இந்தச் சான்றிதழின் விற்பனையாற் கிடைத்த தேறிய வருவாய் 1967/68ல் 770 இலட்சம் ரூபாய்களாகும். 1968/69ல் இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் அரசிறை 3,600 இலட்சம் ரூபாய்களாகும்.4 முன்னையது 1967/68ன் மொத்த அரசிறையில் 3.6 சதவீதத்திற்குக் காரணமாகவிருந்தது. அதே சமயத்திற் பின்னையது 1968/69ல் எதிர்பார்க்கப்படும் அரசிறையில் 15.4 சதவீதத்திற்குக் காரணமாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஏற்றுமதித் தீர்வைகள்

1967/68ல் இறக்குமதிமூலம் கிடைக்கும் அரசிறை, வீழ்ச்சியடைந்து காணப்பட்டபோது, ஏற்றுமதிகளின் மீதான வரிகளிலிருந்து கிடைத்த அரசிறை 889 இலட்சம் ரூபாய்களால் அல்லது 38.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. மாருக, 1966/67ல் இறக்குமதித் தீர்வையிலான அரசிறை 675 இலட்சம் ரூபாய்களால் அல்லது 14.2 சதவீதத்தால் உயர்ந்திருந்த போது, ஏற்றுமதித் தீர்வையாலான அரசிறை 258 இலட்சம் ரூபாய்களால் அல்லது 10.1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. 1967/68ல் ஏற்றுமதிகளாலான அரசிறையின் உண்மையான அதிகரிப்புக்கு, முக்கிய மூன்று ஏற்றுமதிகளிலதிகரித்த அரசிறையே பிரதான காரணமாகும்.

1967/68ல் தேயிலை ஏற்றுமதியாற் கிடைத்த அரசிறை 281 இலட்சம் ரூபாய்களால் அல்லது 13.7 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்புநோக்கும் போது, முன்னைய ஆண்டில் 28 இலட்சம் ரூபாய்கள் அல்லது 1.4 சதவீதம் மட்டுமே அதிகரிப்புக் காணப்பட்டது. இதில் அளவுப்படியான ஏற்றுமதித் தீர்வைச் சேகரிப்புகள் (1966/67ல் 76 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்து, 1,580 இலட்சம் ரூபாய்களாயிருந்தது) 193 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து 1,773 இலட்சம் ரூபாய்களையடைந்தன. இதற்கு ஏற்றுமதி அளவிலேற்பட்ட 26 இலட்சம் இருத்தல்5 அதிகரிப்பும், 1967 நவெம்பரில் ஏற்றுமதித்தீர்வை இருத்தலுக்கு 5 சதத்திலிருந்து 40 சதமாக6 உயர்ந்தமையுங் காரணங்களாகும்.

பெறுமான விகிதத் தேயிலை வரியிலிருந்து கிடைத்த அரசிறை 1966/67ல் 103 இலட்சம் ரூபாய்களால் உயர்வடைந்து 472 இலட்சம் ரூபாய்களையெய்தி,

1. பண்டவுதவிகளின்கீழான கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டுகளுக்குட்பட்ட இறக்குமதிகளும் பன்னாட்டு நிறுவனங்களின் கடன்களினல் நிதியீட்டப்பட்ட இறக்குமதிகளும் (இவையிரண்டும் அ.செ.உ.சா. திட்டத்திலிருந்து பெறப்பட்டவை. ஆனல் விசேட உத்தரவுச் சீட்டுக்கள் தேவையானவை) பெறுமான நியதிப்படி முறையே 15 சதவீத, 20 சதவீதத் தீர்வைகளுக்கு உட்படுவன.
2. 1968 ஒகத்து 2ன் 14,813/2 இலங்கை அரசாங்க வர்த்தமானி.
3. சுங்கத்தீர்வை முறையை மேலும் மாற்றியமைப்பதுபற்றி ஒரு குழு தற்பொழுது பரிசிலனை செய்கின்றது. எனவே, வருங்காலத்தில் மேலும் மாற்றங்கள் ஏற்படக்கூடும்.
4. தற்போதைய போக்கின்படி 1968/69ல் 2,700 இலட்சம் ரூபாய்கள்கொண்ட தொகையே கிடைக்கக்கூடுமெனத் தோன்றுகின்றது.
5. 1968 ஏப்பிறலில் ஒரு மாதம்வரை நீடித்த வேலைநிறுத்தத்தின் பயனல் கையாளப்படுவது பாதிக்கப்பட்டபோதிலும் இது ஏற்பட்டது.
6. 1967 நவெம்பர் 22ந் தேதிய 14,775/17 இலங்கை அரசாங்க வர்த்தமானி.

1967/68ல் மேலும் 88 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, 560 இலட்சம் ரூபாய்களையடைந்தது. இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணம் 1967 நவெம்பரில் ஏற்பட்ட ரூபாவின் நாணயப் பெறுமதிக் குறைப்பின் பின்னர், ஏலங்களிற் தேயிலையின் ரூபாய் விலைகளிலேற்பட்ட முன்னேற்றங்களாகும். 1967/68ல் தேயிலையிலிருந்து கிடைத்த அரசிறையின் அளவு 1968/69ல் தொடர்ந்து நிலவுமென மதிப்பிடப்பட்டுள்ளது. தேயிலையின் விலைகள், வீழ்ச்சியடைந்தாலும், தேயிலை ஏற்றுமதியளவு உயர்வடையும் என்ற மதிப்பீடே இதற்குக் காரணமாகும்.

இரப்பரின்[1] மீதான ஏற்றுமதித் தீர்வைச் சேகரிப்பு 1966/67ல்[2] க.ஏ.பெ. விலை 11 சத (10 சதவீதம்) வீழ்ச்சியடைந்ததால், 185 இலட்சம் ரூபாய்களினாற் குறைவடைந்தது. இது ஏற்றுமதி அளவிலேற்பட்ட 268 இலட்சம் இருத்தல் அதிகரிப்பை மேலதிகமாக எதிரீடுசெய்தது. 1967/68ல் மேலும், க.ஏ.பெ. விலையில் 11 சதம் (11 சதவீதம்) வீழ்ச்சியடைந்தாலும், இரப்பரின்மீதான ஏற்றுமதித் தீர்வைச் சேகரிப்புக்களில் 115 இலட்சம் ரூபாய்கள் அதிகரிப்புக் காணப்பட்டது. இதற்கு, ஏற்றுமதி அளவில் 48 இலட்சம் இருத்தல்[3] அதிகரித்தமையும், இருத்தலொன்றுக்கு 3 சதம் சிறப்புத் தீர்வை விதிக்கப்பட்டதும் (1967 நவெம்பர் தொடக்கம்) 1968 மே தொடக்கம் விலைகளிலேற்பட்ட பொதுவான முன்னேற்றமும் காரணங்களாகும். 1968/69ல் இரப்பரின் ஏற்றுமதிமூலம் கிடைக்கும் அரசிறை 11 இலட்சம் ரூபாய்களால் (11 சதவீதம்) குறைவடையும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு 1968ம் ஆண்டு நடுப்பகுதியில் உயர்மட்டத்தை அடைந்த விலை, பின்னர் வீழ்ச்சியடையுமென்று எதிர்பார்க்கப்படுவதே காரணமாகும்.

1967/68ல் ஏற்றுமதித் தீர்வைகள்மூலம் கிடைத்த அரசிறையில் மிகக் கணிசமான அதிகரிப்பு தெங்குப் பொருட்களிலிருந்து (சாய்வுப் பிரமாண முறையில் வரி விதிக்கப்பட்டவை) கிடைத்தது. இது, 483 இலட்சம் ரூபாய்களால் அல்லது 243.9 சதவீதத்தால் உயர்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டில் அரசிறையில் 112 இலட்சம் ரூபாய்கள் அல்லது 36.0 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. மீளப் பார்வையிடப்படும் ஆண்டில் ஏற்பட்ட இவ்வதிகரிப்புக்கு, 1967 நவெம்பரில் ரூபாவின் நாணயப் பெறுமதிக் குறைப்பினை[4] அடுத்து உடனடியாகத் தெங்குப் பொருட்களின்மீதான சாய்வுப் பிரமாண ஏற்றுமதித் தீர்வையிலேற்பட்ட அதிகரிப்பும், ஏற்றுமதி விலைகளிலும், ஏற்றுமதி அளவிலும் ஏற்பட்ட பொதுவான முன்னேற்றமும், காரணங்களாகும். 1967/68ற் கொப்பறாவிலிருந்து கிடைத்த அரசிறை 50 இலட்சம் ரூபாய்களால் அல்லது 138.9 சதவீதத்தால் அதிகரித்தது. மாறாக, முன்னைய நிதியாண்டில் இது 33 இலட்சம் ரூபாய்கள் அல்லது 47.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இந்த அதிகரிப்புக்குக் காரணம் ஏற்றுமதி அளவு 5.7 சதவீதத்தாலும், சராசரி ஏற்றுமதி விலை 37.1 சதவீதத்தாலும் அதிகரித்தமையாகும். தேங்காய்த் துருவலிலிருந்து கிடைத்த தீர்வைச் சேகரிப்புக்கள் 236 இலட்சம் ரூபாய்களால் அல்லது 406.9 சதவீதத்தாற் கூர்மையாக உயர்வடைந்தன. முன்னைய ஆண்டில் இது 28 இலட்சம் ரூபாய்களால் அல்லது 32.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வதிகரிப்புக்குக் காரணம் ஏற்றுமதியளவு 35.3 சதவீதமும், சராசரி ஏற்றுமதி விலை 77.8 சதவீதமும் உயர்வடைந்ததாகும். 1967/68ல் ஏனைய பிரதான தெங்குப் பொருட்கள் தேங்காயெண்ணெய் என்பவற்றின் தொகை அதிகரித்ததால், அரசிறைச் சேகரிப்பு 195 இலட்சம் ரூபாய்களால் அல்லது 196.9 சதவீதத்தால் அதிகரிப்பு அடைந்தது. முன்னைய ஆண்டில் 51 இலட்சம் ரூபாய்கள் அல்லது 34.2 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. இச்சந்தர்ப்பத்திற் சராசரி க.ஏ.பெ. விலையிலேற்பட்ட 47.1 சதவீத அதிகரிப்பு ஏற்றுமதியளவின் 18.9 சதவீத வீழ்ச்சியை எதிரீடுசெய்தது.

1. ஏற்றுமதித் தீர்வைகள் இலண்டனிலுள்ள வாராந்தச் சராசரி விலைகளின் படியான சாய்வுப் பிரமாண அடிப்படையில் உள்ளதாகும். அத்துடன் 1967 நவெம்பர் 23 தொடக்கம் இருத்தலுக்கு 3 சதமான தீர்வையும் விதிக்கப்படுகிறது.
2. 1966/67ல் மீளளிப்புகளினால் அரசிறையில் 5 இலட்சம் ரூபாய்கள் கொண்ட எதிரிடையான தொகை காணப்பட்டது.
3. 1968 ஏப்பிறலில் ஒரு மாதம்வரை நீடித்த வேலைநிறுத்தத்தினால் பொருட்கள் கையாளப்படுவது பாதிக்கப்பட்டபோதிலும் இது ஏற்படாது.
4. 1967 நவெம்பர் 22ஆந் தேதிய இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,775/17. 1967 ஆண்டறிக்கையின் பக்கம் 174-175 பார்க்கவும்.

### உள்நாட்டுப் பொருள் வரி

1966/67ல் 368 இலட்சம் ரூபாய்கள் அல்லது 11.6 சதவீதத்தால் அதிகரிப்பு அடைந்த உள்நாட்டுப் பொருள் வரி 1967/68ல் மேலும் 388 இலட்சம் ரூபாய்களால் அல்லது 10.9 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதற்கு, முக்கிய மூலங்களாகிய சாராய விற்பனை, உள்நாட்டு உற்பத்திக் குடிவகை[1] மீதான தீர்வை, புகையிலை வரி, மொத்த விற்பனை வரி, என்பன வற்றிலிருந்து கிடைத்த வருமானத்தின் அதிகரிப்புக்கள் பிரதான காரணங் களாகும். உள்நாட்டுப் பொருள் வரி 1968/69ல் மேலும் 392 இலட்சம் ரூபாய்களால் அல்லது 10 சதவீதத்தால் உயர்வடையுமென எதிர்பார்க்கப் படுகின்றது. இதற்குக் காரணம் அரசிறைக்குப் புகையிலை வரியும், மொத்த விற்பனை வரியும் முறையே 266 இலட்சம் ரூபாய்கள், 128 இலட்சம் ரூபாய் களாலும், அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டதாகும்.

### சாராய விற்பனையிலிருந்து கிடைத்த இலாபம்

1966/67ல் 38 இலட்சம் ரூபாய்கள்[2] அல்லது 3.2 சதவீத அதிகரிப்பைக் காட்டிய, சாராய விற்பனையிலிருந்து கிடைத்த இலாபங்கள் 1967/68ல் 32 இலட்சம் ரூபாய்களால் அல்லது 2.9 சதவீதத்தால் உயர்ந்தன. உள் நாட்டிலே தயாரித்த குடிவகைமீதான தீர்வை 1966/67ல் 20 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியடைந்து, 1967/68ல் 13 இலட்சம் ரூபாய்களால் உயர்வடைந்தது. உயர்வுகளுக்குக் காரணம் இவ்வாண்டு சாராயத்தினதும், ஏனைய குடிவகையினதும் விற்பனைகள் அதிகரித்தமையேயாகும். சாராயத் தைப் பொறுத்தவரையில், 1968 ஓகத்து 3ந் தேதியிலிருந்து[3] தெங்குச் சாராயத்தின் விலை போத்தலொன்றிற்கு 2 ரூபாய்களால் அதிகரித்தமையும் காரணமாகும். 1968/69ல் சாராய விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபங் கள் 10 இலட்சம் ரூபாய்களாற் சிறிது உயர்வடையுமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.

### புகையிலை வரி

மறுபக்கத்திற் புகையிலை வரிமூலம் கிடைத்த அரசிறை குறிப்பிடத் தக்க அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 1966/67ல் 188 இலட்சம் ரூபாய் களால் அல்லது 15.7 சதவீதத்தால் உயர்வடைந்த இவ்வரசிறை 1967/68ல் 296 இலட்சம் ரூபாய்களால் அல்லது 21.3 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதற்குக் காரணம் சிகரெட், புகையிலையின் விற்பனைகள் உயர்வடைந்ததும், 1967 யூலை 26ல்[4] இருந்து புகையிலைமீதான உள்நாட்டுப் பொருள் வரி இறாத்தலொன்றுக்கு 4 ரூபாய் 50 சதத்தால் உயர்த்தப்பட்டதுமாகும். இதன் முழுத் தாக்கம், 1967/68ம் நிதியாண்டுக் காலத்தில் உணரப்பட்டது.

முன்னைய ஆண்டறிக்கைகள் அரசிறையின் ஒரு மூலமாகப் புகையிலை வரி வளர்ச்சியடையும் முக்கியத்துவத்தைக் காட்டியுள்ளன. 1967/68ல் இப் போக்கு தொடர்ந்து நிலவியது. 1963/64 முதல் 1967/68 வரையுள்ள 5 ஆண்டுக் காலப்பகுதியில் தேயிலை வரியிலிருந்து கிடைத்த அரசிறை ஆண் டொன்றுக்கு 16 சதவீதத்தால் (கூட்டு) அதிகரித்தது. புகையிலையிலிருந்து கிடைக்கும் அரசிறை 1968/69ல் 266 இலட்சம் ரூபாய்களால் அல்லது 15.8 சதவீதத்தால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

### மொத்த விற்பனை வரி

அண்மைக் காலங்களில் அதிகரிப்படைந்துவரும் மற்றுமோர் அரசிறை மூலம், மொத்த விற்பனை வரியாகும். 1965/66ல் 43 இலட்சம் ரூபாய்

---

1. உள்நாட்டுற்பத்திக் குடிவகை என்பது, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சாராயம் தவிர்ந்த குடி வகைகளான பியர், ஜின், பிரண்டி, றம் என்பவையாகும்.
2. அரசாங்க ஏடுகளின்படி, இவ்விடயத்தின்மீது கிடைத்த அரசிறை 1966/67ல் 112 இலட்சம் ரூபாய்களாற் குறைவுற்றிருந்தது. இது 1965/66 அரசிறைக் கணக்கிற் கடந்தகால இலாபங்க ளென வரவுவைக்கப்பட்ட தொகை 150 இலட்சம் ரூபாய்களால் மிகைத்துக் கூறப்பட்டமை யினாலாகும். இத் தொகையைத் தேற்றிக் கணக்கிடின், ரூபா 38 இலட்சம்கொண்ட அதிகரிப்புக் காணப்படும். 1967ன் ஆண்டறிக்கையைப் பார்க்கவும்.
3. 25-7-1967ன் 14,758/6 இலங்கை அரசாங்க வர்த்தமானி.
4. 25-7-1967ன் 14,758/6 இலங்கை அரசாங்க வர்த்தமானி.

களாலும், 1966/67ல் 331 இலட்சம் ரூபாய்களாலும் அல்லது 84.7 சதவீதத்தாலும் அதிகரிப்படைந்த இவ்வரி மேலும் 1967/68ல் 70 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9.7 சதவீதத்தால் உயர்வடைந்தது. சென்ற ஆண்டின் விரைவான அதிகரிப்புக்குக் காரணம் விகிதத்திலும், வரியின் வியாபாரத்திலும் ஏற்பட்ட அதிகரிப்பாகும்.1 1967/68ல் ஏற்பட்ட அதிகரிப்புக்குக் காரணம் இவ்வரிக்குப் பொறுப்பாகவுள்ள நிறுவனங்களில் உயர்மட்டச் செயல்பாடும், 1968ல் விதிக்கப்பட்ட வரி விகிதங்களால் வியாபாரத்திலேற்பட்ட விரிவாக்கமுமாகும். 1968/69ம் நிதியாண்டில் முக்கியமாக விகிதங்களின் அதிகரிப்பினுலும், வியாபாரத்தின் விரிவாக்கத்தினுலும்2 அரசிறை மேலும் 128 இலட்சம் ரூபாய்களால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு வரியிலிருந்து கிடைத்த இறுதி (தற்காலிகமான) தொகை விவரங்களை 1967/68ம் ஆண்டிற்கான மூலமதிப்பீடுகளுடன் ஒப்பிட்டபோது, அரசிறையில் 62 இலட்சம் ரூபாய்கள் அதிகரிப்புக் காணப்பட்டது. இதற்குக் காரணம், மொத்த விற்பனை வரியும், புகையிலை வரியும் எதிர்பார்க்கப்பட்ட வருவாயிலிருந்து முறையே 82 இலட்சம் ரூபாய்களாலும், 34 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தமையேயாகும். அத்துடன் உள்நாட்டில் உற்பத்தி செய்த குடிவகை 21 இலட்சம் ரூபாய்களால் குறைவுற்றது.

மொத்தமாகக் கூறின், 1967/68ன் மொத்த அரசிறையில், 18.3 சதவீதத்திற்கு உள்நாட்டுப் பொருள்வரி காரணமாக இருந்தது. மாறுக, இது, 1966/67ல் 18.2 சதவீதமாகவும், 1965/66ல் 17.4 சதவீதமாகவும் இருந்தது. 1968/69ல் இவ் விகிதம் 18.5 சதவீதமென மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த அரசிறையிற் புகையிலை வரியின் பங்கு 1966/67ன் 7.1 சதவீதத்திலிருந்து 1967/68ல் 7.8 சதவீதத்திற்கு உயர்வடைந்ததுடன், அதன் பங்கு 1968ல் 8.3 சதவீதத்துக்கு உயர்வடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த விற்பனை வரியின்ஒத்த எண்தொகைகளான 3.7 சதவீதம், 3.9 சதவீதம் ஆகியவையும், உயர்வடையும் போக்கைக் காட்டுகின்றன. சாராய விற்பனைகளிலிருந்து கிடைக்கும் இலாபங்களினதும், உள்நாட்டிலுற்பத்திசெய்த குடிவகையின் மீதான தீர்வையினதும் வீழ்ச்சியடையும் விகிதாச்சாரங்களுடன் ஒப்பிடும்போது, புகையிலை வரியும் மொத்த விற்பனை வரியும் எதிர்காலத்தில் அரசிறை எழுச்சியை வழங்கத்தக்க மூலங்களாகத் தோன்றுகின்றன.

### வருமான வரி, பூதல் வரி, சொந்த வரி

1966/67ல் 346 இலட்சம் ரூபாய்கள் அல்லது 12.6 சதவீதத்தால் குறிப்பிடக்கூடிய அளவுக்கு உயர்ந்த வருமானவரி மூலம் கிடைத்த வரவுகள் 1967/68ல் 59 இலட்சம் ரூபாய்களால் அல்லது 1.9 சதவீதத்தாற் சிறிதளவில் உயர்வடைந்தன. எனவே, கூடிய திறன்வாய்ந்த கணிப்பினுலும், வரித் தவிர்ப்பு எதிர்நடவடிக்கையினுலும், சென்ற ஆண்டில் அடையப்பெற்ற அரசிறையின் உயர்மட்டத்தை இவ்வாண்டிலும் நிலைநாட்ட முடிந்தது. இந்த அதிகரிப்புக்குக் கடந்த காலத் தணிப்புக்களை மீளப் பரிசோதித்துப் பெருந்தொகையான வரி செலுத்துவோர்மீது விதித்த கூடுதலான வரிகளும், புதிய வரிசெலுத்துவோர் பதிவுசெய்யப்பட்டமையும், மாதாந்த அறவீடுகள் (வரி கணிக்கப்படுமுன்னரே செய்யப்பட்டு) அரசிறையினுள் வரவு வைக்கப்பட்டமையும், சென்றுண்டிலும்பார்க்க, வியாபார வருவாய் அதிகரித்தமையுங் காரணங்களாகும். அதே வேளையில், பூதல் வரியும், சொந்த வரியும் (அதாவது செல்வ வரி, நன்கொடை வரிகள்), 1967/68ற் சிறிதளவு அதிகரிப்பைக் காட்டின.

1968/69ல் முக்கியமாக இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் குறைவடையுமென்று மதிப்பிடப்பட்டுள்ளதால், வருமான வரிச் சேகரிப்புகள் 409 இலட்சம் ரூபாய்களால் அல்லது 12.9 சதவீதத்தால் வீழ்ச்சியடையுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. சொந்த வரி 24 இலட்சம் ரூபாய்களால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. மூலமதிப்பீடுகளுடன் ஒப்பிடும்

---

1. 1967ன் ஆண்டறிக்கையைப் பார்க்கவும்.
2. மேலும் விவரங்களுக்குப் ''புதிய அரசிறை ஆலோசனைகள்'' என்ற பிரிவைப் பார்க்கவும்.

போது, 1967/68ம் ஆண்டிற்கான வருமான வரியின் உண்மையான (தற்காலிகமான) எண்தொகைகள் 459 இலட்சம் ரூபாய்கள்கொண்ட அதிகரிப்பைக் காட்டியிருக்கையில், சொந்தவரி, 34 இலட்சம் ரூபாய்கள்கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. வருமானவரி வரவுகளின் மாற்றத்திற்கான காரணங்கள் மேலே சொல்லப்பட்ட காரணங்களேயாகும்.

1967/68ம் ஆண்டின் மொத்த அரசிறையின் 15.3 சதவீதத்திற்கு வருமான வரி, பூதல் வரி, சொந்த வரி என்பவற்றின் வரவுகள் காரணமாக இருந்தன. ஒப்புநோக்கும்போது, 1966/67ல் இவை 17.1 சதவீதமாக இருந்தன. இதில் வருமான வரி மட்டும் 1967/68ல் 14.3 சதவீதத்திற்கும், 1966/67ல் 15.9 சதவீதத்திற்கும் காரணமாகவிருந்தது. இவ்வீழ்ச்சிக்கான காரணம் வருமான வரியானது ஏனைய அதிகரிக்கும் அரசிறை மூலங்களிலும் பார்க்க ஒப்பியல்பிற் குறைவாகவே வளர்ச்சியடைந்துவருகின்றமையாலாகும்.

### ஏனைய வருமானம்

1966/67ல் 24 இலட்சம் ரூபாய்களால் உயர்வடைந்த தேசிய லொத்தரிலிருந்து கிடைத்த வரவுகள் 1967/68ல் 35 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளன. அத்துடன் 1968/69ல் மேலும் 26 இலட்சம் ரூபாய்களால் உயர்வடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1967/68ல் ஏற்பட்ட அதிகரிப்புக்கு முக்கிய காரணம் அவ்வாண்டு அதிக பரிசுகள்கொண்ட இரு புதிய சுவீப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டமையேயாகும்.

1967, சனவரியில் ஒலிபரப்புத் திணைக்களம், அரசாங்கக் கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டதன் விளைவாக அதன் வருவாய்களின் ஒரு பங்கு விடுபட்டபோதிலும், அரசாங்க வர்த்தக முயற்சிகளின் மொத்த வருவாய்கள் 1966/67ல் 28 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. 1967/68ல் வருவாய்கள் 232 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9.3 சதவீதத்தாற் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்வடைந்தன. இதற்குள்ள முக்கிய காரணம் மின்சாரத் திணைக்களம் (99 இலட்சம் ரூபாய்கள்), தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம் (77 இலட்சம் ரூபாய்கள்), புகையிரதத் திணைக்களம் (46 இலட்சம் ரூபாய்கள்) என்பனவற்றிலிருந்து கிடைத்த அதிகரித்த வருவாய்களாகும். 1968/69ல் மொத்த வரவுகள் 73 இலட்சம் ரூபாய்களால் மட்டும் உயருமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணங்கள் மின்சார வருவாயின் 90 இலட்சம் ரூபாய்கொண்ட அதிகரிப்பையும், தபால் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம், கப்பற்றுறைகள், துறைமுகங்கள் என்பனவற்றிலிருந்து கிடைக்கும் சிறிய அதிகரிப்புக்களையும், ஓரளவு எதிரீடுசெய்து, புகையிரதத் திணைக்கள வருவாயில் 24 இலட்சம் ரூபாய்கள்கொண்ட வீழ்ச்சி ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றமையாகும்.

### அரசாங்கச் செலவு

1967/68ம் நிதியாண்டுக் காலத்தில் அரசாங்கத்தின் மொத்தச் செலவு 28,721 இலட்சம் ரூபாய்களாகும். இது வாக்களிக்கப்பட்ட செலவாகிய 29,006 இலட்சம் ரூபாய்களையும், தேசிய அபிவிருத்தி ஒதுக்குநிதியிலிருந்து அறவிடப்படவேண்டிய புறக்கணிக்கத்தக்க அளவுடைய ஒரு செலவுத் தொகையையும்1, முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளினுலேற்பட்ட 285 இலட்சம் ரூபாய்கள்கொண்ட வரவினைத் தேற்றியபின்னுள்ள தொகையையும் கொண்டதாகும். 1960/61 முதல் 1967/68 வரையுள்ள ஆண்டுகளுக்கான இவ்வகைச் செலவுகளின் விவரங்களும், 1968/69ம் ஆண்டுக்காய மதிப்பீடுகளும் கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 3ல் கொடுக்கப்பட்டுள்ளன.

---

1. பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தினது செலவுகள் ஒரு விசேட ஒதுக்கிலிருந்து செலவிறுக்கப்பட்டன.

# அட்டவணை II (ஊ) 3

## அரசாங்கச் செலவு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செலவு விடயங்கள் | 1960/61 | 1961/62 | 1962/63 | 1963/64 | 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 மூல மதிப் பீடுகள் | 1967/68 தற் காலிக மான | 1968/69 மூல மதிப் பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மொத்த வாக்களிக்கப்பட்ட செலவு ... ... | 1,960.7 | 2,060.3 | 1,998.7 | 2,236.6 | 2,274.6 | 2,388 | 2,520.0 | 2,861.7 | 2,900.6 | 2,229.4 |
| (அ) மீ. வாக்குப் பணங்களிலிருந்து அறவிடும் செலவு (அ) | 1,540.8 | 1,580.7 | 1,596.4 | 1,834.1 | 1,803.4 | 1,860.5 | 1,895.3 | 2,079.2 | 2,186.2 | 2,356.7 |
| (1) நடைமுறைச் செலவு (ஆ) ... ... ... | 1,471.3 | 1,498.1 | 1,534.0 | 1,753.6 | 1,731.9 | 1,792.0 | 1,818.5 | 1,999.6 | 2,107.7 | 2,284.0 |
| (2) மீண்டெழும் வாக்குகளின் மூலதன விடயங்கள் ... | 69.5 | 82.6 | 62.4 | 80.5 | 71.5 | 68.5 | 76.8 | 79.7 | 78.4 | 72.7 |
| (ஆ) மூலதன வாக்குகளிலிருந்து அறவிடும் செலவு (இ) ... | 419.9 | 480.6 | 402.3 | 402.5 | 471.2 | 528.4 | 624.7 | 782.5 | 714.4 | 872.7 |
| 2. தேசிய அபிவிருத்தி ஓதுக்கு நிதியிலிருந்து அறவிடும் செலவு | 1.5 | 0.7 | 0.3 | 0.2 | 0.1 | ... | ... | ... | ... | ... |
| 3. மொத்த மூலதனச் செலவு (ஈ) (3=I அ (II) + I (ஆ) + 2) | 490.9 | 563.9 | 465.0 | 483.2 | 542.8 | 596.9 | 701.5 | 862.2 | 792.8 | 945.4 |
| (அ) உண்மைச் சொத்துக்களின் கொள்ளல், ஆக்கல், பராமரிப்பு ... ... ... | 449.8 | 477.7 | 461.0 | 458.7 | 515.9 | 563.6 | 667.9 | 841.1 | 766.4 | 913.8 |
| (1) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கும், முக நிலையங்களுக்குமான நன்கொடைகள் ... ... | 115.0 | 101.5 | 74.0 | 66.8 | 122.5 | 168.8 | 232.1 | 276.4 | 269.0 | 316.9 |
| (2) உள்ளூர் ஆட்சி சேவைகளுக்கான நன்கொடைகள் ... | 8.1 | 8.8 | 8.4 | 8.4 | 8.3 | 11.6 | 13.7 | 14.7 | 13.1 | 14.6 |
| (5) மத்திய அரசின் மூலதன ஆக்கம் ... ... | 326.7 | 367.4 | 378.6 | 383.5 | 385.1 | 382.2 | 422.1 | 550.1 | 484.3 | 582.3 |
| (ஆ) நிதிச் சொத்துக்களைக் கொள்ளல் ... ... | 41.1 | 86.2 | 4.0 | 24.5 | 26.9 | 34.6 | 33.6 | 21.1 | 26.4 | 31.6 |
| (1) அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான கடன்கள் ... | 31.1 | 75.7 | 1·0 | 20.0 | 21.9 | 29.3 | 28.6 | 16.1 | 19.9 | 23.6 |
| (2) உள்ளூர் ஆட்சிச் சபைகளுக்கான கடன்கள் ... | 10.0 | 10.5 | 3.0 | 4.5 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 | 6.5 | 8.0 |
| 4. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் மீதான தேறிய வருவாய்கள் (—) அல்லது கொடுப்பனவுகள் (உ) ... | 14.2 | 14.6 | –13.7 | –16.1 | –27.6 | –10.4 | 41.6 | வி. கி. | 28.5 | வி. கி. |
| 5. மொத்தச் செலவு (ஊ) ( 5 = 1 + 2 + 4 ) ... ... | 1,976.4 | 2,076.6 | 1,985.3 | 2,220.7 | 2,246.8 | 2,399.3 | 2,561.6 | 2,861.7 | 2,872.1 | 9.432 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) அட்டவணைII (ஊ) 1இன் விடயம் 1 ஆ (1) ஐப் பார்க்கவும்.
(ஆ) பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 22ன் விடயம் 22ஐப் பார்க்கவும்; நடைமுறைச் செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு இவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ளது.
(இ) அட்டவணை II (ஊ) 1ன் விடயங்கள் 1 (ஆ) தொடக்கம் (—) வரைக்குமுள்ள மொத்தம்.
(ஈ) பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 22ன் விடயம் 23ப் பார்க்கவும்; மூலதனச் செலவின் தொழிற்பாட்டுப் பகுப்பு இவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ளது.
(உ) அட்டவணை II (உ) 17ன் விடயங்கள் 1 ஆ 4-7 (—) வரைக்கு முள்ள மொத்தம்.
(ஊ) அட்டவணை II (ஊ) 1ன் விடயம் 1 (ஆ) உம் பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 22ன் விடயம் 27ம்.

முன்னைய ஆண்டாகிய 1966/67ஐக் காட்டிலும், இவ்வாண்டுச் செலவு 3,105 இலட்சம் ரூபாய்களால் அல்லது 12.1 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு, வாக்களிக்கப்பட்ட செலவு 3,806 இலட்சம் ரூபாய்களால் அல்லது 15.1 சதவீதத்தால், உயர்வடைந்தமையும், முற்பணக் கணக்குகளிலிருந்து கிடைத்த தேறிய வரவானது முன்னைய ஆண்டிற்குரிய தேறிய கொடுப்பனவாகிய, 416 இலட்சம் ரூபாய்களுக்கு மாறாக, இவ்வாண்டில் 285 இலட்சம் ரூபாய்கள்கொண்ட தேறிய வரவாக அமைந்தமையும் முக்கிய காரணங்களாகும். வாக்களிக்கப்பட்ட செலவிலேற்பட்ட குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பெரும்பாலும், மீண்டெழும் வாக்குப்பணங்களிலறவிடப்படவேண்டிய செலவிலேற்பட்ட 2,909 இலட்சம் ரூபாய்கள் அல்லது 15.3 சதவீத அதிகரிப்பினாலாகும்.[1] இது அரசாங்க ஊழியர்களுக்கும், இளைப்பாறற் சம்பளம் பெறுவோருக்கும் இடைக்காலப் படிகள் செலுத்தப்பட்டதாலும், தேறிய உணவு மானியத்தின் அதிகரிப்பினாலுமாகும். அதே வேளையில் மூலதன வாக்குப் பணங்களில் அறவிடப்படவேண்டிய செலவு[2] 897 இலட்சம் ரூபாய்களால் அல்லது 14.4 சதவீதத்தால் அதிகரித்தது.

மூல வரவுசெலவுத் திட்டப் பிரேரணைகளுடன் ஒப்பிடும்போது, 1967/68ல் உண்மையான (தற்காலிகமான) செலவு 124 இலட்சம் ரூபாய்கள், அல்லது 0.4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இது, வாக்களிக்கப்பட்ட செலவு 409 இலட்சம் ரூபாய்களால் உயர்வுற்றமை காரணமாகும். எனினும், இது முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய வரவுகளினால் ஓரளவு எதிரீடுசெய்யப்பட்டது. வாக்களிக்கப்பட்ட செலவிலேற்பட்ட அதிகரிப்பு மீண்டெழுஞ் செலவு 1,090 இலட்சம் ரூபாய்களால் அல்லது 5.2 சதவீதத்தால் அதிகரித்தமையாலும், மூலதன வாக்குப் பணங்களில் அறவிடப்படவேண்டிய செலவு 681 இலட்சம் ரூபாய்களால் அல்லது 8.7 சதவீதத்தாற் குறைவடைந்தமையாலும் ஆகும்.

1968/69 நடைமுறை நிதியாண்டுக்குரிய செலவின் மூல (வரவுசெலவுத் திட்ட) மதிப்பீடுகளாகிய[3] 32,294 இலட்சம் ரூபாய்கள், 1967/68ம் ஆண்டின் உண்மையான செலவைக்காட்டிலும் மேலும் 3,573 இலட்சம் ரூபாய்கள் அல்லது 12.4 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றன. இதற்குள்ள காரணம், மீண்டெழும் வாக்குப் பணங்களில் 1,706 இலட்சம் ரூபாய்கள் அல்லது 7.8 சதவீத அதிகரிப்பையும், மூலதன வாக்குப் பணங்களில் 1,583 இலட்சம் ரூபாய்கள் அல்லது 22.2 சதவீத அதிகரிப்பையுங்கொண்ட வாக்களிக்கப்பட்ட செலவில் எதிர்பார்க்கப்பட்ட 3,288 இலட்சம் ரூபாய்கள் அல்லது 11.3 சதவீதங்கொண்ட அதிகரிப்பேயாகும்.

அண்மைக் காலங்களில் அரசாங்கச் செலவு குறிப்பிடத்தக்களவு அதிகரிப்படைந்திருப்பது அவதானிக்கற்பாலது. 1966/67ம் நிதியாண்டுடன் முடிவடையும் பத்து நிதியாண்டுக் காலங்களில், 5.8 சதவீத சராசரி விகிதத்தில் (கூட்டு) அதிகரித்திருந்த மொத்தச் செலவானது, 1967/68ல் 12.1 சதவீதத்தால் அதிகரித்திருப்பதுடன், 1968/69ல் மேலும் 12.4 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்த அதிகரிப்பானது மீண்டெழுஞ் செலவிலும், மூலதன வாக்குப் பணச் செலவிலும் உண்டான அதிகரிப்புக்களினால் ஏற்பட்டதாகும். இவற்றில், முன்னையது மேற்குறித்த பத்தாண்டு காலங்களில் 5.7 சதவீத சராசரி விகிதத்தாலும், 1967/68ல் 15.3 சதவீதத்தாலும் அதிகரித்ததுடன், 1968/69ல் 7.8 சதவீதத்தால் அதிகரிப்படையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மறுபுறத்தில், மூலதன வாக்குப் பணங்களுக்குரிய செலவு 1966/67ம் ஆண்டுவரை 12.4 சதவீத சராசரிச் சதவீதத்தாலும், 1967/68ல் 14.4 சதவீதத்தாலும் அதிகரிப்

---

1. வாக்குப் பணங்கள் 1, 2, 4, 6.

2. வாக்குப் பணங்கள் 3, 5, 7.

3. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின்கீழான வரவுகளோ செலவுகளோ வரவுசெலவுத் திட்டம் உருவாக்கப்படும்பொழுது தெரியாதிருக்கும் நிலையில், வரவுசெலவுத் திட்டத்தில் ஓர் அடையாள ஒதுக்கீடு மட்டுமே செய்யப்படும்.

படைந்ததுடன், 1968/69ல் 22.2 சதவீதத்தால் அதிகரிப்படையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனினும், மூலதனத் தன்மையுள்ள சில விடயங்கள் அரசாங்க மதிப்பீடுகளில் மீண்டெழுஞ் செலவின்கீழ் அடக்கப்பட்டுள்ளமையும் அவதானிக்கத்தக்கது. இந்த விடயங்கள் மூலதனச் செலவீட்டிற்கு மாற்றப்பட்டபோது, 1966/67ம் ஆண்டுடன் முடிவடைந்த பத்தாண்டு காலங்களில் மூலதனச் செலவானது அதிகரிப்படைந்த சராசரி விகிதம் 8.0 சதவீதமாகும். 1967/68ல் இந்த விகிதம் 13.0 சதவீதத்திற்கு அதிகரிப்பதுடன், 1968/69ல் அது 19.2 சதவீதத்திற்கு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### வாக்களிக்கப்பட்ட செலவு

முன்பு கூறப்பட்டதுபோல், 1967/68ல் வாக்களிக்கப்பட்ட செலவு 29,006 இலட்சம் ரூபாய்களாகும்; இது 21,862 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மீண்டெழுஞ் செலவையும், 7,144 இலட்சம் ரூபாய்கள்கொண்ட மூலதன வாக்குப் பணத்திற்குரிய செலவையும் கொண்டுள்ளது. மூலதனத் தன்மையுள்ள செலவுகளை (784 இலட்சம் ரூபாய்கள்கொண்ட) மீண்டெழும் வாக்குப் பணங்களிலிருந்து மூலதன வாக்குப் பணங்களுக்கு மாற்றியதால், 1967/68ல் அரசாங்கத்தின் நடைமுறைச் செலவு 21,077 இலட்சம் ரூபாய்களையும், மூலதனச் செலவு 7,928 இலட்சம் ரூபாய்களையும் அடைந்தது.[1] இவ்வாறு 1967/68ல் அரசாங்கத்தின் வாக்களிக்கப்பட்ட செலவில் 72.7 சதவீதத்திற்கு நடைமுறைச் செலவும், 27.3 சதவீதத்திற்கு மூலதனச் செலவும் காரணங்களாகவிருந்தன. முன்னைய நிதியாண்டுக் காலத்தில் மூலதனச் செலவின் பங்கு 27.8 சதவீதமாகவும், கடந்த பத்தாண்டு காலத்தில் இதன் பங்கு சராசரி 8.0 சதவீதமாகவும் இருந்தது.

1967/68ற்குரிய மூலதன மதிப்பீடுகளுடன் ஒப்பிடும்போது, வாக்களிக்கப்பட்ட செலவானது, 409 இலட்சம் ரூபாய்களை அல்லது 1.4 சதவீதத்தைக் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இது மீண்டெழும் வாக்குப் பணங்களில் 1,090 இலட்சம் ரூபாய்கள் அதிகரித்தமையாலும், மூலதன வாக்குப் பணங்களில் 681 இலட்சம் ரூபாய்கள் குறைவடைந்தமையாலும் ஏற்பட்டதாகும். மீண்டெழும் வாக்குப் பணங்களுக்காய மூலதன விடயங்கள் மாற்றப்பட்டபோது, அதற்கேற்ப நடைமுறைச் செலவில் 1,102 இலட்சம் ரூபாய்கள்கொண்ட அதிகரிப்பும், மூலதனச் செலவில் 694 இலட்சம் ரூபாய்கள்கொண்ட வீழ்ச்சியும் காணப்பட்டன.

நடைமுறை நிதியாண்டுக் காலத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த வாக்களிக்கப்பட்ட செலவில் இடம்பெற்ற, 3,288 இலட்சம் ரூபாய்கள்கொண்ட அதிகரிப்பானது, மீண்டெழும் வாக்குப் பணங்களின்கீழும் மூலதன வாக்குப் பணங்களின்கீழும், முறையே, 1,705 இலட்சம் ரூபாய்களையும் 1,583 இலட்சம் ரூபாய்களையும் கொண்ட மதிப்பிடப்பட்ட அதிகரிப்பாலானதாகும். இது மீளப் பகுப்பாயப்படின், நடைமுறைச் செலவில் 1,763 இலட்சம் ரூபாய்கள் அல்லது 8.4 சதவீத அதிகரிப்பையும், மூலதனச் செலவில் 1,526 இலட்சம் ரூபாய்கள் அல்லது 19.2 சதவீத அதிகரிப்பையும் கொண்டிருக்கும்.

### நடைமுறைச் செலவு

1966/67ல் 265 இலட்சம் ரூபாய்கள் அல்லது 1.5 சதவீதத்தால் அதிகரித்த நடைமுறைச் செலவானது 1967/68ல் இதுவரை பதிவு செய்யப்பெறுதவகையில், 2,892 இலட்சம் ரூபாய்களால் அல்லது 15.9 சதவீதத்தால் உயர்வடைந்து, 21,077 இலட்சம் ரூபாய்களை அடைந்தது. இவ்வதிகரிப்பானது 1967 செத்தெம்பர் மாதத்துடன் முடிவடைந்த பத்து ஆண்டுக் காலத்திற்குரிய ஆண்டுச் சராசரி அதிகரிப்பு விகிதமாகிய 6.4 சதவீதத்துடன் ஒப்பிடற்பாலது.

1968/69ம் ஆண்டுக்கான மதிப்பீடுகளுடன் கடந்த பன்னிரண்டு ஆண்டுக் காலத்திற்குரிய நடைமுறைச் செலவின் விவரங்கள் பின்னிணைப்பு IIன் அட்டவணை 22ற் காட்டப்பட்டு மறுபக்கமுள்ள அட்டவணை II(ஊ) 4ல் சுருக்மாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

---

1. இச் செலவின் வகைப்படியான பகுப்பாய்வுக்குப் பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 21ஐப் பார்க்கவும்.

அட்டவணை II (ஊ) 4

நடைமுறைச் செலவு 1965/66—1968/69

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1965-66 | | 1966-67 | | 1967-68 உண்மையான (தற்காலிகமானவை) | | 1967-68 மூலமதிப்பீடுகள் | | 1968-69 மூலமதிப்பீடுகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் | தொகை ப.இ.ரூ. | சதவீதம் |
| 1. நிருவாகம் ... ... ... ... | 257.7 | 14.4 | 273.3 | 15.0 | 304.9 | 14.5 | 303.7 | 15.2 | 332.2 | 14.5 |
| 2. சமூக சேவைகள் ... ... ... ... | 500.6 | 27.9 | 528.0 | 29.0 | 603.9 | 28.7 | 580.5 | 29.0 | 643.1 | 28.2 |
| இவைகளாவன | | | | | | | | | | |
| (அ) கல்வி ... ... ... ... | 331.6 | 18.5 | 347.7 | 19.1 | 397.6 | 18.9 | 382.0 | 19.1 | 426.2 | 18.7 |
| (ஆ) சுகாதாரம் ... ... ... | 159.6 | 8.9 | 170.2 | 9.4 | 194.4 | 9.2 | 186.0 | 9.3 | 205.7 | 9.0 |
| 3. பொருளாதாரச் சேவைகள் ... ... | 122.1 | 6.8 | 137.7 | 7.6 | 153.2 | 7.3 | 167.3 | 8.4 | 192.0 | 8.4 |
| 4. அரசாங்க முயற்சி (அ) ... ... ... | 259.2 | 14.5 | 267.5 | 14.7 | 295.8 | 14.0 | 273.5 | 13.7 | 301.9 | 13.2 |
| 5. மாற்றற் கொடுப்பனவுகள் ... ... ... | 652.4 | 36.4 | 612.0 | 33.7 | 749.9 | 35.6 | 674.5 | 33.7 | 814.8 | 35.7 |
| இவைகளாவன | | | | | | | | | | |
| (அ) உணவு மானியங்கள் ... ... | 290.0ஆ | 16.2 | 193.0ஆ | 10.6 | 297.5ஆ | 14.1 | 217.5 | 10.9 | 334.5 | 14.6 |
| (ஆ) பொதுப்படுகடனின்மீதான வட்டி ... | 123.1 | 6.9 | 143.4 | 7.9 | 166.4 | 7.9 | 159.4 | 8.0 | 191.9 | 8.4 |
| (இ) இளைப்பாறற் சம்பளங்கள் ... ... | 141.4 | 7.9 | 146.0 | 8.0 | 174.0 | 8.3 | 164.4 | 8.2 | 168.1 | 7.4 |
| 6. மொத்த நடைமுறைச் செலவு (இ) ... ... | 1,792.0 | 100.0 | 1,818.5 | 100.0 | 2,107.7 | 100.0 | 1,999.5 | 100.0 | 2,284.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) புகையிரத, மின்சார, தபாற் தந்திப் போக்குவரத்து, ஒலிபரப்புத் திணைக்களங்களினதும், துறைமுக ஆணைக் குழுவினதும் கொடுப்பனவுகளை அடக்கும். 1967 சனவரி 5ல் ஒலிபரப்புத் திணைக்களம் ஒரு கூட்டுத்தாபனமாக மாற்றப்பட்டது.

(ஆ) திறைசேரி ஏடுகளிற் கொடுக்கப்பட்ட தொகைகள்.

(இ) ஆழ்நிதி உதவுதொகைகளையும், வருமானத்திலிருந்து பொதுப்படுகடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவையும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கான விசேட கொடுப்பனவுகளையும் நீக்கி.

1967/68ம் ஆண்டுக் காலத்தில் நடைமுறைக் கணக்கின்மீதான செலவு குறிப்பிடத்தக்களவு அதிகரித்ததற்கு மாற்றற் கொடுப்பனவுகள் (1,379 இலட்சம் ரூபாய்களால் அல்லது 22.5 சதவீதத்தால்), சமூக சேவைகள் (759 இலட்சம் ரூபாய்களால் அல்லது 14.4 சதவீதத்தால்), நிருவாகம் (316 இலட்சம் ரூபாய்களால் அல்லது 11.6 சதவீதத்தால்) என்பவற்றில் அதிக அதிகரிப்பு ஏற்பட்டதே காரணமாகும். பொருளாதார சேவைகளிலும் (155 இலட்சம் ரூபாய்களால் 'அல்லது 11.3 சதவீதத்தால்), அரசாங்க முயற்சிகளிலும் (283 இலட்சம் ரூபாய்களால் அல்லது 10.6 சதவீதத்தால்) மேலதிகச் செலவுகள் ஏற்பட்டன.

## (அ) தேறிய உணவு மானியம்

1967/68ல் மாற்றற் கொடுப்பனவுகள் 1,739 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்ததற்கு, தேறிய உணவு மானியமானது[1] 1,045 இலட்சம் ரூபாய்களால்[2] அல்லது 54.1 சதவீதத்தால் அதிகரித்ததே பெருமளவுக்குக் காரணமாகவிருந்தது. 1965/66ம், 1966/67ம் ஆண்டுகளுக்கான உண்மையான உணவு மானியமும், 1967/68ம் ஆண்டிற்கான தற்காலிக எண்தொகைகளும், 1967/68ம், 1968/69ம் ஆண்டுகளுக்காய மூலமதிப்பீடுகளுடன் கீழேயுள்ள அட்டவணை II (ஊ) 5ல் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை II (ஊ) 5

### உணவு மானியம் 1965/66—1968/69

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1965/66 | 1966/67 | 1967/68 மூல மதிப்பீடுகள் | 1967/68 தற்காலிக மானவை | 1968/69 மூலமதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| 1. இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மீது நுகர்ச்சியாளருக்கான மானியம்... | 181.2 | 218.5 | 211.9 | 295.9 | 317.0 |
| 2. உள்ளூர் அரிசியின்மீது உற்பத்தியாளருக்கும், நு. யாளருக்குமான மானியம் | 269.9 | 206.1 | 213.2 | 236.1 | 265.8 |
| 3. உள்ளூர் சி. வெங்காயத்தின் மானியம் | 5.3 | 6.3 | 6.0 | 7.1 | 7.5 |
| 4. விநியோக செலவும், ஏனைய செலவும்... | 31 4 | 34 6 | 40.6 | 50.3(ஆ | 40.9 |
| 5. மொத்த மானியம் (1முதல் 4வரை) ... | 487.8 | 465.5 | 471.7 | 589.4 | 631.1 |
| 6. சீனி விற்பனை மீதான இலாபம் ... | 202.4 | 224.8 | 201.8 | 240.9 | 241.3 |
| 7. கோதுமைமா விற்பனைமீதான இலாபம் | 0.5 | 35.8 | 46.4 | 57.4 | 56.1 |
| 8. ஏனைய பொருட்களின் வி. மீ. இலாபம் | 11.1(அ | 34.0(அ | 6.0 | –6.2(இ) | –0.9((இ |
| 9. மொத்தம் (5முதல் 8வரை) ... | 214.0 | 294.6 | 254.2 | 292.1 | 296.6 |
| 10. தேறிய உணவு மானியம் (5—9) ... | 273.8 | 170.8 | 217.5 | 297.5 | 334.5 |

மூலம்: உணவு ஆணையாளர்.

அ) முந்திய ஆண்டுகளைப் பொறுத்தவரையில் 1965/66ம் ஆண்டுகளின் 116 இலட்சம் ரூபாய்களையும் 1966/67ன் 301 இலட்சம் ரூபாய்களையும் உள்ளடக்கும்.

(ஆ) 98 இலட்சம் ரூபாய்கள்கொண்ட கடன் நட்டங்களை உள்ளடக்கும்.

(இ) இது, இலங்கை ரூபாவை நாணய மதிப்பிறக்கம் செய்ததனாலும், பருப்பு, அவரைத்தானியங்களுக்கான உலகச் சந்தை விலைகள் அதிகரித்ததனாலும், இவைகளைக் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட அதிகரித்த செலவுகளைத் தானே பொறுப்பதென அரசாங்கம் தீர்மானித்ததனாலுமாகும்.

(ஈ) அவரை வகைகள், மாலதீவுக் கருவாடு, வெங்காயம், முழுக் கோதுமை ஆகியவற்றை உள்ளடக்கும்.

---

1. பலகாலமாக வழக்காகவிருந்த அரசாங்கத்தின் தேறிய உணவு மானியமானது, பங்கீட்டரிசி விநியோகத்தாலும், அரிசி, வெங்காயம் ஆகியவற்றின் உத்தரவாத விலைத்திட்டக் கொள்வனவாலும் எழுந்த தேறிய கொடுப்பனவுகளையும், சீனி, மா ஏனைய பொருட்களின் விற்பனையாற்கிடைத்த தேறிய வருமானங்களையும் (இலாபங்கள்) கொண்டுள்ளதாகும்.
2. இத்தொகை திறைசேரி ஏடுகளின்படி இரண்டு ஆண்டுகளுக்கு இடையிலுள்ள தொகையின் வேற்றுமைகளாகும். ஏனினும், உணவு ஆணையாளரின் தரவுகளின்படி 1967/68ல் ஏற்பட்ட தேறிய உணவு மானியம் ரூபா 1,267 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது.

1966 திசெம்பர் மாதம் அரிசிப் பங்கீட்டிற் செய்த மாற்றங்களினுலும், மா, சீனி என்பவற்றின் விற்பனைகளிலிருந்து கிடைத்த, கூடிய இலாபங் களினுலும், 1966/67ல் அரசாங்கம் வழங்கிய தேறிய உணவு மானியத்தின் பெரும்பகுதி குறைந்ததென்பது சென்ற ஆண்டறிக்கையிற் குறிப்பிடப் பட்டது.[1] 1966 திசெம்பர் மாதம் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத் தைத் தொடர்ந்து, தானிய வகையின் நுகர்ச்சி முறையிலேற்பட்ட மாற்றங் களின் இத்தாக்கங்களேயும் 1967/68ல் உணரமுடிந்தது. தேறிய உணவு மானியமானது, பெரும் அதிகரிப்படைந்தமைக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீதான மொத்த மானியம் 774 இலட்சம் ரூபாய்களால் அல்லது 35.4 சதவீதத்தால் உயர்வடைந்ததும், உள்ளூரில் உற்பத்தி செய்த அரிசியின் மீதான மொத்த மானியம் 300 இலட்சம் ரூபாய்களால் அல்லது 14.6 சத வீதத்தால் அதிகரித்ததும் பிரதான காரணிகளாகும். முன்னையதின் அதிகரிப் புக்குக் காரணம் இறக்குமதிசெய்த அரிசியின் இறக்குமதிசெய்யப்பட்ட சராசரி விலே 1967/68ல் தொன்னென்றிற்கு 334 ரூபாய்களாற் கூர்மை யாக அதிகரித்து, 988 ரூபாய்களே (அல்லது 51 சதவீதத்தால்) அடைந்த மையாகும். இவ்வதிகரிப்பானது, இறக்குமதி செய்த பங்கீட்டின்கீழ் விநி யோகிக்கப்பட்ட அரிசியினளவு 1966/67ல் 3,80,196 தொன்களாகவிருந்து, 1967/68ல் 3,10,000 தொன்களாகக் குறைந்ததனுல், ஓரளவுக்கு எதிரீடு செய்யப்பட்டது. 1967 திசெம்பர் 1ந் தேதியிலிருந்து உற்பத்தியாளருக்கு உத்தரவாத விலேத் திட்டத்தின்கீழ் ஒரு புசல் நெல்லிற்கு 14 ரூபாய்கள் கொண்ட உயர்ந்த விலே செலுத்தப்பட்டதாலேயே உள்ளூர் அரிசியின் மீதான மானியம் முக்கியமாக உயர்வடைந்தது. பங்கீட்டின்கீழ் உள்ளூர் அரிசி விநியோகம் 1966/67ல் 2,38,159 தொன்களாகவிருந்து, 1967/68ல் 2,10,000 தொன்களாகக் குறைந்தது. இதற்குக் காரணம் விவசாய சேவை கள் ஆணையாளராற் கொள்வனவுசெய்யப்பட்ட உள்ளூர் அரிசியின் அளவு 1966/67ல் 2,23,865 தொன்களாகவிருந்து, 1967/68ல் 2,10,000 தொன் களுக்கு வீழ்ச்சியடைந்ததனுலாகும். உத்தரவாத விலே அதிகரித்தபோதிலும், சில இன அரிசியினைப் பொறுத்தவரையில், உயர்ந்த வெளிச் சந்தை விலேகள் நிலவியதால் மேற்குறித்த வீழ்ச்சி இடம்பெற்றது. அதே வேளையில், விநி யோகச் செலவுகளும், உணவுப் பொருட்களின் ஏனைய செலவுகளும் 157 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. இதில் 98 இலட்சம் ரூபாய்கள் கடலிழப்பால் ஏற்பட்டவையாகும்.

மொத்தத்தில், பங்கீட்டின்கீழான அரிசி விநியோகம் 1966/67ல் 6,17,014 தொன்களாகவிருந்து, 1967/68ல் 5,20,000 தொன்களாகக் குறை வடைந்தது. இவ்வீழ்ச்சியானது, 1965/66ல் விநியோகித்த தொகை யாகிய 9,46,056 தொன்களிற்கு மிகவும் எதிரானதாகும். எனினும், அரிசி மீதான மொத்த உணவு மானியங்களும் மேற்குறித்த விலே மாற்றங்களினுல் வீழ்ச்சியடையவில்லே.

மறுபுறத்தில் கோதுமை மாவினதும், சீனியினதும் (அதிகமாக இறக்கு மதி செய்யப்படுபவை) விற்பனையிலிருந்து கிடைத்த இலாபங்கள் முறையே, 216 இலட்சம் ரூபாய்களாலும், 161 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன. கோதுமை மாவினதும், சீனியினதும் தொன்னென்றிற்குச் சராசரி இறக்குமதிச் செலவு முறையே, 540 ரூபாய்களிலிருந்து, 597 ரூபாய்களுக்கும், 481 ரூபாய் களிலிருந்து, 544 ரூபாய்களுக்கும் அதிகரித்தபோதிலும், மேற்குறித்த விலே காணப்பட்டது. கோதுமை மாவினதும் சீனியினதும் விற்பனை 1967 நவெம்பர்[2] முதல் இருத்தல் ஒன்றிற்கு 5 சதத்தால் அதிகரித்தமையும், கோதுமை மாவைப் பொறுத்தவரை, நுகர்ச்சியின் அளவு 37,709 தொன் களால் அல்லது 9.6 சதவீதத்தால் அதிகரித்தமையும் உயர்ந்த இலாபத்திற் குக் காரணங்களாகும். 1966/67ல் ஏனைய பொருட்களின் (பருப்பு வகைகள்

1. 1967ம் ஆண்டறிக்கையின் பக்கம் 105, 106ஐப் பார்க்கவும்.
2. 1968 நவெம்பர் 23ந் தேதிய 14,776/3 இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானி,

போன்ற) விற்பனையால் ஏறக்குறைய 39 இலட்சம் ரூபாய்கள் இலாபம் அடைந்த அரசாங்கம் 1967/68ல் ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தைத் தொடர்ந்து பருப்பு வகைகளால் மேலதிக செலவை நுகர்ச்சியாளர் ஏற்க வேண்டியதில்லை என்ற அரசாங்கத் தீர்மானத்தால் 62 இலட்சம் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டது.

கோதுமை மாவினதும் சீனியினதும் விற்பனையிலிருந்து கிடைத்த இலாபங்களையும், வெங்காய உற்பத்தியாளருக்குரிய மானியப் பணத்தையும் கணக்கிலெடுத்தால், தேறிய உணவு மானியம் 1967/68ல் 2,975 இலட்சம் ரூபாய்களாகும். இது, 1966/67லும்[1] பார்க்க 1,267 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகும். 1967/68ம் ஆண்டுக்கான மூலமதிப்பீட்டைக் காட்டிலும் இது 800 இலட்சம் ரூபாய்கள் அதிகமானால், 1968/69ல் தேறிய மானியம் மேலும் 370 இலட்சம் ரூபாய்களால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. விரிவான விவரங்கள் அட்டவணை II (ஊ) 5ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### (ஆ) ஏனைய மாற்றற் கொடுப்பனவுகள்

1967/68ல் மாற்றற் கொடுப்பனவுகளின் வளர்ச்சிக்குப் பொறுப்பாகவிருந்த ஏனைய முக்கிய காரணிகள், 230 இலட்சம் ரூபாய்களால் அல்லது 16.0 சதவீதத்தால் (ஒப்புநோக்கும்பொழுது, முன்னைய ஆண்டில் 203 இலட்சம் ரூபாய்கள் அல்லது 16.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது) உயர்வடைந்த பொதுப்படுகடன்மீதான வட்டியும், 280 இலட்சம் ரூபாய்களால் அல்லது 19.2 சதவீதத்தால் அதிகரிப்படைந்த இளைப்பாறற் சம்பளக் கொடுப்பனவுகளும் (ஒப்புநோக்கும்போது, 1966/67ல் 46 இலட்சம் ரூபாய்கள் அல்லது 3.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது) ஆகும். முன்னையதற்குக் காரணம் பொதுப்படுகடன் வளர்ச்சியும், ரூபாவின் நாணயப் பெறுமதி இறக்கத்தால் அதன் பெறுமதி அதிகரிப்பு அடைந்ததுமாகும்.[2] பின்னையதற்குக் காரணம் அரசாங்கத்திலிருந்து இளைப்பாறியோருக்கு 1967லிருந்து வழங்கப்பட்ட இடைக்காலப்படிகளாகும்.

### (இ) சமூக சேவைகள்

சமூக சேவைகள்மீதான (கல்வி, சுகாதாரம், வீடமைப்பு) நடைமுறைச் செலவு 1967/68ல் 759 இலட்சம் ரூபாய்களால் அல்லது 14.4 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்புநோக்கும்போது, இது முன்னைய ஆண்டில் 274 இலட்சம் ரூபாய்களால் அல்லது 5.5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இச்செலவினது ஆண்டுச் சராசரி அதிகரிப்பு விகிதம் (கூட்டு) 1967 செத்தெம்பருடன் முடிவடையும் கடந்த பத்தாண்டு காலத்தில் 7.0 சதவீதமாகவும், 1967 செத்தெம்பருடன் முடிவடையும் கடந்த ஐந்தாண்டு காலத்தில் 4.2 சதவீதமாகவும் இருந்தது. இவ்வதிகரிப்பு 1967/68ல் அண்மையாண்டுகளில் சராசரி அதிகரிப்பிலும்பார்க்க மிகவும் உயர்ந்ததாக இருந்தது. இதற்கு, 1967/68ல் கல்வியிலேற்பட்ட 499 இலட்சம் ரூபாய்கள் அல்லது 14.4 சதவீத அதிகரிப்பும், சுகாதாரத்தில் ஏற்பட்ட 242 இலட்சம் ரூபாய்கள், அல்லது 14.2 சதவீத அதிகரிப்பும் முக்கிய காரணங்களாகும். கல்வியின்மீதான செலவிலேற்பட்ட ஆண்டுச் சராசரி அதிகரிப்பு விகிதம் (கூட்டு) 1967, செத்தெம்பருடன் முடிவடைந்த கடந்த பத்தாண்டு காலத்தில் 8.1 சதவீதமாகவும், ஐந்தாண்டு காலத்தில் 4.5 சதவீதமாகவும் காணப்பட்டது. சுகாதாரத்திற்கான இந்த விகிதம் முறையே 5.2 சதவீதமாகவும், 3.5 சதவீதமாகவும் இருந்தது. கல்வியிலும், சுகாதாரச் செலவிலும் ஆண்டுதோறும் ஏற்பட்ட தொடர்ச்சியான அதிகரிப்பு குடித்தொகை அதிகரிப்பினால் அளிக்கப்படவேண்டியிருந்த அதிகரித்த வசதிகளினாலும், பள்ளிக்கூடம் செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை உயர்ந்தமையாலும் ஏற்பட்டிருக்கக்கூடும். 1967/68ல் ஏற்பட்ட புறநடையான அதிகரிப்பு மேற்கூறிய காரணங்களுடன் கல்வி, சுகாதார ஆளணிகளுக்கு வழங்கப்பட்ட இடைக்காலப் படிக் கொடுப்பனவுகளால் ஏற்பட்டதாகும்.

---

1. முந்திய பக்கத்தின் அடிக்குறிப்பு 2ஐப் பார்க்கவும்.
2. பொதுப்படு கடனின் பிற்பாகத்தைப் பார்க்கவும்.

## (ஈ) நிருவாகம்

நடைமுறைக் கணக்குகள்மீதான கொடுப்பனவுகளின்மீதான ஏனைய முக்கிய அதிகரிப்பு நிருவாகத்தில் (குடியியல் நிருவாகமும், பாதுகாப்பும் அடங்கும்) காணப்பட்டன. நிருவாகத்தின்மீதான நடைமுறைச் செலவு பின்னைய ஆண்டில் 156 இலட்சம் ரூபாய்களால் அல்லது 6.1 சதவீதத்தால் அதிகரித்திருந்ததற்கு மாறாக 1967/68ல் 316 இலட்சம் ரூபாய்களால் அல்லது 11.6 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு 1967, செத்தெம்பருடன் முடிவடையும் கடந்த 5 ஆண்டுக் காலத்திற் சராசரி ஆண்டு அதிகரிப்பாகிய 3.1 சதவீதத்தாலும் உயர்ந்ததாக இருந்தது. 1967/68ன் இந்த அதிகரிப்பில் 207 இலட்சம் ரூபாய்களுக்குக் குடியியல் நிருவாகமும், மிகுதி 109 இலட்சம் ரூபாய்களுக்கு பாதுகாப்பும் காரணிகளாக அமைந்தன. குடியியல் நிருவாகம் 9.5 சதவீத அதிகரிப்பையும், பாதுகாப்பு 19.4 சதவீத அதிகரிப்பையும் ஏற்படுத்தின. சமூக சேவைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்குச் சாதாரண ஆண்டதிகரிப்பு மட்டுமன்றி, இக்காலத்திற் கொடுக்கப்பட்ட இடைக்காலப்படியும் காரணங்களாக இருந்தன.

## (உ) பொருளாதார சேவைகளும், அரசாங்க முயற்சிகளும்

மேலும், 1967/68ல் பொருளாதார சேவைகளில் (விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, தயாரிப்பு, வர்த்தகம், போக்குவரத்து என்பன) 155 இலட்சம் ரூபாய்கள் அல்லது 11.3 சதவீத அதிகரிப்பும், அரசாங்க முயற்சிகளில் (புகையிரதச் சேவை, மின்சாரம், தபால், தந்திச் செய்தி அறிவிப்பு, திணைக்களங்களும், துறைமுக ஆணைச் சபையும்) 283 இலட்சம் ரூபாய்கள் அல்லது 10.6 சதவீத அதிகரிப்பும் காணப்பட்டது. முதற் கூறப்பட்டதன் அதிகரிப்பு கடந்த ஆண்டின் அதிகரிப்பாகிய 12.8 சதவீதத்திலும்பார்க்கக் குறைந்ததாகக் காணப்பட்டிருக்கையில், பின்னையதன் அதிகரிப்பு கடந்த ஆண்டிலேற்பட்ட 3.2 சதவீத அதிகரிப்பைவிட மூன்று மடங்கு அதிகமாகவிருந்தது. முன்னைய பந்திகளிற் கூறப்பட்ட அதே காரணங்களால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டது.

1968/69ம் நடைமுறை நிதியாண்டுக் காலத்தில் 1967/68லு பார்க்க மேலும் 1,763 இலட்சம் ரூபாய்கள் அல்லது 8.4 சதவீதம் நடைமுறைச் செலவில் அதிகரிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு, மாற்றற் கொடுப்பனவுகளில் 649 இலட்சம் ரூபாய்கள் அல்லது 8.7 சதவீதம், சமூக சேவைகளில், 392 இலட்சம் ரூபாய்கள் அல்லது 6.5 சதவீதம், பொருளாதார சேவைகளில் 388 இலட்சம் ரூபாய்கள் அல்லது 25.3 சதவீதம், நிருவாகத்தில் 273 இலட்சம் ரூபாய்கள் அல்லது 9.0 சதவீதமும், அரசாங்க முயற்சிகளில் 61 இலட்சம் ரூபாய்கள் அல்லது 2.1 சதவீதமான மதிப்பிடப்பட்ட அதிகரிப்புகளே காரணங்களாகும். பொருளாதார சேவைகளிற் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதிர்பார்க்கப்பட்டமைக்குக் காரணம் நடைமுறை நிதியாண்டுக் காலத்தில் விவசாய நீர்ப்பாசன அபிவிருத்தியில் அதிகரித்த ஆர்வம் இடம்பெற்றதேயாகும்.

## மூலதனச் செலவு

அட்டவணை II (ஊ) 3ற் காட்டியபடி, 1967/68ல் உண்மையான (தற்காலிகமான) மூலதனச் செலவின் எண்தொகை 7,928 இலட்சம் ரூபாய்களாகும். இவ்வெண்தொகை வாக்குகள் 3, 5, 7ன்கீழ் பகுக்கப்பட்ட செலவாலும், மீண்டெழுஞ் செலவு வாக்குகள் 1, 2, 4, 6 ஆகியவற்றுள் அடங்கியுள்ள மூலதன விடயங்களாலும், தேசிய அபிவிருத்தி ஒதுக்கிலிருந்து பெற்ற மிகச் சிறிய தொகையாலும் ஆக்கப்பட்டுள்ளன. இவ்வாறு விளக்கப்பட்ட மூலதனச் செலவானது, 1966/67ம் ஆண்டிற்குரிய எண்தொகையைக் காட்டிலும், 913 இலட்சம் ரூபாய்களால் அல்லது 13.0 சதவீதத்தாற் கூடியுள்ளது. ஒப்புநோக்கும்போது, இவ்வதிகரிப்பு முன்னைய ஆண்டுக் காலத்தில், 1,046 இலட்சம் ரூபாய்கள் அல்லது 17.5 சதவீதமாகும். 1957/58

தொடக்கம் 1966/67 வரையான பத்து ஆண்டுக் காலத்தில் மூலதனச் செலவின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு விகிதம் 7.3 சதவீதமாகும் (கூட்டு). எனவே, 1967/68ல் மூலதனச் செலவின் அதிகரிப்பு சென்ற ஆண்டிலும் பார்க்கக் குறைவாகவும், முன்னைய நிதியாண்டுக் காலங்களிலேற்பட்ட வளர்ச்சி விகிதத்திலும்பார்க்க அதிகம் உயர்வாகவும் இருந்தது.

## (அ) வரவுசெலவுத் திட்ட ஆய்வு

1967/68ல் மூலதனச் செலவில் அதிகரிப்பு ஏற்பட்டமைக்கு, மத்திய அரசாங்கத்தின் நிலையான மூலதன ஆக்கத்தில் 622 இலட்சம் ரூபாய்கள் அல்லது 14.7 சதவீதம் அதிகரித்தமையும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான கொடைகளில் 369 இலட்சம் ரூபாய்கள் அல்லது 15.9 சதவீதம் அதிகரித்தமையும் முக்கிய காரணங்கள் என்பதனை அட்டவணை II (ஊ) 3 காட்டுகின்றது. 1967/68ல் மத்திய அரசாங்கத்தின் மூலதன ஆக்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான கொடைகளும் எந்தவொரு நிதியாண்டிலும் அடையாத உயர்நிலையை அடைந்தன. அத்துடன், 1967/68ன் மொத்த வரவுசெலவுத் திட்ட மூலதனச் செலவில் 4,843 இலட்சம் ரூபாய்கள் அல்லது 61.1 சதவீதத்திற்கு மத்திய அரசாங்கத்தின் மூலதன ஆக்கம் காரணமாக இருந்தது. அதே வேளையில், 2,889 இலட்சம் ரூபாய்கள் அல்லது 36.4 சதவீதத்திற்குப் பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கான கொடைகளும், கடனும் காரணங்களாக இருந்தன. முன்னைய ஆண்டில் அரசாங்கத்தின் மூலதன ஆக்கம் 4,221 இலட்சம் ரூபாய்கள் அல்லது 60.2 சதவீதமாகவும், பொதுக் கூட்டுத்தாபனங்களுக்கும், ஏனைய முகவர் நிலையங்களுக்குமான கொடைகளும் கடன்களும் 2,607 இலட்சம் ரூபாய்களாக அல்லது 37.2 சதவீதமாகவும் இருந்தன.

மறுபுறத்தில் 1967/68ற்கான மூலதனச் செலவின் உண்மையான (தற்காலிகமான) எண் தொகை அவ்வாண்டிற்குரிய மூலமதிப்பீடுகளிலும்பார்க்க 694 இலட்சம் ரூபாய்களால் அல்லது 8.0 சதவீதத்தாற் குறைவடைந்திருந்தது. இதற்கு ஏறக்குறைய முழுவதும் மூலதனச் செலவு வாக்குகளின் கீழான (3, 5, 7) செலவிலேற்பட்ட 681 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறைவே காரணமாகும். இத்தகைய குறைச் செலவு 1966/67ன் 18.0 சதவீதமான குறைச்செலவுடனும், 1965/66ன் 8.6 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில், சீர்திருத்தம் உள்ளதாகவும், 1967/68ன் நிதித் தொழிற்பாடுகளில் ஓரம்சமாகவும் அமைகின்றது. 1967/68ன் குறைவு ஏறக்குறைய முழுவதும் மத்திய அரசாங்கத்தின் நிலையான மூலதன ஆக்கத்திற் காணப்பட்டது.

முன்னர் காட்டியபடி 1968/69ற்குரிய மூலதனச் செலவின் மதிப்பீடுகள் 9,454 இலட்சம் ரூபாய்களாகும். இதில் உட்பட்ட 8,727 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மூலதன வாக்குப் பண ஒதுக்கீடுகள் எந்தவொரு நிதியாண்டிலும் பார்க்க மிகக்கூடிய தொகையாகும். இவ்வாக்குப் பணங்களில் 15 சதவீதமான (1,309 இலட்சம் ரூபாய்கள்) மதிப்பிடப்பட்ட குறைச்செலவுகளுக்கு இடம்விட்டு நோக்குகையில், மூலதனச் செலவின் தேறிய மொத்தத் தொகை 8,145 இலட்சம் ரூபாய்களாய் அமைந்து முந்திய நிதியாண்டின் 1967/68ற்குரிய தொகையிலும்பார்க்க 217 இலட்சம் ரூபாய்கள் உயர்ந்ததாகும்.

மொத்த ஒதுக்கீட்டு நியதிகளின்படி (அதாவது எதிர்பார்க்கப்படும் குறைச்செலவுக்கு இடமளிக்குமுன்) 1968/69ன் மூலதனச் செலவு முந்திய நிதியாண்டில் 1967/68ற்குரிய உண்மையான (தற்காலிக) தொகையிலும் பார்க்க 1,526 இலட்சம் ரூபாய்கள் உயர்வானதாகும். இது மத்திய அரசாங்கத்தின் நிலையான மூலதன ஆக்கத்திற்கான 980 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரித்த ஒதுக்கீட்டினாலும், கூட்டுத்தாபனங்களுக்கான கொடைகளின் 479 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பினாலும் ஏற்பட்டதாகும்.

## அட்டவணை *II* (ஊ) 6

## மூலதனச் செலவு — *1965/66 — 1968/69**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1965/66 | | 1966/67 | | 1967/68 | | மூல மதிப்பீடுகள் 1967/68 | | மூல மதிப்பீடுகள் 1968/69 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % |
| 1. உண்மையான சொத்துக்களின் கொள்ளல் ஆக்கல் பராமரிப்பு ... ... | **562.6** | **94.3** | **667.9** | **95.2** | **766.4** | **96.7** | **841.1** | **97.6** | **913.8** | **96.7** |
| (அ) நிருவாகம் ... | **20.5** | **3.4** | **28.1** | **4.0** | **31.5** | **4.0** | **42.7** | **5.0** | **39.9** | **4.2** |
| (ஆ) சமூக சேவைகள் ... இதனில், | **70.2** | **11.8** | **86.2** | **12.3** | **97.7** | **12.3** | **124.5** | **14.4** | **134.2** | **14.2** |
| (1) கல்வி ... ... | 31.0 | 5.2 | 35.1 | 5.0 | 40.4 | 5.1 | 55.6 | 6.4 | 56.5 | 6.0 |
| (2) சுகாதாரம் ... | 11.2 | 1.9 | 17.6 | 2.5 | 20.6 | 2.6 | 20.2 | 2.3 | 21.7 | 2.3 |
| (3) வீடமைப்பு ... | 27.5 | 4.6 | 33.3 | 4.7 | 36.3 | 4.6 | 47.8 | 5.5 | 55.3 | 5.8 |
| (இ) பொருளாதார சேவைகள் (இதனில்) | **366.2** | **61.4** | **459.1** | **65.4** | 528.8 | **66.7** | **513.5** | **59.6** | **590.9** | **62.5** |
| (1) விவசாயமும் நீர்ப்பாசனமும் ... | 162.3 | 27.2 | 178.2 | 25.4 | 254.9 | 32.2 | 228.2 | 26.5 | 262.4 | 27.8 |
| (2) கடற்றொழில் ... | 30.6 | 5.1 | 26.0 | 3.7 | 17.2 | 2.2 | 32.0 | 3.7 | 19.3 | 2.0 |
| (3) தயாரிப்பும்சுரங்கத் தொழிலும் ... | 89.1 | 14.9 | 142.5 | 20.3 | 153.8 | 19.4 | 156.7 | 18.2 | 198.0 | 20.9 |
| (4) போக்குவரத்து ... | 83.2 | 13.9 | 106.9 | 15.2 | 98.7 | 12.4 | 92.6 | 10.7 | 105.0 | 11.1 |
| (ஈ) அரசாங்க முயற்சிகள் | **105.7** | **17.7** | **94.5** | **13.5** | **108.4** | **13.7** | **160.4** | **18.6** | **148.8** | **15.7** |
| 2. நிதிச் சொத்துக்களின் கொள்வனவு... ... | **34.3** | **5.7** | **33.6** | **4.8** | **26.4** | **3.3** | **21.1** | **2.4** | **31.6** | **3.3** |
| 3. மொத்த மூலதனச் செலவு இதனில், | **596.9** | **100.0** | **701.5** | **100.0** | **792.8** | **100.0** | **862.2** | **100.0** | **945.9** | **100.0** |
| மூலதனப் பராமரிப்பு ... | 63.9 | 10.7 | 73.7 | 10.5 | 69.3 | 8.7 | 76.1 | 8.8 | 75.2 | 8.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) பின்னிணைப்பு IIஇல் உள்ள அட்டவணை 22இன் அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

(ஆ) தற்காலிகமானவை.

### (ஆ) செயற்பாட்டு ஆய்வு

மூலதனச் செலவுத் தொழிற்பாட்டின் பகுப்பு இந்த அறிக்கையிற் பின்னிணைப்பு *II*ன் அட்டவணை 22ற் கொடுக்கப்பட்டுள்ளதுடன், *1965/66* தொடக்கம் *1968/69* வரைக்கான எண்தொகைகள் மேலேயுள்ள அட்டவணை *II* (ஊ) 6ற் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

*1967/68*ல் மூலதனச் செலவு முன்னைய ஆண்டிலிருந்து *913* இலட்சம் ரூபாய்களால் அல்லது *13.0* சதவீதத்தால் அதிகரித்து, *7,928* இலட்சம் ரூபாய்களையடைந்ததென்பது இதிலிருந்து அவதானிக்கத்தக்கது. முன்னைய ஆண்டைப் போன்று, பொருளாதாரச் சேவைகள்மீதான செலவிலேற்பட்ட அதிகரிப்பே (*697* இலட்சம் ரூபாய்கள்) மூலதனச் செலவின் அதிகரிப்புக்கு முக்கிய காரணியாக அமைந்திருந்தது. பொருளாதார சேவைகள் என்ற பிரிவினுள், விவசாயம், நீர்ப்பாசனம் மீதான செலவு *767* இலட்சம் ரூபாய்களாலும் (அல்லது *43.0* சதவீதம்), தயாரிப்பும் சுரங்கத் தொழிலும்

என்பதன்மீதான செலவு, 113 இலட்சம் ரூபாய்களாலும் (அல்லது 7.9 சதவீதம்) அதிகரித்துக் காணப்பட்டபோது, மீன்பிடித் தொழில், போக்கு வரத்து என்பவற்றின்மீதான செலவு முறையே 88 இலட்சம் ரூபாய்க ளாலும், 82 இலட்சம் ரூபாய்களாலும் வீழ்ச்சியடைந்தது. சமூக சேவைகள் அரசாங்க முயற்சிகள் என்பவற்றின்மீதான மூலதனச் செலவுகளும் அதி கரிப்பைக் காட்டியுள்ளன.

1967/68ன் மொத்த மூலதனச் செலவின் 66.7 சதவீதத்திற்குப் பொரு ளாதார சேவைகள் காரணமாக அமைந்தனவென்பதும் காணத்தக்கது. இந்தப் பிரிவு மூலதனச் செலவில் தனது பங்கை 1964/65ல் 57.1 சதவீதத் திலிருந்து 1965/66ல் 61.4 சதவீதத்திற்கும், 1966/67ல் 65.4 சதவீதத் திற்கும் அதிகரித்துள்ளது. இந்தப் பிரிவினுள், விவசாயம், நீர்ப்பாசனம், தயாரிப்பு, சுரங்கத் தொழில் 1967/68ன் மொத்த மூலதனச் செலவில் முறையே, 32.2 சதவீதத்திற்கும், 19.4 சதவீதத்திற்கும் காரணங்களாக அமைந்தன. இது, முன்னைய மூன்றுண்டுகளிலும் அவற்றின் பங்குகள் மீன் பிடித் தொழில், போக்குவரத்து என்பவற்றின் பங்குகளை வீழ்ச்சியடையச் செய்து இடம்பிடித்தவாறு அதிகரித்தமையைக் காட்டுகின்றது. இதற்கு அண்மைக் காலத்தில் விவசாய அபிவிருத்தியில் விசேட ஆர்வம் இடம் பெற்றமையும், பொதுக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களால் விரிவாக்கும் கொள்கைகள் மேற்கொள்ளப்பட்டமையும் காரணமாகும்.

எனினும், 1967/68ல் உண்மையான (தற்காலிகமான) மூலதனச் செலவு அவ்வாண்டிற்குரிய மூலமதிப்பீடுகளிலும்பார்க்க 694 இலட்சம் ரூபாய் களால் அல்லது 8.0 சதவீதத்தாற் குறைவடைந்ததென்பது கவனிக்கற் பாலது. இந்தக் குறைவுக்கு அரசாங்க முயற்சிகள் (520 இலட்சம் ரூபாய்கள்), சமூக சேவைகள் (268 இலட்சம் ரூபாய்கள்), நிருவாகம் (112 இலட்சம் ரூபாய் கள்) என்பனவற்றிற் குறைச் செலவு ஏற்பட்டமையும், அதே வேளையில் பொரு ளாதாரச் சேவைகளிலேற்பட்ட செலவு மூலமதிப்பீட்டிலும் உயர்ந்ததாக (153 இலட்சம் ரூபாய்கள்) இருந்தமையும் காரணங்களாகும்.

1968/69ற்கான மூலதனச் செலவின் மூலமதிப்பீடுகள், 1967/68லும் பார்க்க 1,526 இலட்சம் ரூபாய்கள் அல்லது 19.2 சதவீதத்தால் உயர் வடைந்தமையைக் காட்டுகின்றன.[1] இதற்குப் பொருளாதார சேவைகளில் 621 இலட்சம் ரூபாய்களும், அரசாங்க முயற்சிகளில் 404 இலட்சம் ரூபாய் களும், சமூக சேவைகளில் 365 இலட்சம் ரூபாய்களும், நிருவாகத்தில் 84 இலட்சம் ரூபாய்களும் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டமையே காரண மாகும். பொருளாதார சேவைகள் என்ற பிரிவினுள் பின்வருவனவற்றிற்குக் கூடுதலான ஒதுக்குகள் செய்யப்பட்டன; தயாரிப்பும் சுரங்கத் தொழிலும் (442 இலட்சம் ரூபாய்கள்), விவசாயம், நீர்ப்பாசனம் (75 இலட்சம் ரூபாய் கள்), போக்குவரத்து (63 இலட்சம் ரூபாய்கள்). அரசாங்கத் துறைகளுக் கான ஒதுக்குகள் அதிகரித்தமை பிரதானமாகத் தபால் திணைக்களம், புகை யிரதச் சேவை ஆகியவற்றிற்கான கூடிய ஒதுக்குகளாகும். இதே வேளையில், சமூக சேவைகளுக்கான ஒதுக்குகளின் அதிகரிப்பு, வீடமைப்பு (190 இலட் சம் ரூபாய்கள்), கல்வி (161 இலட்சம் ரூபாய்கள்) ஆகியவற்றின் அதிகரிப்புக் களினாலாகும்.

### (இ) அமைச்சுக்களின் குறைச்செலவு

1965/66 தொடக்கம் 1967/68 வரைக்கான மூன்றுண்டுக் காலத்தில் ஒவ்வொரு அமைச்சுக்களினதும் மூலதன வாக்குப் பணங்களின் மொத்த ஒதுக்கீடும், உண்மையான செலவும், மறுபக்கமுள்ள அட்டவணை II (ஊ) 7ல் ஒப்புநோக்கப்பட்டுள்ளன.

---

1. மீண்டெழும் வாக்குப் பணங்கள் மூலதன விடயங்களுக்காகச் சீராக்கப்பட்டுள்ளபடி, ஆனல் இறைச் செலவீற்கு இடம்விடுவதற்குமுன்.

## அட்டவணை II (ஊ) 7

### மூலதனச் செலவு—1965/66—1967/68 அமைச்சுக்களின்படி (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| அமைச்சு | 1965/66 | | | 1966/67 | | | 1967/68 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொ. ஏற்பாடு | உண். செலவு | குறைச் செலவு | மொ. ஏற்பாடு | உண். செலவு | குறைச் செலவு | மொ. ஏற்பாடு | உண். செலவு | குறைச் செலவு |
| 1. மகாதேசாதிபதி, பிரதம மந்திரி, உயர் நீதிமன்றம் முதலியன. (அமைச்சுக்குக் கீழ்ப் படாதவை) | 0.1 | 0.1 | — | 0.1 | ... | 0.1 | 0.2 | 0.1 | 0.1 |
| 2. பாதுகாப்புவெளிவிவகாரஅமைச்சு | 7.3 | 5.7 | 1.6 | 10.7 | 7.6 | 3.1 | 11.9 | 7.4 | 4.5 |
| 3. அமைப்புத் தி. பொருளாதார, | ... | ... | — | ... | ... | — | ... | ... | — |
| 4. தகவல் ஒலிபரப்பு அமைச்சு ... | 0.5 | 0.3 | 0.2 | 0.7 | 0.3 | 0.4 | 1.3 | 0.1 | 1.2 |
| 5. அரசாங்க அலுவல் அமைச்சு ... | 2.0 | 1.4 | 0.6 | 9.3 | 4.5 | 4.8 | 8.4 | 5.5 | 2.9 |
| 6. நிதி அமைச்சு ... ... | 36.4 | 36.0 | 0.4 | 33.2 | 32.9 | 0.3 | 27.9 | 25.8 | 2.1 |
| 7. காணி, நீர்ப்பாசன, மின்சக்தி அ. | 207.4 | 163.4 | 44.0 | 212.7 | 173.0 | 39.7 | 264.6 | 245.1 | 19.5 |
| 8. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு | 29.4 | 16.3 | 13.1 | 26.3 | 16.8 | 9.5 | 17.5 | 12.4 | 5.1 |
| 9. சுகாதார அமைச்சு ... ... | 2.3 | 2.8 | — | 13.1 | 7.2 | 5.9 | 11.1 | 10.8 | 0.3 |
| 10. தேசியமய சேவைகள் அமை. ... | 16.8 | 13.8 | 3.0 | 23.9 | 14.9 | 9.0 | 40.3 | 33.1 | 7.2 |
| 11. கைத்தொழில், கடற்றொழில் அ. | 120.9 | 104.8 | 16.1 | 169.6 | 153.1 | 16.5 | 156.9 | 141.0 | 15.9 |
| 12. வர்த்தக வியாபார அமைச்சு ... | 0.5 | 0.5 | — | 0.1 | ... | 0.1 | 0.1 | ... | 0.1 |
| 13. நீதி அமைச்சு ... | ... | 0.1 | ... | 0.2 | 0.1 | 0.1 | 0.2 | 0.2 | — |
| 14. உள்ளூராட்சி அமைச்சு ... | 23.7 | 19.1 | 4.6 | 27.0 | 20.3 | 6.7 | 25.7 | 20.8 | 4.9 |
| 15. விவசாய, உணவு அமைச்சு ... | 63.8 | 61.2 | 2.6 | 86.1 | 73.6 | 12.5 | 109.4 | 87.3 | 22.1 |
| 16. கல்வி, கலாச்சார அலுவல் அமை. | 27.8 | 20.7 | 7.1 | 37.4 | 23.1 | 14.3 | 38.3 | 26.3 | 12.0 |
| 17. தொழில் தொழில்காண் அமை. | 2.7 | 0.9 | 1.8 | 2.4 | 1.2 | 1.2 | 2.4 | 2.5 | — |
| 18. பொ. வேலை தபால் தந்திதொ. சேதி | 54.7 | 40.7 | 14.0 | 73.2 | 58.4 | 14.8 | 71.3 | 61.1 | 10.2 |
| 19. போக்குவரத்து அமைச்சு ... | 51.7 | 40.6 | 11.1 | 64.7 | 37.6 | 27.1 | 48.4 | 32.9 | 15.5 |
| 20. சமூக சேவைகள் அமைச்சு ... | ... | 0.1 | — | 0.1 | ... | 0.1 | 0.6 | 0.3 | 0.3 |
| 21. விஞ்ஞான ஆரா. வீடமைப்பு அ. | ... | ... | — | 0.4 | ... | 0.4 | 2.0 | 1.6 | 0.4 |
| மொத்தம் ... ... | 648.1 | 528.4 | 119.7 | 791.3 | 624.7 | 166.6 | 838.5 | 714.4 | 124.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) ஒப்பீடு செய்வதற்காக 1965/66, 1966/67, 1967/68இற்கான எண்தொகைகள், 1968/69 நிதியாண்டுக்கான அமைச்சுகளின்கீழ் மிக அண்மையில் ஒதுக்கப்பட்ட திணைக்களங்களுக்குப் பொருந்தக்கூடியவகையில் அந்நிய கடன்களினூடாகவும் நன்கொடைகளுக்கூடாகவும் நிதியீட்டப்பட்ட செலவினையும் உள்ளடக்குகின்றது.

1967/68ம் நிதியாண்டுக் காலத்தில் மொத்த ஒதுக்கீடான 8,385 இலட்சம் ரூபாய்களுக்கு மாறாக, உண்மையான மூலதனச் செலவு 7,144 இலட்சம் ரூபாய்களாகவமைந்து 1,241 இலட்சம் ரூபாய்கள் அல்லது 14.8 சதவீதம்கொண்ட குறைச்செலவு ஏற்பட்டது. 1965/66, 1966/67 ஆகிய முன்னைய இரு ஆண்டுக் காலத்திற் குறைச்செலவு முறையே, 1,197 இலட்சம் ரூபாய்கள் அல்லது 18.5 சதவீதம், 1,666 இலட்சம் ரூபாய்கள் அல்லது 21.0 சதவீதமாகவும் காணப்பட்டன. எனவே, மூலதன வரவுசெலவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டமையில், ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டதை 1967/68ம் ஆண்டு உணர்த்துகின்றது. அண்மைக் காலத்திலே திட்டச் செயலாக்கத்திற்குப் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதே இதற்குக்காரணமாகும்.

1967/68 நிதியாண்டுக் காலத்தில் அதிக மூலதனத்தைச் செலவிட்ட பிரதான அமைச்சுக்கள், காணி நீர்ப்பாசன மின்சாரம் (2,646 இலட்சம் ரூபாய்கள்), கைத்தொழில் மீன்பிடி (1,569 இலட்சம் ரூபாய்கள்), விவசாய உணவு (1,094 இலட்சம் ரூபாய்கள்), பொது வேலை, தபால் செய்தி அறிவிப்பு (713 இலட்சம் ரூபாய்கள்) என்பவையாகும். இவை மூலதன வரவு செலவுத் திட்டத்தின் 71.8 சதவீதத்திற்குக் காரணமாகவிருந்தன. 1967/68ல்

காணி நீர்ப்பாசன மின்சார அமைச்சின் குறைச்செலவு 195 இலட்சம் ரூபாய்கள் அல்லது 7.4 சதவீதமாகும். ஒப்புநோக்கும்போது, இது 1966/67ல் 397 இலட்சம் ரூபாய்களாக அல்லது 18.7 சதவீதமாகவும், 1965/66ல் 440 இலட்சம் ரூபாய்களாக அல்லது 21.2 சதவீதமாகவும் காணப்பட்டது. கைத்தொழில் மீன்பிடி அமைச்சைப் பொறுத்தளவில், உண்மைச் செலவு 1967/68ல் 159 இலட்சம் ரூபாய்கள் அல்லது 10.1 சதவீதத்தாற் குறைவாகவிருந்தது. ஒப்புநோக்கின், 1966/67ம், 1965/66ம் ஆண்டுகளுக்கான எண்தொகை முறையே 165 இலட்சம் ரூபா அல்லது 9.7 சதவீதமும், 161 இலட்சம் ரூபா அல்லது 13.3 சதவீதம் ஆகவும் இருந்தன. அதே வேளையில் உணவு, விவசாய அமைச்சின் குறைச்செலவு 1967/68ல் 221 இலட்சம் ரூபாய்கள் அல்லது 20.2 சதவீதமாகும். மாருக முன்னைய இரு நிதியாண்டுக் காலங்களில் இக்குறைச்செலவு முறையே 125 இலட்சம் ரூபாய்கள் அல்லது 14.5 சதவீதமாகவும், 26 இலட்சம் ரூபாய்கள் அல்லது 4.1 சதவீதமாகவும் இருந்தது. 1967/68ல் பொது வேலைகள் தபால் தந்திப் போக்குவரத்து அமைச்சின் குறைச்செலவு 14.3 சதவீதமாகும். மாருக, இது முன்னைய இரு நிதியாண்டுகளில் முறையே, 20.2 சதவீதமாகவும், 25.6 சதவீதமாகவும் இருந்தது.

### முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள்

முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள், முந்திய ஆண்டின் ரூபா 416 இலட்சம் கொண்ட தேறிய கொடுப்பனவுக்கெதிராக, 1967/68ல் ரூபா 285 இலட்சம் கொண்ட நிகர வரவுகளை விளைவித்தன. இத் தொழிற்பாடுகள்பற்றிய விவரங்கள் தற்பொழுது கிடைக்கக்கூடியவையாகவில்லை. 1967/68ன் தேறிய வரவுகள் பெரும்பாலும் இரப்பர்/அரிசி உடன்படிக்கையின்கீழ் மக்கள் சீனக் குடியரசுக்குச் சாதகமான மிச்சங்களின் ரூபா 952 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலாகும். இதில் ஒரு பகுதி அரசாங்கத் திணைக்களங்களுக்கான முற்பணங்களின் 709 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பினுல் ஈடுசெய்யப்பட்டது.

## பணக்குறையும், அதை நிதியீட்டலும்

### தேறிய பனக்குறை

1967/68 நிதியாண்டின் தேறிய பணக்குறை (தற்காலிகமாக) ரூபா 7,157 இலட்சமாகும். இது முந்திய ஆண்டின் குறையிலும்பார்க்க ரூபா 1,089 இலட்சம் கூடுதலானதாகவும், இதுவரை பதிவுசெய்யப்படாத மிக உயர்ந்த மட்டமானதாகவும் உள்ளது. இவ்வதிகரிப்பு, மீண்டெழுஞ் செலவிலேற்பட்ட ரூபா 2,909 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலும், மூலதன வாக்குப் பணங்களில் அறவிடத்தக்க செலவுகளிலேற்பட்ட ரூபா 897 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலும் ஏற்பட்டதாகும். எனினும், இது அரசிறை வருவாய்களிலேற்பட்ட ரூபா 2,016 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலும் முற்பணத் தொழிற்பாடுகளிலேற்பட்ட ரூபா 701 இலட்சம் கொண்ட தேறிய மாற்றத்தினுலும் ஓரளவில் எதிரீடுசெய்யப்பட்டது.[1]

1967/68ன் தேறிய பணக்குறை (உண்மையான தற்காலிகமான) இவ்வாண்டின் மூலமதிப்பீட்டிலும்பார்க்க ரூபா 290 இலட்சத்தால் உயர்வுற்றிருந்தது. இவ்வதிகரிப்பு மீண்டெழுஞ் செலவுகளிலேற்பட்ட ரூபா 1,589 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலும், மூலதன வாக்குப் பணங்களில் அறவிடப்படவேண்டிய செலவுகளிலேற்பட்ட ரூபா 493 இலட்சம் அதிகரிப்பினுலும் ஏற்பட்டதாகும். ஆயினும், இதன் விளைவு, முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளால் எழுந்த ரூபா 285 இலட்சம் கொண்ட தேறிய வரவுகளினுலும், அரசிறையிலேற்பட்ட ரூபா 1,507 இலட்சம் அதிகரிப்பினுலும் ஓரளவு எதிரீடுசெய்யப்பட்டது.

---

1. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளினுல் 1966/67ல் ரூபா 416 இலட்சமான தேறிய கொடுப்பனவு ஏற்பட்டிருக்கையில், 1967/68ல் ரூபா 285 இலட்சமான தேறிய வரவு ஏற்பட்டது.

நடைமுறை நிதியாண்டாகிய 1968/69ல் ரூபா 7,012 இலட்சம் கொண்ட தேறிய பணக்குறை எதிர்பார்க்கப்படுகின்றது. இது 1967/68ன் குறையிலும்பார்க்க ரூபா 145 இலட்சம் குறைவானதாகும். இது மதிப்பிடப் பட்ட செலவின் ரூபா 1,676 இலட்சம் அதிகரிப்பை[1] எதிர்பார்க்கப்படுகின்ற அரசிறையின் ரூபா 1,821 இலட்சம் அதிகரிப்பு மேலதிகமாக எதிரீடு செய்தமையாலாகும்.

பணக்குறையை நிதியீட்டல்

1964/65ம் ஆண்டிலிருந்து 1967/68ம் ஆண்டுவரையுள்ள காலப்பகுதி யின் தேறிய பணப் பற்றுக்குறைக்காய நிதியின் மூலங்களையும், விரிவுத் தாக்கத்தையும், 1968/69ம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்ட ஆலோசனை களையும் அட்டவணை II (ஊ) 8 காட்டுகின்றது.

1967/68ம் ஆண்டின் தேறிய பணப் பற்றுக்குறையாகிய 7,157 இலட் சம் ரூபாய்கள், உள்நாட்டு வங்கி மூலங்களிலிருந்து[2] பெறப்பட்ட கடன்பாடாகிய 3,035 இலட்சம் ரூபாய்களாலும், உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து கிடைத்த 2,483 இலட்சம் ரூபாய்களாலும், அந்நிய உதவி யில் இருந்து கிடைத்த 1,902 இலட்சம் ரூபாய்களாலும் உள்நாட்டுச் சந்தையல்லா மூலங்களிலிருந்து கிடைத்த 98 இலட்சம் ரூபாய்களினாலும் நிதியீட்டம் செய்யப்பட்டது. இதன் விளைவாகப் பண மீதங்கள் (இணைக்கிணை நிதிகள் உட்பட) 361 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

1967/68ம் ஆண்டில் அரசாங்கத்தின் நிதித் தொழிற்பாடுகளின் விரிவுத் தாக்கம் 2,674 இலட்சம் ரூபாய்களாகும். இது சென்ற ஆண்டின் நிதித் தொழிற்பாட்டைக் காட்டிலும் 2,113 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதி கரிப்பாக உள்ளது.[3] எனவே, 1965/66ல் மொத்தத் தேறிய பணக்குறையில் விரிவுத்தாக்கக் கூறு வகித்த விகிதசமமான 21.6 சதவீதம் 1966/67ல் 9.2 சதவீதத்திற்குக் குறைவடைந்து, 1967/68ல் குறிப்பிடத்தக்க அளவான 37.4 சதவீதத்தையெய்தியது. இதற்குள்ள முக்கிய காரணம் பணக்குறை நிதியீட்டத்திற்கான கடன்பாடுகளுக்கு வங்கித் தொழில் முறையில் அதிகரித் தளவிற் தங்கியிருந்தமையும், அதே வேளையில் அந்நிய மூலங்களிலிருந்து உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்தும் பெற்ற கடன்பாடுகள் குறை வுற்றமையும் ஆகும். அத்துடன், வங்கித் தொழில்களின் உடைமைகளி லிருந்த 216 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அரசாங்க இறக்குமதி உண்டியல் கள் மீட்கப்பட்டமையும் ஓரளவு காரணமாகும்.

வரவுசெலவுத் திட்டத் தேவைகளுக்கான வங்கித் தொழில் முறையி லிருந்துபெற்ற கடன்பாடுகளின் தேறிய அதிகரிப்பான 3,035 இலட்சம் ரூபாய் களில் ஏறக்குறைய முழுவதும் மத்திய வங்கியிடமிருந்தே பெறப்பட்ட மையை அட்டவணை II (ஊ) 8 காட்டுகின்றது. இது, சென்ற மூன்று நிதி யாண்டுகளிலும் குறிப்பிடத்தக்க அம்சமாக இருந்தது. உண்மையில், 1967/ 68ல் மத்திய வங்கியிலிருந்து பெற்ற கடன்பாடு சென்ற ஆண்டிலும்பார்க்க 1,764 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, 3,021 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. இக்கடன்பாடு, மத்திய வங்கியின் அதிகரித்த உடைமைகளான அரசாங்கப் பிணைகளிலேற்பட்ட 626 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப் பையும், 2,091 இலட்சம் ரூபாய்கள் கொண்ட இறைசேரி உண்டியல் களையும், மத்திய வங்கியின் முற்பணங்களில் வெளிநின்ற தொகையில் ஏற் பட்ட 304 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும் கொண்டுள்ள தாகும். மாறாக, வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்ற கடன்பாடு, முந்தைய ஆண்டில் ஏற்பட்ட 745 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேறிய வீழ்ச்சிக்கு எதிராக 1967/68ல் 14 இலட்சம் ரூபாய்களாக இருந்தது.[4] 1967/68ல் ஏற்பட்ட இக்கடன்பாடானது இறைசேரி உண்டியல் உடைமைகளில் ஏற்

1. முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் தேறிய வரவுகள் அல்லது கொடுப்பனவுகள் உட்பட.
2. இதில், இறக்குமதி உண்டியல் உடைமைகள் வடிவத்தில் வர்த்தக வங்கிகளால் அரசாங்கத்துக் கான கொடுகடன்கள் சேர்க்கப்படவில்லை; அட்டவணை II (ஊ) 8ன் அடிக்குறிப்பு (ஆ)வின்படி.
3. அட்டவணை II (ஊ) 8ன் அடிக்குறிப்பு (ஆ)வைப் பார்க்கவும்.
4. அட்டவணை II (ஊ) 8ன் அடிக்குறிப்பு (ஆ)வைப் பார்க்கவும்.

## பணக்குறையின் நிதியீட்டம் (அ) 1964/65இலிருந்து 1968/69வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலங்கள் | 1964-65 | | | 1965-66 | | | 1966-67 | | | 1967-68 (தற்காலிகமானவை) | | | 1968-69 வரவுசெலவு மதிப்பீடுகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அந்நிய நிதியீட்டம்: | | | | | | | | | | | | | | | |
| (அ) திட்டக் கடன்கள் (மொத்தம்) | 92.8 | | | 77.2 | | | 42.4 | | | 54.6 | | | | | |
| ஆழ்நிதி உதவுதொகைகளையும், திருப்பிக் கொடுப்பனவுகளையும் நீக்கி .. | 17.2 | 75.6 | | 35.9 | 41.3 | | 44.9 | -2.5 | | 47.8 | 6.8 | | | | |
| (ஆ) பண்டக் கடன்கள் (மொத்தம்) | — | | | 35.2 | | | 193.9 | | | 163.1 | | | | | |
| திருப்பிக் கொடுப்பனவை நீக்கி | — | — | | — | 35.2 | | 2.1 | 191.8 | | 8.7 | 154.4 | | | | |
| (இ) நன்கொடைகள் .. | | 24.1 | 99.7 | | 41.5 | 118.0 | | 19.3 | 208.6 | | 29.0 | 190.2 | | | 403.2 |
| 2. உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு | | | 50.3 | | | 112.2 | | | 72.3 | | | 9.8 | | | — |
| 3. வங்கித் தொழில் முறையிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு .. | | | | | | | | | | | | | | | |
| (அ) மத்திய வங்கி .. | | - 39.5 | | | 179.7 | | | 125.7 | | | 302.1 | | | | |
| (ஆ) வர்த்தக வங்கிகள் .. | | 57.2 | 17.7 | | - 17.4 | 162.3 | | - 74.5 | 51.3 | | 1.4 | 303.5 | | | 11.5 |
| 4. வங்கியல்லா மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு, கடன்பெற்ற மொத்தத் தொகை .. | | 294.4 | | | 314.8 | | | 364.5(இ) | | | 324.0 | | | | |
| ஆழ்நிதி உதவுதொகைகளை நீக்கி | | 51.2 | 243.2 | | 58.9 | 255.9 | | 67.5 | 297.0 | | 75.7 | 248.3 | | | 286.5 |
| 5. பண மிச்சங்களிலும், பண்ட உதவி இணைக்கிளை நிதிகளிலும் ஏற்பட்ட மாற்றம் | | | | | | | | | | | | | | | |
| (அ) பண மிச்சங்கள் .. | | 19.5 | | | - 47.2 | | | 21.5 | | | - 48.4 | | | — | |
| (ஆ) பண்ட உதவி இணைக்கிளை நிதிகள் (மொத்தக் கொடுகடன்கள்) | — | | | 35.2 | | | -193.9 | | | -187.7(ஈ) | | | -263.0 | | |
| வரவுசெலவுத்திட்டத்தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகையை நீக்கி | — | — | 19.5 | — | 35.2 | - 82.4 | 150.0 | - 43.9 | - 22.4 | 200.0 | 12.3 | - 36.1 | 263.0 | — | — |
| 6. தேறிய பணக் குறை .. | | | 430.4 | | | 566.0 | | | 606.8 | | | 715.7 | | | 701.2 |
| 7. ஐ. அ. உதவியாலான இணைக்கிளைநிதி வீழ்ச்சி | | | - 2.5 | | | 42.5 | | | 27.2 | | | — | | | — |
| 8. அரசாங்க நிதி இயக்கங்களின் தேறிய விரிவுத் தாக்கம் (3+5+7) .. | | | 34.7 | | | 122.4 | | | 56.1 | | | 267.4 | | | 11.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) சய அடையாளம் விடயங்கள் 1—4 ஐயும், 8 ஐயும் பொறுத்தவரையில் திருப்பிக் கொடுப்பனவையும் விடயங்கள் 5யும் 7ஐயும் பொறுத்தவரையில் அதிகரிப்பையும் குறிக்கின்றது.

(ஆ) இவ்வெண்தொகைகள் அரசாங்க இறக்குமதி (உணவு) உண்டியல்களின் பெறுமதியைக் கணக்கிலெடுக்கவில்லை. இவ் வெளிநின்ற உண்டியல்களின் தொகை 1965, 1966, 1967, 1968 செத்தெம்பர் இறுதியில் முறையே ரூ. 533 இலட்சம், ரூ. 760 இலட்சம், ரூ. 1223 இலட்சம், ரூ. 1007 இலட்சமாக இருந்தன.

(இ) சேமிப்பு நிலையங்களும், அரசாங்க முகவர் நிலையங்களும் தங்களிடமிருந்த மத்திய வங்கிப் பிணைகளை மீளப் பெற்ற பின்பு கொள்வனவுசெய்த அரசாங்கப் பிணைகளின் 534 இலட்சம் ரூபாய்கள்கொண்ட தொகையை உள்ளடக்கும்.

பட்ட 164 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பினதும், அதை ஓரளவில் எதிரீடுசெய்த ரூபாப் பிணைகளின் உடைமைகளிலேற்பட்ட 150 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியினதும், வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் ரூபா 1 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினதும் இணைந்த விளைவினால் ஏற்பட்டதாகும்.

வங்கியல்லா மூலங்களிலிருந்து 1967/68ல் கிடைத்த தேறிய உள் நாட்டுச் சந்தைக் கடன்பாடுகளான 2,483 இலட்சம் ரூபாய்கள், சென்ற ஆண்டிலும்பார்க்க 487 இலட்சம் ரூபாய்கள் குறைவானதாகும். ஒப்பு நோக்கும்போது, 1966/67ல் அது முன்னைய ஆண்டிலும்பார்க்க 411 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகவிருந்தது.[1] இத்துறையானது, 1961/62லிருந்து 1965/66 வரையுள்ள காலப்பகுதியில் தனது உதவுதொகைகளை ஆண் டொன்றிற்கு சராசரி 366 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளதென்ற உண்மையின்பேரில், அரசாங்கக் கடன்பாடுகளின்மீதான வட்டிவிகிதம் உயர்த்தப்படவேண்டுமென நாணயச் சபை, விதந்துரை செய்தது; இது 1968 ஏப்பிறல் 18ந் தேதி முதல் செயற்படுத்தப்பட்டது.

1966/67ல் நிலவியதைப்போன்று சேமிப்பு நிறுவனங்கள் ஊழியர் சேம நிதி ஏனைய சேமநிதிகள், இளைப்பாறற் சம்பள நிதிகள் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், காப்புறுதிக் கூட்டுநிலையங்கள், திணைக்கள நிதிகள், ஏனைய அரசகரும நிதிகள் என்பன 1967/68ல் அரசாங்கப் பிணைகளுக்கான (ரூபாப் பிணைகள் திறைசேரி உண்டியல்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்களை உள்ளடக்கிய) தமது உதவுதொகைகளை அதிகரித்தன. கீழேயுள்ள அட்ட வணை II (ஊ) 9 சென்ற மூன்று நிதியாண்டுகளின் வங்கியல்லா முதலீட்டக் காரர்களின் தொடர்பான எண்தொகைகளைக் காட்டுகின்றது.

அட்டவணை II (ஊ) 9

வங்கியல்லாத பிரதான முதலீட்டுத் தொகுதிகளின்படி, அரசாங்கப் (அ) பிணைகளுக்கான உதவுதொகைகள் (நிதியாண்டுகளுக்கு)

பத்து இலட்சம் ரூபாய்கள்

| உதவுதொகைகள் | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68 | அதிகரிப்பு: 1966-67 இலும் மேலாக 1967-68ல் | அதிகரிப்பு: 1965-66 இலும் மேலாக 1966-67ல் |
|---|---|---|---|---|---|---|
| 1. சேமிப்பு நிறுவனங்கள் ... | 37.9 | 37.0 | 88.6 (ஆ | 41.5 | –47.1 | 51.6 |
| 2. ஊழியர் சேமநிதி ... | 70.0 | 74.7 | 85.2 | 92.1 | 6.8 | 10.6 |
| 3. ஏனைய சேம இளைப்பாறற் சம்பள நிதிகள் ... | 28.4 | 41.1 | 41.3 | 30.2 | –11.1 | 0.2 |
| 4. திணைக்கள, ஏனைய அலுவலக நிதிகள் ... | 13.8 | 2.0 | 16.3 (ஆ | 7.0 | – 9.3 | 14.3 |
| 5. காப்புறுதிக்கூட்டுநிலையங்கள் | 42.2 | 46.2 | 47.9 | 52.8 | 4.9 | 1.7 |
| 6. ஏனைய காப்புறுதி நிதிகள்... | 3.4 | 10.3 | 0.1 | 4.2 | 4.1 | –10.2 |
| 7. ஏனைய அரசாங்க கூ. தாபனம் | — | — | – 0.7 | — | 0.7 | 0.7 |
| 8. கூட்டுநிலையங்களும், சங்கங்களும், நிறுவனங்களும் ... | – 2.1 | 6.1 | –12.3 | – 1.6 | 10.7 | –18.4 |
| 9. தனியாட்கள் ... | 2.7 | 15.2 | 6.5 | 0.1 | – 6.4 | – 8.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ரூபாப் பிணைகள், இறைசேரி உண்டியல்கள், வரிஒதுக்குப் பத்திரங்கள் என்பவற்றை அடக்கும்.

(ஆ) சேமிப்பு நிறுவனங்களின் உடைமைகளிலிருந்து மத்திய வங்கிப் பிணைகள் மீளக்கொள்வனவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த நிறுவனங்கள் கொள்வனவு செய்த ரூபா 534 இலட்சம் கொண்ட அரசாங்கப் பிணைகளையும் உள்ளடக்கும்.

1. அட்டவணை II (ஊ) 8ன்படி வங்கிகளல்லா மூலங்களிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 1966/67ல் ரூபா 411 இலட்சத்தால் அதிகரித்ததாகத் தெரிகின்றது. ஆனால் இது சேமிப்பு நிறுவனங்களின் உடைமையிலிருந்த மத்திய வங்கிப் பிணைகள் மீளக்கொடுப்பனவு செய்யப் பட்டதைத் தொடர்ந்து இந் நிறுவனங்கள் கொள்வனவுசெய்த ரூபா 534 இலட்சம்கொண்ட அரசாங்கப் பிணைகளையும் உள்ளடக்கும்.

1967/68ற் கிடைத்த மொத்த அந்நிய நிதித் தொகை 2,467 இலட்சம் ரூபாய்களாகும். இதில், 546 இலட்சம் ரூபாய்கள் திட்டக் கடன்களாகவும், 1,631 இலட்சம் ரூபாய்கள் பண்டக் கடன்களாகவும் 290 இலட்சம் ரூபாய்கள் நன்கொடைகளாகவும் கிடைத்தன. இது சென்ற ஆண்டிற் கிடைத்த மொத்த வரவுகளிலும்பார்க்க 89 இலட்சம் ரூபாய்கள் குறைவானதாகும். இதற்குக் காரணம் நன்கொடைகளிலும், திட்டக்கடன் களிலுமேற்பட்ட அதிகரிப்புகளால் ஓரளவு எதிரீடுசெய்யப்பட்டு பண்ட உதவி வரவுகள் வீழ்ச்சியடைந்தமையாகும். 1967/68 ன் ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிக்கான உதவுதொகைகளும், அந்நியக் கடன்களின் நேரடியான திருப் பிக் கொடுப்பனவுமான 565 இலட்சம் ரூபாய்களை (ஒப்பியல்பாக முந்திய ஆண்டில் ரூபா 470 இலட்சம்) நீக்கியபின், 1967/68ன் தேறிய அந்நிய உதவியானது 1,902 இலட்சம் ரூபாய்களாகும்.

சென்ற ஆண்டினைப் போன்று 1967/68ல் கடன்நிதியானது வெளி நாட்டு நிதியிற் பெரும் பங்கை வகித்தது. எனினும், சிறிதளவில் அதன் பங்கு வீழ்ச்சியடைந்தது. 1967/68ற் கிடைத்த மொத்த அந்நிய நிதியில் இது 88.2 சதவீதத்திற்கு வகைதந்தது. மீதி நன்கொடைகளாகும். ஒப்புநோக்கும் போது, முன்னைய ஆண்டில் இது 92.4 சதவீதமாகவிருந்தது (மீதிப்பங்கு நன்கொடைகளாகும்). இதில் முக்கிய இடத்தை வகித்த பண்ட உதவி யானது 1966/67ல் மொத்த உதவியில் 75.9 சதவீதமாக இருந்ததற்கெதிராக 1967/68ல் இது 66.1 சதவீதமாகவிருந்தது. இதே வேளையில், ஒப்பீட்டடிப் படையில் திட்டவுதவியும், நன்கொடைகளும் தத்தம் பங்குகளை அதிகரித்த போதிலும், வரவுசெலவுத் திட்ட நிதியீட்டலில் அவை சிறிய முக்கியத்துவம் வகிக்கின்றனவென்பது அவதானிக்கப்பாலது.

மறுபக்கத்திள்ள அட்டவணை II (ஊ) 10 கடந்த ஏழு ஆண்டுக் காலத்தில் வகைகளின்படியும், மூலங்களின்படியும் அடிப்படையில் அந்நிய உதவியின் தேறிய வரவுகளினது விவரங்களைக் கொடுக்கின்றது. முன்னைய இரு நிதி யாண்டுகளைப்போன்று 1967/68ம் ஆண்டிலும் கனடா நன்கொடை உதவி களில் பெரும்பங்கை வழங்கியது. அதே வேளையில், ஐக்கிய நாடுகளும் குறிப் பிடத்தக்க பங்கினை வழங்கியது. கடன்கள் வழங்கிய முக்கிய நாடுகள் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், சேர்மன் சமஷ்டிக் குடியரசு, யப்பான், பிரான்சு என்பனவாகும். அந்நியக் கடன் உதவிகள் பற்றிய மிக விரிவான ஆய்வு தொடர்ந்துவரும் 'பொதுப்படுகடன்' பிரிவில் இடம் பெறும்.

## பொதுப்படுகடன்

மீளப்பார்வையிடும் ஆண்டில் (அதாவது 1968 செத்தெம்பரில் முடி வடையும் ஆண்டில்), மொத்தப் பொதுப்படுகடன்[1] 9,204 இலட்சம் ரூபாய்களால், 62,419 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்திருக்கையில், தேறிய பொதுப்படுகடன்[1] 8,781 இலட்சம் ரூபாய்களால் 56,604 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. முழு மொத்தக் கடனில் 51,965 இலட்சம் ரூபாய்கள் அல்லது 83.3 சதவீதம் உள்நாட்டுக்கடனாக அமைந்திருக்க, மீதியான 10,454 இலட்சம் ரூபாய்கள் அல்லது 16.7 சதவீதம் அந்நியக் கடனாக அமைந்தது.

பொதுப்படுகடனின் விவரங்கள் பின்னிணைப்பிலுள்ள அட்டவணைகள் 24லும், 25லும் காட்டப்பட்டுள்ளன. கடந்த ஐந்து நிதியாண்டுகளின் முடி வில் பொதுப்படுகடனின் (மொத்தத் தேறிய) உள்நாட்டு அந்நியப் பங்குகள் 215ம் பக்கத்திலுள்ள அட்டவணை II (ஊ) 11ல் தரப்பட்டுள்ளன.

---

1. அட்டவணை II (ஊ) 11 நிற்கான அடிக்குறிப்பு 'அ'வைப் பார்க்கவும்.

## அட்டவணை II (ஊ) 10

### அந்நிய உதவியின் தேறிய வரவுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வளங்களும் மூலங்களும் | 1961-62 | 1962-63 | 1963-64 | 1964-65 | 1965-66 | 1966-67 | 1967-68 உண்மையான கற்தாலிகமான |
|---|---|---|---|---|---|---|---|
| 1. கடன்கள்: | **34.8** | **60.9** | **63.5** | **75.6** | **76.5** | **189.3** | **161.2** |
| (அ) ச.பு.அ.வ. .. .. | 25.6 | 21.2 | 11.3 | 5.0 | –1.2 | –0.3 | –7.7 |
| (ஆ) கனடா .. .. | –1.3 | 0.8 | –0.2 | 11.4 | 2.5 | 8.1 | 8.6 |
| (இ) சீன மக்கட் குடியரசு | –1.0 | — | 12.4 | 18.9 | 9.7 | –4.9 | –5.5 |
| (ஈ) ஐக்கிய இராச்சியம் .. | 0.4 | 10.4 | 4.9 | –2.3 | 10.6 | 49.4 | 51.9 |
| (உ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் | 7.6 | –0.7 | 2.7 | –1.2 | 23.8 | 31.0 | 45.6 |
| (ஊ) ஐ.ச.சோ.கு. .. | 3.4 | 13.5 | 32.0 | 28.8 | 9.3 | –10.0 | –8.3 |
| (எ) சேர்மன் சமஷ்டிக்குடியரசு | — | 11.5 | 0.4 | 7.4 | 6.7 | 66.2 | 25.0 |
| (ஏ) யூகோசிலேவியா .. | — | 4.3 | ... | –0.3 | 0.8 | –1.4 | –0.7 |
| (ஐ) போலாந்து .. | — | — | — | 2.4 | 0.1 | 0.1 | 1.4 |
| (ஒ) பிரான்சு .. .. | — | — | — | 5.5 | 1.6 | 10.8 | 22.0 |
| (ஓ) யப்பான் .. | — | — | — | — | 10.0 | 31.3 | 24.0 |
| (ஔ) இந்தியா .. .. | — | — | — | — | 2.6 | 8.0 | –3.4 |
| (க) சேர்மன் சனநாயகக் குடியரசு | — | — | — | — | — | 1.1 | 8.3 |
| 2. நன்கொடைகள்: | **18.1** | **31.1** | **31.9** | **24.1** | **41.5** | **19.2** | **29.0** |
| (அ) கொழும்புத் திட்டம் | 4.4 | 8.2 | 6.0 | 9.0 | 25.9 | 17.5 | 22.1 |
| (1) அவுஸ்திரேலியா .. | — | 2.5 | — | 3.9 | 0.3 | 4.6 | — |
| (2) கனடா .. | 4.4 | 5.7 | 5.7 | 5.1 | 25.6 | 12.8 | 22.1 |
| (3) யப்பான் .. | — | — | 0.3 | — | — | — | — |
| (4) நியூசீலாந்து .. | — | — | — | — | — | –0.1 | ... |
| (ஆ) ஏனைய .. .. | 13.7 | 22.9 | 25.9 | 15.1 | 15.6 | 1.7 | 6.8 |
| (1) ஐக்கிய நாடுகள் .. | — | — | — | — | 1.0 | 1.5 | 6.3 |
| (2) சீன மக்கட் குடியரசு .. | 8.3 | 19.7 | 24.5 | 15.1 | 2.5 | — | ... |
| (3) ஐக்கிய அமெரிக்க நாடுகள் | 1.6 | 0.9 | 1.4 | ... | 12.1 | 0.2 | 0.5 |
| (4) சேர்மன் சமஷ்டிக் குடியரசு | 3.8 | 2.3 | — | ... | — | — | — |
| (5) செக்கோசிலேவியா | — | — | — | — | — | ... | — |
| (6) ஐக்கிய இராச்சியம் | — | — | — | — | — | ... | — |
| 3. கடன்களினதும் நன்கொடைகளினதும் மொத்தம் | **52.9** | **92.0** | **95.4** | **99.7** | **118.0** | **208.6** | **190.2** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை II (ஊ) 11

### மொத்தப் பொதுப்படுகடன் (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செத்தெம்பர் முடிவிலுள்ளபடி | 1964 | | 1965 | | 1966 | | 1967 | | 1968 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % | தொகை | % |
| 1. மொத்தக் கடன்: | **3787.4** | **100.0** | **4184.8** | **100.0** | **4743.3** | **100.0** | **5321.5** | **100.0** | **6241.9** | **100.0** |
| (அ) அந்நிய .. | 412.1 | 10.9 | 489.3 | 11.7 | 548.8 | 11.6 | 739.3 | 13.9 | 1045.4 | 16.7 |
| (ஆ) உள்நாட்டு | 3375.3 | 89.1 | 3695.5 | 88.3 | 4194.5 | 88.4 | 4582.2 | 86.1 | 5196.5 | 83.3 |
| 2. தேறிய கடன்(ஆ): | **3436.0** | **100.0** | **3771.9** | **100.0** | **4267.6** | **100.0** | **4782.3** | **100.0** | **5660.4** | **100.0** |
| (அ) அந்நிய .. | 373.5 | 10.9 | 446.6 | 11.8 | 521.1 | 12.2 | 708.0 | 14.8 | 1009.4 | 17.8 |
| (ஆ) உள்நாட்டு | 3062.5 | 89.1 | 3325.3 | 88.2 | 3746.5 | 87.8 | 4074.3 | 85.2 | 4651.0 | 82.2 |
| 3. மொத்தத் தேசிய உற்பத்தி (இ) .. | **7,319.9** | | **7,483.5** | | **7,699.0** | | **8,223.8** | | **9,808.7** | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) நீக்கப்பட்டுள்ளவை:—(i) 1968 செத்தெம்பர் முடிவிலுள்ளபடியான தேசிய வீடமைப்பினதும், தேசிய ஈட்டு வங்கியினதும் கடன் முறிகளின் தொகையாகிய முறையே, 930 இலட்சம் ரூபாய்கள், 333 இலட்சம் ரூபாய்கள் (ii) அரசாங்கத் திணைக்களங்களினுல் ஒழுங்கு செய்யப்பட்ட நிரப்பலர் கொடுகடன் (iii) சர்வதேச நிதி நிறுவனங்களின் சார்பில் வழங்கப்பட்ட வாக்கு நிதிப் பத்திரங்கள்.

(ஆ) மொத்தக் கடனிலிருந்து ஸ்டேர்லிங், ரூபாக் கடன்களைப் பொறுத்தவரையிலான ஆழ்நிதிகளைக் கழித்து. (இ) பஞ்சாங்க ஆண்டுகளுக்காக.

1967/68 நிதியாண்டில், மொத்தக் கடனினதும், தேறிய கடனினதும் அதிகரிப்புக்கள் (முறையே, 9,204 இலட்சம் ரூபாய்களும், 8,781 இலட்சம் ரூபாய்களும்) முந்திய நிதியாண்டின் தொடர்பான அதிகரிப்புக்களை விட (முறையே 5,782 இலட்சம் ரூபாய்களாலும், 5,147 இலட்சம் ரூபாய்களாலும்) மேலாகவிருந்தன.

மொத்தக் கடனிலேற்பட்ட அதிகரிப்பு உள்நாட்டு மொத்தக் கடனிலேற்பட்ட 6,143 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பாலும், அந்நிய மொத்தக் கடனிலேற்பட்ட 3,061 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பாலுமாகும். முந்திய நிதியாண்டில் பொதுப்படுகடனின் உள்நாட்டு, அந்நிய கூறுகளிலேற்பட்ட அதிகரிப்புக்கள் முறையே, 3,877 இலட்சம் ரூபாய்களும், 1,905 இலட்சம் ரூபாய்களுமாகும். எனினும், 1967/68ல் அந்நிய கடன்பாட்டிலேற்பட்ட அதிகரிப்பு, 1967 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஸ்டேர்லிங்கினதும், ரூபாயினதும் நாணய மதிப்பிறக்கத்தின் (இது பின்பு விளக்கப்படும்) ஒருமித்த விளைவினுல் அந்நிய கடன்பாட்டின் ரூபாய்ப் பெறுமதி 1,444 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்ததினுலாகும். உண்மையில், 1967/68 நிதியாண்டில் மொத்தப் பொதுப்படுகடனிலேற்பட்ட அதிகரிப்பு, முந்திய நிதியாண்டுகளிற் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்புக்களைவிடக் கணிசமானளவில் அதிகமாகவிருந்தது.

1968 செத்தெம்பர் முடிவில் தேறிய அந்நிய கடன்பாடு 3,014 இலட்சம் ரூபாய்களால் அல்லது 42.6 சதவீதத்தால் 10,094 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தமை குறிப்பிடத்தக்கதாகும். ஸ்டேர்லிங் ரூபாய் நாணய மதிப்பிறக்கங்களினுல் ஏற்பட்ட அதிகரிப்பைவிட, ஏனைய அதிகரிப்பு 1,570 இலட்சம் ரூபாய்களாக அல்லது 22.2 சதவீதமாக அமைந்தது. இது, கடந்தாண்டிற் கூர்ந்து அவதானிக்கப்பட்ட தளராது வளர்ந்துவரும் அதிகரிப்பை மேலும் பலப்படுத்தியுள்ளது. மீளப்பார்வையிடும் ஆண்டில் முழுத்தேறிய கடனினது அந்நிய பங்கின் அதிகரிப்பு, முந்திய ஆண்டின் 2.6 சதவீத அதிகரிப்புக்கெதிராக 3.0 சதவீதமாக அமைந்தது. 1968 செத்தெம்பரில் முழுத் தேறிய கடனில் அந்நிய கடன்பகுதி 17.8 சதவீதத்துக்கு வகைகூறியது. உண்மையில், கடந்த ஐந்தாண்டுகளில் தேறிய அந்நிய கடன்பாடு இருமடங்குக்கு மேலாக அதிகரித்திருக்க (அதிகரிப்பானது 224.0 சதவீதமாகும்) உள்நாட்டுக் கடன்பாடு, மூன்றிலிரண்டு பங்குக்கு சிறிது மேலாகவே அதிகரித்துள்ளது (அதிகரிப்பானது 68.9 சதவீதமாகும்).

கடந்த ஐந்தாண்டுகளாக மொத்தத் தேசிய உற்பத்திக்குப் பொதுப்படு கடனின் விகிதம் தளராது வளர்ச்சியுற்று வந்திருப்பது குறிப்பிடத்தக்க தொரு விடயமாகும்.[1] 1964ல் மொத்தத் தேசிய உற்பத்தியில் (நடைமுறைச் சினைக் கொள்விலைப்படி) 51.7 சதவீதமாக விளங்கிய மொத்தக் கடன் 1967ல் 63.6 சதவீதமாக விளங்கிற்று. இதனில், அந்நிய கடனின் பங்கு 1964ன் 5.6 சதவீதத்திலிருந்து 1968ல் 10.7 சதவீதத்துக்கு அதிகரித்தது. இதே காலப்பகுதியில் உள்நாட்டுக் கடனின் பங்கு 46.1 சதவீதத்திலிருந்து 53.0 சதவீதத்துக்கு அதிகரித்தது.

1968/69 நிதியாண்டில் அரசாங்கம் வங்கியல்லா மூலங்களிலிருந்து 3,750 இலட்சம் ரூபாய்களையும், அந்நிய மூலங்களிலிருந்து 4,760 இலட்சம் ரூபாய்களையும் திரட்டுவதற்கு எண்ணியுள்ளது. பின்கூறப்பட்ட தொகை 2,130 இலட்சம் ரூபாய்கள் கொண்ட திட்டக் கடன்களையும், 2,630 இலட்சம் ரூபாய்கள் கொண்ட பண்டக் கடன்களையும் கொண்டுள்ளது.

**உள்நாட்டுக் கடன்**

முந்திய நிதியாண்டின் முடிவில் 45,822 இலட்சம் ரூபாய்களாக அமைந்த மொத்த உள்நாட்டுக் கடன், 1968 செத்தெம்பர் முடிவில் 6,143 இலட்சம் ரூபாய்களால் (அல்லது 13.4 சதவீதத்தால்) 51,965 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. கீழுள்ள அட்டவணை II (ஊ) 12, கடந்த நான்காண்டுகளின் செத்தெம்பர் முடிவில் உள்ளபடியான உள்நாட்டுக் கடன்களினது அமைப்பினையும், அவற்றின் மாற்றங்களையும் தருகின்றது.

அட்டவணை II (ஊ) 12

உள்நாட்டுப் பொதுப்படுகடன் அமைப்பின் மாற்றங்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| செத்தெம்பர் முடிவிலுள்ளபடி | ரூபாக் கடன்கள் | | | இறை சேரி உண்டியல்கள் | வரிஒதுக்குப் பத்திரங்கள் | மத்திய வங்கி முற்பணங்கள் | தேசிய அபிவிருத்தி முறிகள் (இ) | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | ஆழ்நிதி (அ) | தேறிய | | | | | மொத்த | தேறிய |
| 1965 | 2149.6 | 370.2 | 1779.4 | 1300.0 | 32.7 | 213.1 | 0.1 | 3695.5 | 3325.3 |
| 1966 | 2474.6 | 448.0 | 2026.6 | 1425.0 | 32.2 | 262.6 | 0.1 | 4194.5 | 3746.5 |
| 1967 | 2784.8 | 507.8 | 2276.9 | 1500.0 | 25.7 | 271.6 | 0.1 | 4582.2 | 4074 3 |
| 1968 | 3117.9 | 545.5 | 2572.4 | 1750.0 | 24.0 | 304.5 | 0.1 | 5196.5 | 4651.0 |
| மாற்றம் (ஈ) 1966–65 | +325.0 | +77.8 | +247.2 | +125.0 | —0.5 | +49.5 | — | +499.0 | +421.2 |
| மாற்றம் (ஈ) 1967–66 | +310.2 | +59.8 | +250.3 | +75.0 | —6.5 | +9.0 | — | +387.7 | +327.8 |
| மாற்றம் (ஈ) 1968–67 | +333.1 | +37.7 | +295.5 | +250.0 | —1.7 | +32.9 | — | +614.3 | +576.7 |

மூலம்: இலங்கை மத்தியவங்கி.

(அ) ஆழ்நிதிகளின் (துணையான ஆழ்நிதிகளையும் உள்ளடக்கிய) பெயரிற் கொள்ளப்பட்ட முதலீடுகளின் சந்தைப் பெறுமதியைக் குறிக்கும்.

(ஆ) ச.நா.நி., ச.பு.அ.வ., ச.அ.ச.ஆ.அ.வ. ஆகிய நான்கு நிறுவனங்களுக்கும் இலங்கையின் உறுப்புரிமை கட்டணங்களின் கொடுப்பனவுக்கான விசேட கடன்களை உள்ளடக்கும். 1967 செத்தெம்பர் முடிவிலும், 1968 செத்தெம்பர் முடிவிலும் முறையே 844 இலட்சம் ரூபாய்களாகவும், 869 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கிய இத்தொகையை நீக்கிக் கழிக்கப்பட்டதனல் 1967/68ல் மத்திய வங்கி முற்பணங்கள் 304 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இவ்விசேட கடன்கள், சர்வதேச நிதி நிறுவனங்களின் சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்களை நீக்குகின்றன.

(இ) 1967 செத்தெம்பர் முடிவிலும் 1968 செத்தெம்பர் முடிவிலும் வழங்கப்பட்டதும், வெளி நின்றதுமான தேசிய அபிவிருத்தி முறிகளின் பெறுமதி முறையே ரூபா 67,542உம் ரூபா 58,828உம் ஆகும். (ஈ) சக (+) அடையாளம் அதிகரிப்பைக் குறிக்கின்றது.

1. இவ்விகிதமானது பஞ்சாங்க ஆண்டுகளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தி எண்தொகைகளுக்கும், செத்தெம்பரில் முடிவடையும் நிதியாண்டுகளிலுள்ள பொதுப்படுகடன் எண்தொகைகளுக்குமிடையிற் கணிக்கப்பட்டுள்ளது. பஞ்சாங்க ஆண்டிலுள்ள பொதுப்படுகடன் எண்தொகைகள் பாவிக்கப்பட்டால், விகிதங்கள் உயர்வாகவிருந்திருக்கும்.

மீளப்பார்வையிடும் ஆண்டில் மொத்த உள்நாட்டுக் கடனிலேற்பட்ட அதிகரிப்பு, ரூபாய்ப் பிணைகளிலேற்பட்ட 3,331 இலட்சம் ரூபாய்கள் கொண்டவதிகரிப்பையும், இறைசேரி உண்டியல்களிலேற்பட்ட 2,500 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பையும், 329 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மத்திய வங்கி முற்பணங்களையும், ஓரளவுக்கு எதிரீடுசெய்த 17 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வரி ஒதுக்குப் பத்திரங்களின் வீழ்ச்சியையும் கொண்டுள்ளது. இதற்கெதிர்மாறாக, முந்திய ஆண்டில் ரூபாய்க் கடன்கள் 3,102 இலட்சம் ரூபாய்களாலும், இறைசேரி உண்டியல்கள் 750 இலட்சம் ரூபாய்களாலும், மத்திய வங்கி முற்பணங்கள் 90 இலட்சம் ரூபாய்களாலும் அதிகரித்தன. வரி ஒதுக்குப் பத்திரங்கள் 65 இலட்சம் ரூபாய்களால் வீழ்ச்சியுற்றன.

1968 செத்தெம்பர் முடிவில் வெளிநின்ற முழு மொத்த உள்நாட்டுக் கடனில் ரூபாய்ப் பிணைகள் 31,179 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 60.0 சதவீதத்துக்கு வகைகூறியன. மீதி, 17,500 இலட்சம் ரூபாய்கள் கொண்ட (அல்லது 33.6 சதவீதம்) இறைசேரி உண்டியல்களையும், 240 இலட்சம் ரூபாய்கள் கொண்ட (அல்லது 0.5 சதவீதம்) வரி ஒதுக்குப் பத்திரங்களையும், 3,045 இலட்சம் ரூபாய்கள் கொண்ட (அல்லது 5.9 சதவீதம்) மத்திய வங்கி முற்பணங்களையும், 1 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேசிய அபிவிருத்தி முறிகளையும் கொண்டிருந்தது.

1968 செத்தெம்பர் 30ந் தேதியிலுள்ளபடியான மொத்த உள்நாட்டுக் கடனின் முதிர்ச்சி அமைப்பு, முந்திய நான்கு நிதியாண்டுகளுக்கான ஒப்பியல்சார்ந்த தரவுகளுடன் அட்டவணை II (ஊ) 13ற் காட்டப்பட்டுள்ளது.

### அட்டவணை II (ஊ) 13

### உள்நாட்டுக்கடன் — முதிர்ச்சியின்படியான பகுப்பு
(செத்தெம்பர் முடிவிலுள்ளபடி)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| முதிர்ச்சியின் ஆண்டுகள் | 1964 | | 1965 | | 1966 | | 1967 | | 1968 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| 1. நிதியாக்கம் பெறாக் கடன் (அ) ... | 1,465.9 | 43.4 | 1,545.9 | 41.8 | 1,719.8 | 41.0 | 1,797.4 | 39.2 | 2,978.8 | 40.0 |
| 2. நிதியாக்கம் பெற்ற கடன் (ஆ) ... | 1,909.4 | 56.6 | 2,149.6 | 58.2 | 2,474.7 | 59.0 | 2,78.48 | 60.8 | 3,117.9 | 60.0 |
| (அ) 5 ஆண்டுகளுக்குமுன் ... | 205.8 | 6.1 | 245.5 | 6.6 | 292.1 | 7.0 | 252.6 | 5.5 | 452.1 | 8.7 |
| (ஆ) 5-10 ஆண்டுவரை | 445.0 | 13.2 | 392.3 | 10.6 | 354.5 | 8.5 | 367.7 | 8.0 | 315.7 | 6.1 |
| (இ) 10-15ஆண்டுவரை | 216.6 | 6.4 | 336.6 | 9.1 | 386.0 | 9.2 | 386.0 | 8.4 | 249.1 | 4.8 |
| (ஈ) 15-20 ஆண்டுவரை | 247.0 | 7.3 | 127.1 | 3.4 | 324.1 | 7.7 | 324.1 | 7.1 | 600.0 | 11.5 |
| (உ) 20-25ஆண்டுவரை | 795.0 | 23.6 | 1,048.1 | 28.4 | 1,118.0 | 26.7 | 1,454.4 | 31.7 | 1,501.0 | 28.9 |
| மொத்தம் | 3,375.3 | 100.0 | 3,695.5 | 100.0 | 4,194.5 | 100.0 | 4,582.2 | 100.0 | 5,196.5 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திறைசேரி உண்டியல்கள் வரி ஒதுக்குப் பத்திரங்கள், மத்திய வங்கி முற்பணங்கள், தேசிய அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

(ஆ) முதிர்ச்சி அடையும் கடைசித் தேதியின்படி.

1966, 1967ம் ஆண்டறிக்கைகளில் கடந்த நான்காண்டுகளாக உள்நாட்டுக் கடனின் தவணை அமைப்பு நீண்டுவருகின்றதென்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், 1967/68ல் 20 ஆண்டுகள் முதிர்ச்சியைக் கொண்ட உள்நாட்டுக் கடன், மொத்த உள்நாட்டுக் கடனில், 28.9 சதவீதமாக அமைந்து, இந்நிதியாண்டில் 2.8 சதவீதப்புள்ளிகள் கொண்ட வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. கடந்த நிதியாண்டின் ஒப்பியல்பான மாற்றம் 5.0 சதவீதம் கொண்டவதிகரிப்பாகும். இதற்கிடையில், 5 ஆண்டுகளுக்குக் குறைவான முதிர்ச்சியை உடைய கடன், மொத்தக் கடனில் 8.7 சதவீதத்திற்கு வகைகூறியுள்ளது. இது, இந்த நிதியாண்டிலேற்பட்ட 3.2 சதவீத அதிகரிப்பாகும். முந்திய நிதியாண்டில் 1.5 சதவீதப் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டது. இவ்வாண்டில் நிதியீட்டப்பட்ட கடன் 0.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்க, நிதியீட்டப்படாத கடன் இதேயளவால் உயர்வுற்றது.

### ரூபாய்ப் பிணைகள்

1967/68 நிதியாண்டுப் பகுதியில் 3,597 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகைக்காக 12 ரூபாய்க் கடன்கள் திரட்டப்பட்டன. இவற்றில், 3,500 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட 11 கடன்கள் முற்றிலும் பணவடிவத்திலாகும். மீதிக் கடனாகிய 3¼ சதவீத 1972-74 'பீ' தொடர்க் கடன், இவ்வாண்டில் முதிர்ச்சியடைந்த 3 சதவீத 1965/67 கடனை மாற்றல் செய்வதன் மூலம் பெறப்பட்டது. இம்மாற்றற் கடனை நீக்கின், ரூபாய்ப் பிணைகளாற் திரட்டப்பட்ட வளங்கள் 3,500 இலட்சம் ரூபாய்களாகும். குறுகிய கால மாற்றுக் கடனைவிட, திரட்டப்பட்ட ஏனைய கடன்கள் 21-25 ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் நீண்டகாலக் கடன்களாகும்.

இதற்கு முரணாக, முந்திய நிதியாண்டில், 3,908 இலட்சம் ரூபாய்களுக்கு 15 ரூபாய்க் கடன்கள் திரட்டப்பட்டன. இவைகளில், 508 இலட்சம் ரூபாய்கள் கொண்ட 3 கடன்கள் மாற்றலுக்கான கடன்களாகும். திரட்டப்பட்ட வளங்கள் 3,400 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. பண நோக்கங்களுக்காகத் திரட்டப்பட்ட பன்னிரண்டு கடன்களிலொன்று குறுகிய காலக் கடனாகும். ஏனையவை 21லிருந்து 25 ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் நீண்ட காலக் கடன்களாகும்.

1967/68 காலக் கட்டத்தில் திரட்டப்பட்ட ஒவ்வொரு ரூபாய்க் கடனுக்குமான உதவுதொகைகளைப்பற்றிய விவரங்கள் பின்னிணைப்பு IIலுள்ள அட்டவணை 27ல் தரப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளின் ரூபாய்க் கடன்களுக்கான உதவுதொகைகளின் சுருக்கம், அட்டவணை II (ஊ) 14ல் தரப்பட்டுள்ளது.

1967/68ல் திரட்டப்பட்ட தொகையில் 1,141 இலட்சம் ரூபாய்களை அல்லது 31.7 சதவீதத்தை ஆழ்நிதிகள் உட்கொண்டன. ஏனைய முக்கிய உதவுதொகையாளர்கள் ஊழியர் சேமநிதி (926 இலட்சம் ரூபாய்கள்) அல்லது 25.7 சதவீதம்), காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (532 இலட்சம் ரூபாய்கள் அல்லது 14.8 சதவீதம்), சேமிப்பு நிலையங்கள்[1] (488 இலட்சம் ரூபாய்கள் அல்லது 13.6 சதவீதம்), ஊழியர் சேமநிதி தவிர்ந்த நம்பிக்கைப் பொறுப்புக்கள், உபகார இளைப்பாறற் சம்பள சேமநிதிகள் (292 இலட்சம் ரூபாய்கள் அல்லது 8.1 சதவீதம்) ஆகியவையாகும்.

கடந்த ஆண்டின் ஆண்டறிக்கையில் கவனிக்கப்பட்ட, அரசாங்கத்தின் கடன்பாட்டிற்கு, ஊழியர் சேமநிதி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஆழ்நிதிகள், பொதுச் சேமிப்பு நிலையங்கள்[2] போன்ற அரசாங்க சார்புடைய நிலையங்களின் அதிகரித்துக்கொண்டிருக்கும் ஆதரவுப் போக்கு, மீளப் பார்வையிடும் ஆண்டிலும் தொடர்ந்தது. உண்மையில் இந்நிலையங்கள்

---

1. தபாற் கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, சேமிப்புச் சான்றிதழ் நிதி ஆகியவற்றை உள்ளடக்கும்.
2. முந்திய ஆண்டில் கணிசமான அதிகரிப்பு இருந்தும், 1967/68ல் சேமிப்பு நிலையங்களின் உதவு தொகையில் வீழ்ச்சி காணப்பட்டது.

அட்டவணை II (ஊ) 14

## ரூபாப் பிணைகளுக்கான உதவுதொகைகளின் பகுப்பாய்வு (அ) 1964/65இலிருந்து 1967/68வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| சந்தாக்காரர்கள் | 1964/65 | | 1965/66 | | 1966/67 | | 1967/68 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| 1. வர்த்தக வங்கிகள் .. | 1.0 | 0.4 | 17.9 | 5.1 | 13.5 | 3.5 | 0.8 | 0.2 |
| 2. கூட்டுறவு வங்கிகள் .. | — | — | — | — | 0.3 | 0.1 | — | — |
| 3. சேமிப்பு நிலையங்கள் .. | 38.8 | 14.7 | 37.2 | 10.6 | 74.7 | 19.1 | 48.8 | 13.6 |
| 4. ஆழ்நிதிகள் .. .. | 52.5 | 19.9 | 104.5 | 29.8 | 96.3 | 24.6 | 114.1 | 31.7 |
| 5. திணைக்கள, ஏனைய அரசகரும நிதிகள் .. .. | 14.4 | 5.5 | 3.7 | 1.1 | 10.2 | 2.6 | 9.5 | 2.6 |
| 6. நம்பிக்கைப் பொறுப்புக்கள், உபகார இளைப்பாறற் சம்பள சேமநிதிகள் | | | | | | | | |
| (அ) ஊழியர் சேமநிதி .. | 72.4 | 27.4 | 74.6 | 21.2 | 85.0 | 21.8 | 92.6 | 25.7 |
| (ஆ) ஏனையவை .. | 31.5 | 11.9 | 39.2 | 11.2 | 43.1 | 11.0 | 29.2 | 8.1 |
| 7. காப்புறுதி நிதிகள் | | | | | | | | |
| (அ) காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 42.2 | 16.0 | 46.2 | 13.2 | 47.9 | 12.3 | 53.2 | 14.8 |
| (ஆ) காப்புறுதிக் கூ. நிலையங்கள் | 6.6 | 2.5 | 10.6 | 3.0 | 10.6 | 2.7 | 4.4 | 1.2 |
| 8. ஏனைய கூட்டுநிலையங்கள் .. | 0.2 | 0.1 | 0.5 | 0.1 | 0.3 | 0.1 | 0.8 | 0.2 |
| 9. தனியாட்கள், சங்கங்களும், நிலையங்களும் .. .. | 4.6 | 1.7 | 17.0 | 4.8 | 8.9 | 2.3 | 6.6 | 1.8 |
| மொத்தம் | 263.9 | 100.0 | 351.2 | 100.0 | 390.8 | 100.0 | 359.7 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ரூபாக் கடன்களை மாத்திரமே குறிக்கின்றது.

கடந்த நான்கு ஆண்டுகளில் முறையே, 2,059 இலட்சம் ரூபாய்கள், 2,625 இலட்சம் ரூபாய்கள், 3,039 இலட்சம் ரூபாய்கள், 3,087 இலட்சம் ரூபாய்கள் கொண்ட உதவுதொகைகளை அளித்து, அந்தந்த ஆண்டுகளின் மொத்த உதவு தொகைகளின் முறையே, 78.0 சதவீதம், 74.8 சதவீதம், 77.8 சதவீதம், 85.8 சதவீதத்திற்கு வகைகூறின.

1967/68ம் நிதியாண்டின் இறுதியில் அரசாங்கப் பிணைகளின் உடைமையாளர்களின் பகுப்பாய்வு முந்திய நான்கு நிதியாண்டுகளுக்கான ஒப்பியல்பான தரவுகளுடன் அட்டவணை II (ஊ) 15ல் தரப்பட்டுள்ளன.

1963/64லிருந்து 1966/67 வரை அரசாங்கப் பிணைகளின்மீதான உடைமைகளைக் குறைக்கும் போக்கைக் காட்டிய வங்கித் துறை, 1967/68ல் தனது உடைமைகளை 476 இலட்சம் ரூபாய்களால் அல்லது 16.9 சதவீதத்தால் அதிகரித்தது. இது, முக்கியமாக, வர்த்தக வங்கிகளின் வசமுள்ள உடைமைகளின் வீழ்ச்சியை மேலதிகமாக எதிரீடுசெய்த மத்திய வங்கியின் வசமுள்ள உடைமைகளிலேற்பட்ட கணிசமான அதிகரிப்பினுல் விளைந்ததாகும். உண்மையில், கடந்த நான்கு ஆண்டுகளிலும், மத்திய வங்கியின் வசமுள்ள உடைமைகளின் சராசரி ஏறத்தாழ 80 இலட்சம் ரூபாய்களாக விளங்கியிருக்கையில், 1967/68ல் அதன் வசமுள்ள உடைமைகள் 700 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. மத்திய வங்கியானது, ஆழ்நிதிகளிலிருந்து பிணைகளைச் கொள்வனவு செய்ததே இந்த அதிகரிப்புக்கு முக்கிய காரணமாகும். மறுபக்கம், வர்த்தக வங்கிகள் 1963/64லிருந்து தங்கள் வசமுள்ள உடைமைகளைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டே வந்தன.

பலவாண்டுகளாகத் தன்வசமுள்ள உடைமைகளை அதிகரித்துக்கொண்டு வந்த வங்கியல்லாத் துறை, 1967/68ல் தன்பங்கை 27,890 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. கடந்த ஐந்து நிதியாண்டுகளில் இத்துறை தனது தொடர்பான பங்கை 7.6 சதவீதப் புள்ளிகளால் 1962/63ல் 81.9 சதவீதத்திலிருந்து 1967/68ல் 89.5 சதவீதத்துக்கு அதிகரித்தது.

அரசாங்கப் பிணைகள் வைத்திருக்கும் வங்கியல்லாத் துறையிலுள்ள முக்கிய உடைமையாளர்கள், ஊழியர் சேமநிதி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், ஆழ்நிதிகள், சேமிப்பு நிலையங்கள், திணைக்கள நிதிகள் போன்ற அரசாங்கச் சார்புடைய தாபனங்களாகும். 1963/64இலிருந்து 1966/67 காலப்பகுதியில் 59.5 சதவீதத்திலிருந்து 68.9 சதவீதத்திற்கு 9.4 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்த அரசாங்க சார்புடைய துறையின் உடைமை, 1967/68ல் 69.6 சதவீதத்திற்கு எல்லையளவால் அதிகரித்தது. 1967ம் ஆண்டறிக்கையிற் கூறப்பட்டவாறு, பிணைகளின் உடைமையாளர்கள்பற்றிய அமைப்பு, பெருமளவிற்கு அரசாங்க சார்புடைய துறையிலேயே கூர்நோக்கியிருக்கும் போக்கு, மீளப்பார்வையிடும் ஆண்டிலும் தொடர்ந்தது.

1968, ஏப்பிறல் 18இல் திரட்டப்பட்ட 5½ சதவீத 1989-93 கடனுடன் நீண்டகால (21 ஆண்டுகளிலிருந்து 25 ஆண்டுகளுக்கு) அரசாங்கக் கடன்களின்மீதான வட்டிவிகிதம் ஆண்டொன்றிற்கு 4½ சதவீதத்திலிருந்து 5½ சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து வட்டிவிகிதத்தில் ஒருவித மாற்றமும் ஏற்படவில்லை. முந்திய விகிதமாகிய 4½ சதவீத வட்டி 1963 யூன் 1ஆந் தேதியிலிருந்து கிட்டத்தட்ட ஐந்தாண்டுகள் நடைமுறையிலிருந்தது.

## 2. இறைசேரி உண்டியல்கள்

1967/68ம் நிதியாண்டின் ஆரம்பத்தில் வெளிநின்ற இறைசேரி உண்டியல்களின் அளவு 15,000 இலட்சம் ரூபாய்களாகும். அத் தேதியில் அதிகாரம் வழங்கப்பட்ட எல்லையும் 15,000 இலட்சம் ரூபாய்களாகும். 1968 சனவரி 27ஆந் தேதி நாடாளுமன்றத்தால் இந்த எல்லை 17,500 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்த்தப்பட்டது. 1967/68ம் நிதியாண்டின் இறுதியில், வெளியிடப்பட்டதும், வெளிநின்றதுமான இறைசேரி உண்டியல்களின்

## அட்டவணை II (ஊ) 15

## அரசாங்கப் பிணைகளின் உடைமையாளர்கள் (அ)

## 1963/64இலிருந்து 1967/68வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | 1963/64 | 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 |
|---|---|---|---|---|---|
| அ. வங்கித் துறை: | **329.5** | **326.5** | **324.5** | **281.2** | **328.8** |
| 1. மத்திய வங்கி .. | 9.1 | 8.0 | 8.0 | 7.4 | 70.0 |
| 2. வர்த்தக வங்கிகள் .. | 320.4 | 318.0 | 316.4 | 273.7 | 258.8 |
| ஆ. வங்கியல்லாத் துறை | **1,580.0** | **1,823.6** | **2,150.2** | **2,503.6** | **2,789.0** |
| 1. சேமிப்பு நிலையங்கள் .. | 435.6 | 474.4 | 511.6 | 600.5 | 641.2 |
| 2. ஆழ்நிதிகள் .. .. | 256.2 | 302.5 | 407.0 | 474.2 | 532.3 |
| 3. திணைக்கள ஏனைய அரசகரும நிதிகள் .. | 107.5 | 121.8 | 123.8 | 140.0 | 147.1 |
| 4. ஊழியர் சேமநிதிகள் .. | 287.8 | 360.1 | 434.8 | 519.8 | 612.1 |
| 5. ஏனைய சேமநிதிகள் .. | 253.7 | 281.9 | 322.9 | 364.3 | 394.5 |
| 6. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 45.4 | 87.6 | 133.8 | 181.6 | 234.5 |
| 7. ஏனைய அரசாங்கக் கூ. தாபனங்கள் | 3.5 | 3.5 | 3.5 | 2.9 | 2.9 |
| 8. காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் | 128.7 | 132.1 | 136.6 | 136.5 | 140.7 |
| 9. ஏனையவை (ஆ) .. | 61.5 | 59.7 | 76.3 | 83.8 | 83.7 |
| மொத்தம் | **1,909.4** | **2,149.6** | **2,474.6** | **2,784.8** | **3,117.9** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ரூபாக் கடன்களை மட்டும் குறிக்கின்றது.

(ஆ) கூட்டுறவு வங்கிகள், ஏனைய கூட்டுநிலையங்கள் ஆகியவற்றையும் கொண்டுள்ளது.

தொகை 17,500 இலட்சம் ரூபாய்களாக விளங்கி, இவ்வாண்டுக் காலத்தில் 2,500 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பை ஏற்படுத்தின. இறைசேரி உண்டியல் வெளியீடுகளின் விவரங்கள் பின்னிணைப்பு IIன் அட்டவணை 28ல் தரப்பட்டுள்ளன.

வங்கித் துறை வசமுள்ள இறைசேரி உண்டியல் உடைமைகள், 1967 செத்தெம்பர் 30இல் விளங்கிய 14,567 இலட்சம் ரூபாய்களுடன் (வெளிநிற்கும் மொத்தத்தில் 97.1 சதவீதம்) ஒப்பிடுகையில், 1968 செத்தெம்பர் இறுதியில் 16,822 இலட்சம் ரூபாய்களாக (வெளிநிற்கும் மொத்தத்தில் 96.1 சதவீதம்) விளங்கின. இந்த மொத்தத்தில் மத்திய வங்கியின் உடைமைகள், 1967 செத்தெம்பர் 30ஆந் தேதியில், விளங்கிய 13,772 இலட்சம் ரூபாய்களுடன் (வெளிநிற்கும் மொத்தத்தில் 91.8 சதவீதம்) ஒப்பிடும்பொழுது, 1968 செத்தெம்பர் இறுதியில் 15,863 இலட்சம் ரூபாய்களாக (வெளிநிற்கும் மொத்தத்தில் 90.6 சதவீதம்) விளங்கிற்று. எனவே, 2,255 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பில், மத்திய வங்கி 2,091 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறிற்று.

நிதியாண்டின் ஆரம்பத்தில், இறைசேரி உண்டியல்கள்மீதான வட்டி விகிதம் ஆண்டொன்றிற்கு 3.0 சதவீதமாக விளங்கியது. 1967 நவெம்பர் 2இல் ஆண்டொன்றிற்கு 2.93 சதவீதமாக அது வீழ்ச்சியுற்று, 1968 யூன் 15ல் ஆண்டொன்றிற்கு 3.64 சதவீதத்திற்குப் படிப்படியாக உயர்ந்து, ஆண்டின் இறுதிவரை அம்மட்டத்திலேயே நின்றது. 1968 நவெம்பர் 1இல் 2.0 சதவீதத்திற்கு உயர்த்தப்படும்வரை, இறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கியின் ஆதரவு தொடர்ந்து ஆண்டொன்றிற்கு 1.0 சதவீத வட்டி பெற்றுக் கொண்டுவந்தது.

### வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்

வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் வெளியீட்டிற்கென அதிகாரம் அளிக்கப்பட்ட தொகை 1966/67ன் 2,500 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1967 ஒற்ரோபர் 28ஆந் தேதியில் 3,000 இலட்சம் ரூபாய்களுக்கு உயர்த்தப்பட்டது. அதிகாரமளிக்கப்பட்ட இத்தொகையில், 1968 செத்தெம்பர் இறுதிவரை வெளியிடப்பட்ட வரியொதுக்குச் சான்றிதழ்கள் 2,625 இலட்சம் ரூபாய்களாகவும், அத்தேதிவரை கையளிக்கப்படாத சான்றிதழ்கள் 240 இலட்சம் ரூபாய்களாகவும் இருந்தன. முந்திய நிதியாண்டின் இறுதியில் கையளிக்கப்படாதிருந்த தொகை 257 இலட்சம் ரூபாய்களாகும். எனவே, இத்தகைய கடன் பொறுப்புக்களிலேற்பட்ட வீழ்ச்சி 17 இலட்சம் ரூபாய்களாகவுள்ளது. முந்திய ஆண்டின் இதே வகையில் 65 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சி யேற்பட்டது.

1968 செத்தெம்பர் 7 முதல் வரியொதுக்குச் சான்றிதழ்களின்மீதான வட்டி 1½ சதவீதத்திலிருந்து 2 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது: முந்திய வட்டி விகிதமான 1½ சதவீதம், 1961 ஒகத்து முதல் நடைமுறையிலிருந்தது.

### மத்திய வங்கி முற்பணங்கள்

1968 செத்தெம்பர் இறுதியில், அரசாங்கத்திற்கான மத்திய வங்கி முற்பணங்கள் 3,045 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. 1967 செத்தெம்பர் இறுதியில் தொடர்பான எண்தொகை 2,716 இலட்சம் ரூபாய்களாக இருந்தது. எனவே, மீளப்பார்வையிடும் ஆண்டிலேற்பட்ட அதிகரிப்பு 329 இலட்சம் ரூபாய்களாகும். ஆயினும், இவ்வெண்தொகைகள், சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு இலங்கையின் அங்கத்துவச் சந்தாப்பணமாக 1968 செத்தெம்பர் இறுதியில் 869 இலட்சம் ரூபாய்களும், அதற்கு முந்திய நிதியாண்டின் இறுதியில் 844 இலட்சம் ரூபாய்களும் கொடுப்பனவு செய்வதற்கு மத்திய வங்கியால் வழங்கப்பட்ட விசேட கடன்களையும் உள்ளடக்கும். இக்கொடுப்பனவுகளை நீக்கினால், 1967/68ல் மத்திய வங்கியின் முற்பணங்கள் 304 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

### அந்நியக் கடன்

மொத்த அந்நியக் கடன் (அதாவது மீளக்கொடுப்பனவுகளை நீக்கி, ஆனால் ஆழ்நிதிகளைக் கழிக்குமுன்னர்) 7,393 இலட்சம் ரூபாய்களிலிருந்து 1967/68 நிதியாண்டின் இறுதியில் 10,454 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. இந்த அதிகரிப்பு, 3,061 இலட்சம் ரூபாய்கள் அல்லது 41.4 சதவீதமாக விளங்கிற்று. முந்திய நிதியாண்டில் தொடர்பான அதிகரிப்பு 1,905 இலட்சம் ரூபாய்கள் அல்லது 34.7 சதவீதமாக இருந்தது. 1967/68ல் ஏற்பட்ட, 3,061 இலட்சம் ரூபாய்கள் கொண்ட இந்த அதிகரிப்புக்கு 1967 நவெம்பர் 18இல் பவுண் ஸ்டேர்லிங்கினது நாணய மதிப்பிறக்கம்,

1967 நவெம்பர் 22இல்[1] இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கம் ஆகிய வற்றின் ஒருங்கு சேர்ந்த விளைவினால், வெளிநிற்கும் அந்நியக் கடன்களின் ரூபாய்ப் பெறுமதி மீளக் கணிக்கப்பட்டமை, ஓரளவிற்குக் காரணமாக இருந்தது. எனவே, அந்நிய கடன்கள் 14 இலட்சம் ரூபாய்களால் (£ 1,06,211) அதிகரித்தது. இது, சில உதவி ஒப்பந்தங்களின்கீழ், அதாவது போலந்து மக்கள் குடியரசின் 380 இலட்சம் ரூபாய்கள் (£ 28.5 இலட்சம்), சேர்மன் சனநாயகக் குடியரசின் 2,000 இலட்சம் ரூபாய்கள் (£ 150 இலட்சம்), யூகோசிலேவியாவின் 733 இலட்சம் ரூபாய்கள் (£ 55 இலட்சம்)[2] ஆகிய கடன்வசதி ஒப்பந்தங்களின்கீழுள்ள ''தங்கப் பெறுமதி வாசகத்தின்'' காரணத்தால் ரூபாப் பெறுமானம் உயர்த்திக் கணக்கிடப்பட்டமையாலாகும். மேலும், இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கம், அந்நியக் கடனின் ரூபாய்ப் பெறுமதியை 1,430 இலட்சம் ரூபாய்களால் உயர்த்தியது. எனவே, ஸ்டேர்லிங்கினதும், ரூபாவினதும் நாணய மதிப்பிறக்கத்திலேற்பட்ட அதிகரிப்புக்கள் நீக்கிய, 1968ம் நிதியாண்டின் செத்தெம்பர் இறுதியில், மொத்த அந்நியக் கடன் 1,617 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது.

மீளப்பார்வையிடும் நிதியாண்டில் அந்நியக் கடன்களின்கீழ் செய்யப்பட்ட மொத்த எடுப்பனவுகள் 2,143 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இதில், 512 இலட்சம் ரூபாய்கள் (23.9 சதவீதம்) திட்டக் கடன்களுக்காகும். எஞ்சிய 1,631 இலட்சம் ரூபாய்களும் (76.1 சதவீதம்) பண்டக் கடன்களின்கீழான எடுப்பனவுகளாகும்.

நிதியாண்டில் மீளக் கொடுப்பனவுகள் 526 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இதில் 439 இலட்சம் ரூபாய்கள், (83.5 சதவீதம்) திட்டக் கடன்களுக்கும், 87 இலட்சம் ரூபாய்கள் (16.5 சதவீதம்) பண்டக் கடன்களுக்குமாகும். எனவே, இலங்கையின் வெளிநாட்டுக் கடன்[3] 1,617 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. ஸ்டேர்லிங், திட்ட, பண்டக் கடன்கள் சம்பந்தமாகப் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்புபற்றிய விவரங்கள் அட்டவணை II (ஊ) 16ல் தரப்பட்டு, கீழே பகுப்பாயப்பட்டுள்ளன.

### திட்டக் கடன்கள்

1967/68ல் திட்டக் கடன்கள் வழியாக அந்நிய உதவியின் பாவிப்பு, 512 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 439 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மீளக் கொடுப்பனவு நீக்கி, திட்டக் கடன்கள் சம்பந்தமான அந்நியப் பொறுப்புக்கள் 73 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. முந்திய நிதியாண்டில், 435 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மீளக் கொடுப்பனவு, 432 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மொத்தப் பாவிப்பிலும் கூடியதாக அமைந்து, திட்டக் கடன்கள் சம்பந்தமான அந்நியப் பொறுப்புக்களை 12 இலட்சம் ரூபாய்களாற் குறைத்தது.

---

1. நாணய மதிப்பிறக்கத்தின் இரு திகதிகளுக் கிடையில் எவ்வித செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களும் நடைபெறவில்லை.

2. மேற்றகூறப்பட்ட ஒப்பந்தங்களின் ''தங்கப் பெறுமதி வாசக'' நியதியின்படி, இக் கடன் வசதிகளில் வெளிநின்ற தொகைகளும் அவற்றின்மேல் கொடுக்கப்படவேண்டிய வட்டியும் அத்தகைய முறையிற் கணக்கிடப்பட்டதாயினும். அவற்றின் தங்கச் சமநியதிப் பெறுமானம் நாணய மதிப்பிறக்கத்திற்கு முன்னிலிருந்த அளவிலேயே இருந்தன.

3. அரசாங்கத் திணைக்களங்களுக்கு நிரப்பலர்களின் கொடுகடனைத் தவிர்ந்து.

## அட்டவணை (ஊ) 16

### அந்நியக் கடன்பாடுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகையும் மூலமும் | 1967/68ல் செய்த எடுப்பனவுகள் | 1967/68ல் செய்த கொடுப்பனவுகள் | 1967/68ல் ஏற்பட்ட அதிகரிப்பு | 1968 செத்தெம்பர் 30ல் உள்ள படியான பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. ஸ்டேர்லிங் கடன்கள் | — | — | — | **89.3** |
| 2. திட்டக் கடன்கள் | **51.2** | **43.9** | **7.3** | **525.6** |
| (அ) ச.பு.அ.வ. .. .. | — | 7.7 | —7.7 | 164.3 |
| (ஆ) ஐ.அ.நா. .. .. .. | | | | |
| (i) பல்நாட்டுக் கூட்டுறவு நிர்வாகம் | — | 0.6 | —0.6 | 63.8 |
| (ii) அபிவிருத்திக் கடன் நிதி .. | — | 1.3 | —1.3 | 9.6 |
| (iii) பல்நாட்டு அபிவிருத்திக்கான முகவர் நிலையங்கள் .. .. | — | — | — | 7.0 |
| (iv) பொதுச் சட்டம் 480 .. | 15.8 | — | 15.8 | 15.8 |
| (இ) ஐக்கிய இராச்சியம் .. | 0.9 | 6.8 | —5.9 | 11.3 |
| (ஈ) ஐ.ச.சோ.கு. .. .. | 0.5 | 8.9 | —8.4 | 94.5 |
| (உ) சேர்மன் சமஷ்டிக் குடியரசு (அ) .. | 9.8 | 5.4 | 4.4 | 53.3 |
| (ஊ) சேர்மன் சனநாயகக் குடியரசு .. | 8.3 | — | 8.3 | 9.7 |
| (எ) மக்கள் சீனக் குடியரசு .. | — | 5.5 | —5.5 | 39.8 |
| (ஏ) கனடா .. | 9.0 | 3.8 | 5.2 | 38.5 |
| (ஐ) நஷனல் அன்ட் கிறீன்ட்லேஸ் வங்கி | 3.9 | — | 3.9 | 3.9 |
| (ஒ) பிரான்சு (ஆ) .. .. | — | 1.7 | —1.7 | 5.5 |
| (ஓ) யூகோசிலேவியா .. .. | 0.9 | 1.6 | —0.7 | 3.8 |
| (ஔ) போலாந்து .. .. | 2.0 | 0.6 | 1.4 | 4.6 |
| 3. பண்டக் கடன்கள் | **163.1** | **8.7** | **154.4** | **430.5** |
| (அ) ஐ.அ.நா. (இ) .. .. | 31.7 | — | 31.7 | 75.8 |
| (ஆ) சேர்மன் சமஷ்டிக் குடியரசு (அ) .. | 20.6 | — | 20.6 | 87.6 |
| (இ) ஐக்கிய இராச்சியம் .. .. | 55.0 | — | 55.0 | 133.9 |
| (ஈ) கனடா .. .. .. | 2.8 | — | 2.8 | 7.9 |
| (உ) பிரான்சு .. .. | 24.2 | 0.5 | 23.7 | 39.7 |
| (ஊ) யப்பான் .. .. .. | 26.9 | 3.0 | 24.0 | 75.8 |
| (எ) இந்தியா .. .. | 1.9 | 5.2 | —3.4 | 9.9 |
| கூட்டு மொத்தம் | **214.3** | **52.6** | **161.7** | **1045.4** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) கிறடிற்றன்ஸ்லாட் வுர் வீடரவ்போ கடன்கள்.

(ஆ) கொன்ஸற்றே ஒ அசைன்ஸ்மென்ற் ஸ்கோர்மன் (எஸ்ஓசிஈஎ) கொடுகடன்.

(இ) பல்நாட்டு அபிவிருத்திக் கடன்களுக்கான முகவர் நிலையங்கள்.

அட்டவணை II (ஊ) 16ல் காட்டியுள்ளபடி, பயன்படுத்தப்பட்ட திட்ட உதவியின் பெரும்பகுதி, ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்து பொ. ச. 480 கடன்கள் ரூபமாக வந்தது. இந்த ஒப்பந்தங்களின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட விவசாயப் பண்டங்களின் விற்பனைகளிலிருந்து பெறும் வருமானங்கள் இலங்கையில் விவசாய அபிவிருத்திக்கும், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களுக்கும் பயன்படவேண்டியனவாயுள்ளன. ஏனைய முக்கிய உதவியளித்த நாடுகள் சீமெந்துக் கைத்தொழில் துறைமுக வசதிகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய வற்றிற்கு சேர்மன் மஷ்டிக் குடியரசு (98 இலட்சம் ரூபாய்கள்), மஸ்கெலிஓய மின்சாரத் திட்டத்திற்கான சாதனங்களும் சேவைகளும் நிரம்பல் செய்தல், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தல்1 ஆகியவற்றிற்குக் கனடா (90 இலட்சம் ரூபாய்கள்), துல்கிரியாவிலுள்ள ஆடைகளுக்கான அமைப்புத் திட்டத்திற்குச் சேர்மன் சனநாயகக் குடியரசு (83 இலட்சம் ரூபாய்கள்) ஆகியவையாகும்.

1968 செத்தெம்பர் இறுதியில், திட்டக் கடன்கள் சம்பந்தமாக வெளிநின்ற அந்நிய பொறுப்பு, மீளக் கொடுப்பனவு நீக்கி, 5,256 இலட்சம் ரூபாய்களாக விளங்கிற்று. இது, அத்தேயிதில் வெளிநின்ற மொத்த அந்நியக் கடனில் 50.3 சதவீதமாகும். முந்திய நிதியாண்டின் இறுதியில், திட்டக் கடன்கள் சம்பந்தமாக வெளிநின்ற பொறுப்பு 4,289 இலட்சம் ரூபாய்களாகும். எனவே, மீளப்பார்வையிடும் ஆண்டில் வெளிநிற்கும் பொறுப்பு 967 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தது. ஆயினும், இந்த அதிகரிப்பின் 893 இலட்சம் ரூபாய்கள் முன்பு விளக்கப்பட்டுள்ளபடி, பவுண் ஸ்டேர்லிங்கினதும், இலங்கை ரூபாவினதும் நாணய மதிப்பிறக்கத்தின் ஒருங்கு சேர்ந்த தாக்கத்தினால் ஏற்பட்டதாகும்.

**பண்டக் கடன்கள்**

முந்திய நிதியாண்டின் 1,939 இலட்சம் ரூபாய்கள் கொண்ட இறக்குமதிகளுக்கு முரணாக, 1968ம் நிதியாண்டின் செத்தெம்பர் இறுதியில், பண்டக் கடன்களின்கீழான இறக்குமதிகளின் பெறுமதி 1,631 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. எனவே, இந்தாண்டில் பண்ட உதவியின்கீழ் செய்யப்பட்ட இறக்குமதிகளில் 308 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கு முரணாக, 1966/67ல், இதற்கு முந்திய ஆண்டிற்கு மேலாக, பண்ட உதவிப் பாவிப்பு 1,587 இலட்சம் ரூபாய்களால் குறிப்பிடத்தக்கவகையில் அதிகரித்தது. ஆயினும், 1967/68ல் பண்டவுதவியைப் பயன்படுத்துவதிலேற்பட்ட வீழ்ச்சி, இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினால், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் அளவின் வீழ்ச்சியைக் குறைத்துக் கூறுகிறதென்பது இங்கு கவனிக்கத்தக்கது.

பண்டக் கடன்களாகப் பெறப்பட்ட அந்நிய உதவி, முக்கியமாக, வளமாக்கிகள், கைத்தொழில் மூலப் பொருட்களும், இயந்திரங்களும், வர்த்தக வாகனங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்காக ஐக்கிய இராச்சியத்திடமிருந்தும் (550 இலட்சம் ரூபாய்கள்), மா, வளமாக்கிகள், இயந்திரங்களும், பகுதிகளும், மோட்டார் வாகனங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்காக ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தும் (317 இலட்சம் ரூபாய்கள்), ஆடைகள், வளமாக்கிகள், கைத்தொழில் மூலப் பொருட்கள், இயந்திரங்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்யும் பொருட்டு, யப்பானிலிருந்தும் (269 இலட்சம் ரூபாய்கள்), இழுபொறிகள், கட்டடப் பொருட்கள், அடிப்படை உலோகங்கள், டயர்கள், ரியூப்புக்கள் ஆகியவற்றை இறக்குமதிசெய்யும் பொருட்டு பிரான்சிலிருந்தும் (242 இலட்சம் ரூபாய்கள்) வளமாக்கிகள், கைத்தொழில் மூலப்பொருட்களும், இயந்திரங்களும், மோட்டார் பகுதிகள் ஆகியவற்றை இறக்குமதி செய்யும்பொருட்டு சேர்மன் சமஷ்டிக் குடியரசிலிருந்தும் (206 இலட்சம் ரூபாய்கள்) பெற்ற கடன்களைக் கொண்டதாக உள்ளது.

---

1. இப்பொழுது பூர்த்தியாக்கப்பட்டுள்ள கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அமைப்பதற்காக மதிப்பீடுசெய்யப்பட்ட மொத்தச் செலவான 669 இலட்சம் ரூபாய்களில் 398 ரூபாய்கள்கொண்ட அந்நிய செலாவணிக்குக் கனடா அரசாங்கம் முற்றாக நிதியீட்டியது.

1966/67 இறுதியில் பண்டக் கடன்கள் சம்பந்தமாக வெளிநிற்கும் அந்நிய பொறுப்பு 2,270 இலட்சம் ரூபாய்களாகும். மீளப்பார்வையிடும் ஆண்டில் அது 2,035 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்து, 1968 செத்தெம்பர் இறுதியில் 4,305 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. இவ்வதிகரிப்பில், ரூபாவின் நாணய மதிப்பிறக்கம் 491 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறிற்று. 1967/68ம் நிதியாண்டின் இறுதியில், பயன்படுத்தப்பட்ட பண்டக் கடன்கள் சம்பந்தமாக வெளிநிற்கும் 4,305 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகை, அத்தேதியில் வெளிநிற்கும் மொத்த அந்நியக் கடனின் 41.2 சதவீதத்தைக் கொண்டதாகவிருந்தது.

மீளப்பார்வையிடும் ஆண்டில், பண்டவுதவிப் பாவிப்பினுலும், வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்காக அவை பயன்படுத்தப்பட்டதனுலும் ஏற்பட்ட இணைக்கிணை நிதிகள் பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 29இல் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. 1966/67ம் நிதியாண்டின் இறுதியில் 1,952 இலட்சம் ரூபாய்கள் இக்கணக்கிற்கு வரவுவைக்கப்பட்டிருக்கையில், எடுப்பனவு செய்யப்பட்ட தொகை 1,500 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. 1968ம் நிதியாண்டின் செத்தெம்பர் இறுதியில் வரவுவைக்கப்பட்டதும், எடுப்பனவு செய்யப்பட்டதுமான தொகைகள் முறையே, 2,046 இலட்சம் ரூபாய்களாகவும், 2,000 இலட்சம் ரூபாய்களாகவும் விளங்கின. இதன் தேறிய விளைவு, பண்டவுதவி இணைக்கிணை நிதியில் வெளிநிற்கும் தொகை, 46 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பாகும்.

### 3. வெளிநாட்டு நிரப்பலர்களின் கொடுகடன்

அண்மைக் காலங்களில், இலங்கையின் இறக்குமதிகளை நிதியீட்டும் இன்னுமொரு மூலத்தின், அதாவது வெளிநாட்டு அல்லது அந்நிய நிரப்பலர் கொடுகடனில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது, இலங்கையிலுள்ள இறக்குமதியாளரொருவருக்கு, அந்நிய நாட்டு ஏற்றுமதியாளரொருவராற் கொடுக்கப்படும் கொடுகடன் வசதியாகும்.[1]

நிறைவேற்றப்பட்ட நிரப்பலர் கொடுகடன்மீதான தரவுகள் மட்டுமே கிடைக்கக்கூடியதாகவுள்ளன. எனவே, குறிப்பிட்ட எந்தக் காலத்திலும் வெளிநிற்கும் மொத்தக் கடனை நிர்ணயிக்க முடியாது. அத்தகைய கொடுகடன் பெற்றவர்களிடமிருந்து கிடைத்த தரவுகளின்படி 1967 திசெம்பர் வரை முடிவாக்கப்பட்ட நிரப்பலர் கொடுகடனில் அநேகமாக சகலதும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனவென்பது தெரியவருகின்றது. எனவே, நிறைவேற்றப்பட்ட தொகைகளை அடிப்படையாகக்கொண்ட பின்வரும் பகுப்பாய்வை உண்மையில் உட்படுத்தப்பட்ட கடனின் தொகையின் ஏறக்குறைவான மதிப்பீடாகப் பாவிக்கலாம்.

1958லிருந்து, பொதுக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத் திணைக்களங்கள் ஆகியவற்ருல் முடிவாக்கப்பட்ட நிரப்பலர் கொடுகடனின் விவரங்கள் அட்டவணை II (ஊ) 17ல் தரப்பட்டுள்ளன.

1958இலிருந்து 1968வரையான காலப்பகுதியில் அரசாங்கத் திணைக்களங்களாலும், பொதுக் கூட்டுத்தாபனங்களாலும் முடிவாக்கப்பட்ட நிரப்பலர் கொடுகடனின் திரட்டுத் தொகை 4,939 இலட்சம் ரூபாய்களாக அமைந்தது. இதில், 4,496 இலட்சம் ரூபாய்கள் 1966இலிருந்து 1968ம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் முடிவாக்கப்பட்டது. பொதுக் கூட்டுத்தாபனங்கள் 3,263 இலட்சம் ரூபாய்களைப் பெற்று (66.1 சதவீதம்), கொடுகடனின் முக்கிய பெறுநராக விளங்கின. மீதித் தொகையான 1,676 இலட்சம் ரூபாய்களான (33.9 சதவீதம்) தொகைக்கு அரசாங்கத் திணைக்களங்கள் வகைகூறின. எனவே, கடந்த மூன்று ஆண்டுகளிலும் ஒரு புதிய முறையான வெளிநாட்டுப் பொதுப்படுகடன்பாட்டிற் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

---

1. இக் கொடுகடன்களாவன, வழமையான வர்த்தகக் கொடுகடன்களின் காலப்பகுதிக்கு மேலாக வழங்கப்படுகின்றன.

## அட்டவணை II (ஊ) 17

## அரசாங்கத் திணைக்களங்களாலும், பொதுக் கூட்டுத்தாபனங்களாலும் நிறைவேற்றப்பட்ட நிரப்பலர் கொடுகடன் 1958/68 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| பெறுநர்கள் | 1958 (ஆ) | 1962 (ஆ) | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 (இ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரசாங்கத் திணைக் களங்கள் | — | — | — | — | 1.2 | 7.3 | 84.1 | 75.0 |
| 2. பொதுக் கூட்டுத் தாபனங்கள் | 12.2 | 2.7 | 4.9 | 14.7 | 8.6 | 120.9 | 37.6 | 124.7 |
| மொத்தம் | 12.2 | 2.7 | 4.9 | 14.7 | 9.8 | 128.2 | 121.7 | 199.7 |
| ஒருமித்த மொத்தம் | 12.2 | 14.9 | 19.8 | 34.5 | 44.3 | 172.5 | 294.2 | 493.9 |

மூலங்கள் : அமைத்புத் திட்ட பொருளாதார அலுவல்கள் அமைச்சு, இலங்கை மத்திய வங்கி.

(அ) சகல எண்தொகைகளும் தற்காலிகமானவை.

(ஆ) கிடைக்கக்கூடிய பதிவேடுகளிலிருந்து, 1958க்குப் பின்னரும் 1962க்கு முன்னரும் எவ்வித நிரப்பலர் கொடுகடனும் முடிவாக்கப்படவில்லை.

(இ) 1968 திசெம்பர் 15ல் உள்ளபடி. பிந்திய எண்தொகைகள் கிடைக்கப்படவில்லை.

கொடுகடனின் பெரும்பகுதி இத்தாலி (1,027 இலட்சம் ரூபாய்கள்), சேர்மன் சமஷ்டிக் குடியரசு (939 இலட்சம் ரூபாய்கள்), ஐக்கிய இராச்சியம் (742 இலட்சம் ரூபாய்கள்), யப்பான் (491 இலட்சம் ரூபாய்கள்), பிரான்சு (471 இலட்சம் ரூபாய்கள்), இந்தியா (372 இலட்சம் ரூபாய்கள்), செக்கோசிலாவாக்கியா (325 இலட்சம் ரூபாய்கள்) ஆகிய நாடுகளிலிருந்து பெறப்பட்டன. முடிவாக்கப்பட்ட கொடுகடனின் 88.4 சதவீதத்திற்கு இந்த ஏழு நாடுகளும் வகைகூறின.

இதுவரை ஒழுங்குசெய்யப்பட்ட நிரப்பலர்களின் கொடுகடன்கள், பொருளாதார அமைப்புமுறை வசதிகளையும் (போக்குவரத்து, நீர்ப்பாசன, மின்சாரத் துறைமுக வசதிகள்), கைத்தொழிற்றுறையின் உற்பத்தி வலுவையும் விருத்தி செய்வதற்கான முதலீட்ட நடுத்தரப் பொருட்களை உதவுதவற்காக மட்டுமே அமைந்ததாகும். கைத்தொழிற்றுறையே இதில் பெரும்பகுதியான நலன்களைப் பெற்றுள்ளதெனத் தெரிகிறது. இத்துறையானது, ஒப்பந்தஞ் செய்யப்பட்ட மொத்தக் கடனில் ஏறக்குறைய அரைவாசியை அல்லது 2,284 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தொகையைப் பெற்றுள்ளது. இத் துறையுள் பெற்றோலிய (தூய்மையாக்கலும், கலத்தலும்), கைத்தொழில், கொடுக்கப்பட்ட மொத்த நிரப்பலர், கொடுகடனின் 993 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 20 சதவீதத்திற்கு வகைகூறி, ஆகக்கூடிய நிரப்பலர் கொடுகடனைப் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. இக்கொடுகடனின் ஏனைய முக்கிய பெறுநர்கள் சீமெந்து (478 இலட்சம் ரூபாய்கள் அல்லது 9.7 சதவீதம்), எஃகு (371 இலட்சம் ரூபாய்கள் அல்லது 7.5 சதவீதம்), மரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் (275 இலட்சம் ரூபாய்கள் அல்லது 5.6 சதவீதம்) ஆகியவையாகும். ஒழுங்குசெய்யப்பட்ட நிரப்பலர் கொடுகடனின் ஏறக்குறைய 44.8 சதவீதம் அல்லது 2,211 இலட்சம் ரூபாய்கள் பொருளாதார அமைப்பு முறை வசதிகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு மூல நடுத்தரப் பொருட்கள் வழங்குவதற்காக வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டாகவிருந்தது. இதில் "போக்குவரத்துச் சேவைகள்", 1,184 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 24.0 சதவீதத்திற்கு வகைகூறிற்று; (புகையிரதம் 735 இலட்சம் ரூபாய்கள் அல்லது 14.9 சதவீதம், விமானம் 387 இலட்சம் ரூபாய்கள் அல்லது 7.8 சதவீதம், வீதிகள் 61 இலட்சம் ரூபாய்கள் அல்லது 1.2 சதவீதம்). அதே வேளையில், மின்சார சேவைகள் 657 இலட்சம்

ரூபாய்களுக்கு அல்லது 13.3 சதவீதத்திற்கு, வீதிகள், அணைகள், கட்டடங்கள் பாலங்கள், நீர்ப்பாசன வசதிகள் ஏனையவை கட்டுதல் (மண் அகற்றல் உட்பட) 356 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 7.2 சதவீதத்திற்கும் வகைகூறின.

### அரசாங்கச் சார்புடைய தாபனங்களாற் செய்யப்பட்ட கடன்பாடுகள்

1966/67 இறுதிவரை கடந்த நான்கு ஆண்டுகளிலும் சகல வளங்களையும் அரசாங்கத்தின் தேவைக்குத் திருப்புவதும், கடன் நிதிகளிலிருந்து தேசிய வீடமைப்பு ஆணையாளருக்குக் கடன் வழங்கும்படி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுவதுமான கொள்கையை மத்திய வங்கி பின்பற்றியது. ஆயினும், 1967/68ல் இக்கொள்கையில் திரிபு ஏற்பட்டது.

### தேசிய வீடமைப்புத் திணைக்களம்

1967/68ல், 180 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன் முறிகளில் இரு வெளியீடுகள் ஏற்பட்டன. அவை 1968 பெப்புருவரி 23இலும், யூன் 15இலும் வெளியிடப்பட்டு, முறையே 100 இலட்சம் ரூபாய்களும், 80 இலட்சம் ரூபாய்களும் கொண்டனவாகவும், ஆண்டொன்றிற்கு 5½ சதவீத வட்டியுடன், 1989ற்கும் 1993ற்குமிடையில் மீளக் கொடுப்பனவு செய்யத்தக்கனவாயும் உள்ளன. நிதியாண்டின் இறுதியில் வெளியிடப்பட்டதும், நிலுவையில் நின்றதுமான தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்முறிகளின் தொகை 930 இலட்சம் ரூபாய்களில் நின்றது. அதே வேளையில், இந்த ஆண்டில் அரசாங்கத்தால் அநுமதிக்கப்பட்ட நேரடியான கடன்கள் 190 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. இது, ஆண்டின் இறுதியில் வெளிநிற்கும் கடன்களின் மொத்தத்தை 1,400 இலட்சம் ரூபாய்களிற்குக் கொண்டுவந்தது. தேசிய வீடமைப்புத் தொகுதிக் கடன்முறிகளை மீளப் பெறுவதற்காக நிறுவப்பட்ட ஆழ்நிதிகளின் ஏறக்குறைவான சந்தைப் பெறுமதி 391 இலட்சம் ரூபாய்களில் நின்றது.

### தேசிய ஈட்டு வங்கி

மீளப்பார்வையிடும் ஆண்டில் தேசிய ஈட்டு வங்கித் தொகுதிக் கடன் முறிகளின் வெளியீடுகள் எதுவும் இருக்கவில்லை. எனவே, வெளியீடு செய்யப்பட்டதும், வெளிநின்றதுமான தொகுதிக் கடன்முறிகள் 333 இலட்சம் ரூபாய்களில் நின்றன. முந்திய ஆண்டைப்போலவே, வங்கியின் தொழிற்பாடுகளின் முக்கிய பகுதி, வங்கித் துறையினல் உதவப்பட்ட மேலதிகப்பற்று வசதிகளின் மூலம் செயலாற்றப்பட்டது. நிதியாண்டின் இறுதியில், இவ்வங்கியின் கடன்பாட்டுயெல்லை 756 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதே மட்டத்திலிருந்தது. தேசிய ஈட்டு வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 73ம் பிரிவின்கீழ் உத்தரவாதஞ் செய்யப்பட்ட மேலதிகப் பற்றுக்களின் தொகை 424 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, ஆண்டின்போது பயன்படுத்தப்பட்ட தொகை 214 இலட்சம் ரூபாய்களாக விளங்கியது. 1967/68 இறுதியில், தேசிய ஈட்டு வங்கியின் கடன்பாட்டு வரையறையில் பயன்படுத்தப்படாத மிச்சமெதுவும் இருக்கவில்லை.

### இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்ட நியதிகளின்படி, பயன்படுத்துவதற்கென 1967 நவெம்பரில் அனைத்துலகப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கியுடன் (அ.பு.அ.வ.) முடிவுசெய்யப்பட்ட 40 இலட்சம் டொலர்கள் (238 இலட்சம் ரூபாய்கள்) கொண்ட கடனிலிருந்து, மீளப் பார்வையிடும் நிதியாண்டில், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் (இ.அ.நி.கூ.) ஓர் எடுப்பனவும் செய்யப்படவில்லை.[1] இந்தக் கடனனது, இக்கடனிலிருந்து எடுக்கப்படாத தொகையின்மீது, ஆண்டுக்கு 3/8 சதவீதமான பொறுப்பேற்றற் கட்டணத்திற்கு இலக்கானதாகும். வட்டி விதிதங்கள், இ.அ.நி.கூ. எடுப்பனவுகள் செய்யும் வேளைகளில் அ.பு.அ.வ.வினல் நியமிக்கப்படுவதற்கும், இக்கடனனது ஆண்டிற்கிருமுறையான 31 தவணைப் பணங்களில் 1970 பெப்புருவரியில் ஆரம்பித்து, 1983 பெப்புருவரி முடிவு வரை திருப்பிக் கொடுக்கப்படத்தக்கது.

---

1. 1969 மார்ச்சு 4ந் தேதியில் உள்ளபடி அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினுல், ஐக்கிய அமெரிக்க டொலர்கள் 1,743,673 (ரூபா 104 இலட்சம்) உள்ளூர் விண்ணப்பதாரர்களுக்கு நியமிக்கப்பட்டது. இதில் $ 237,297 (14 இலட்சம் ரூபாய்கள்) பற்றுதல் செய்யப்பட்டுள்ளது.

## 1968/69ற்குரிய வரவுசெலவுத் திட்டம்

அரசிறை, செலவு சம்பந்தமான மூலமதிப்பீடுகள் 1968 ஓகத்து 2ல் பிரதிநிதிகள் சபையிற் சமர்ப்பிக்கப்பட்டு, 1968 செத்தெம்பர் 12ல் அங்கீகரிக்கப்பட்டன. வரவுசெலவுத் திட்டத்தின் பிரதான அம்சங்களை வரவு செலவுத் திட்ட விவாதத்தின்போது அங்கீகரிக்கப்பட்ட புதிய அரசிறை, செலவு சம்பந்தமான முன்மொழிவுகளையும் கணக்கிலெடுத்து, அட்டவணை II (ஊ) 18ல் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஊ) 18

வரவுசெலவுத் திட்ட மூலமதிப்பீடுகள்—1968/69

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | மூலமதிப்பீடுகள் 1968/69 | |
|---|---|---|
| 1. மீண்டெழுஞ் செலவு (வாக்குப் பணங்கள் 12,4,6) (அ) ... | 2,518.1 | |
| 2½ சதவீதக் குறைச்செலவை நீக்கி (ஆ) ... ... | 58.9 | 2,459.2 |
| 2. மூலதனச் செலவு(வாக்குப் பணங்கள் 3,5,7) (அ) ... | 872.7 | |
| 15 சதவீதக் குறைச்செலவை நீக்கி ... ... ... | 130.9 | 741.8 |
| 3. மொத்தச் செலவு (1+2) ... ... ... ... | | 3,201.0 |
| 4. அரசிறை ... ... ... ... ... | | 2,338.5 |
| 5. வரவுசெலவுத் திட்டப் பணக்குறை (3—4) ... ... | | 862.5 |
| பொதுப்படுகடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகளும், ஆழ்நிதிக்கு உதவுதொகைகளும் நீக்கி (இ) ... ... | | 161.3 |
| 6. மதிப்பிடப்பட்டதேறிய பணக்குறை ... ... ... | | 701.2 |
| 7. வரவுசெலவுத் திட்டப் பணக்குறைக்கு நிதியீட்டல் ... | | 862.5 |
| (அ) வங்கியல்லா உள்நாட்டுக் கடன்பாடு ... ... | | 375.0 |
| (ஆ) அந்நிய நிதி | | |
| (1) திட்டக் கடன் ... ... ... ... | 213.0 | |
| (2) பண்டவுதவி இணைக்கிணை நிதி ... ... ... | 263.0 | 476.0 |
| (இ) அடைக்கப்படாத இடை (வங்கியிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு) ... ... ... ... | | 11.5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) 1968/69இன் மதிப்பீடுகளில் ஆழ்நிதி உதவுதொகைகள், பொதுப்படுகடனின் நேரடித் திருப்பிக்கொடுப்பனவுகள், பல்நாட்டு நிறுவனங்களுக்கான விசேட கொடுப்பனவுகள் ஆகிய வற்றிற்கான ஒதுக்குகள், வாக்களிப்பு 3இல் உள்ள மூனதனச் செலவுகளிற் சேர்க்கப்பட்டுள்ளன. இவ் வட்டவணையில் அத்தகைய ஒதுக்குகள் முந்தைய ஆண்டுகளின் எண்தொகைகளுடன் ஒப்பாய்வுற்கு வசதியாக, மீண்டெழுஞ் செலவுகளின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) அதாவது, ஆழ்நிதி உதவுதொகைகள், பொதுப்படுகடனின் நேரடித் திருப்பிக்கொடுப்பனவுகள், பல்நாட்டு நிறுவனங்களுக்கான விசேடக் கொடுப்பனவுகள் ஆகியன நீங்கலான மீண்டெழுஞ் செலவில் 2½ சதவீதம்.

(இ) பல்நாட்டு நிறுவனங்களுக்கான விசேடக் கொடுப்பனவுகளும் உட்படும்.

1968/69ற்கான மதிப்பிடப்பட்ட அரசிறை, வரவுசெலவுத் திட்டத்தோடு புகுத்தப்பட்ட புதிய நடவடிக்கைகளால் எதிர்பார்க்கப்பட்ட 170 இலட்சம் ரூபாய்கள் கொண்ட தேறிய வரவுகளும் உட்பட ரூபா 233,850 இலட்சமாகும். முன்பு கூறப்பட்டதுபோல், இது முந்தைய ஆண்டின் உண்மை (தற்காலிக) அரசிறையிலும்பார்க்க 1,821 இலட்சம் ரூபாய்கள் மேலானதாகும். மதிப்பிடப்பட்ட செலவான ரூபா 32,010 இலட்சம் (வரவுசெலவுத்

திட்டத்தோடு அநுமதிக்கப்பட்ட ரூபா 130 இலட்சம் கொண்ட புதிய செலவுகள் உட்பட, மதிப்பிடப்பட்ட குறைச்செலவாகிய ரூபா 1,898 இலட்சத்தைத் தேற்றி) முந்தைய ஆண்டின் உண்மைச் செலவிலும் (தற்காலிக மானது) பார்க்க ரூபா 1,967 இலட்சம் உயர்வானதாகும். எனவே, 1968/69ன் வரவுசெலவுத் திட்டக்குறை ரூபா 8,625 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது வங்கிகளல்லாத உள்நாட்டுச் சந்தைக் கடன் பாடுகளான ரூபா 3,750 இலட்சத்தாலும், அந்நிய நிதிகளான ரூபா 4,760 இலட்சத்தாலும் நிதியீட்டப்பட்டபின், மீதியான அடைக்கப்படாத தொகையாகிய 115 இலட்சம் ரூபாய்கள் வங்கித் துறைகளிலிருந்து பெறும் கடன் பாடுகளினூல் நிதியீட்டப்படக்கூடியதாகும். இம்மதிப்பீடுகளை முந்தைய ஆண்டிற்குரிய உண்மை விவரங்களுடன் ஒப்பிட்டுச் செய்யப்பட்ட பாகுப்பாடு இங்கு முன்பு வேறொரு பகுதியிற் கூறப்பட்டது.

### அரசிறை, செலவுபற்றிய புதிய ஏற்பாடுகள்

வரவுசெலவுத் திட்டத்திற் கொண்டுவரப்பட்ட புதிய வரிகள், செலவுகள்பற்றிய ஏற்பாடுகள் அரசிறையில் 170 இலட்சம் ரூபா கொண்ட தேறிய அதிகரிப்பையும், செலவில் 130 இலட்சம் ரூபா கொண்ட அதிபரிப்பையும் தருமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவை அட்டவணை II (ஊ) 19ற் சுருக்கித் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஊ) 19

அரசிறை, செலவுபற்றிய புதிய ஏற்பாடுகள் 1968/69

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | தாக்கம் | |
|---|---|---|
| | அரசிறையில் | செலவில் |
| 1. உள்ளூர் வரிகள் | | |
| (அ) மொத்த விற்பனை வரி ... ... ... ... | +12.0 | |
| (ஆ) புகையிலை வரி ... ... ... ... | +15.0 | |
| (இ) சாராய விற்பனை இலாபம் ... ... ... | + 5.0 | |
| 2. இறக்குமதித் தீர்வைகள் (ஆடைகளின்மீது) ... ... | —15.0 | |
| 3. மீண்டெழுஞ் செலவு ... ... ... ... | | + 3.3 |
| 5. மூலதனச் செலவு ... ... ... ... ... | | + 9.7 |
| மொத்தம் ... ... ... ... | +17.0 | +13.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

1. 1968 செத்தெம்பர் 26ந் தேதிய 14,820/4ம் இலக்க இலங்கை அரசாங்க கசெற் பத்திரிகை.
2. 1968 50ம் இலக்க நிதிச் (திருத்தச்) சட்டம்.
3. 1968 ஓகத்து 2ந் தேதிய 14,813/4ம் இலக்க இலங்கை அரசாங்க கசெற் பத்திரிகை.

### (அ) வர்த்தக மொத்தவிற்பனை வரி

வாயுப் பானங்கள், அஸ்பெஸ்டஸ் சீமெந்துப் பொருட்கள், சிகை அலங்காரம், கழுவு சுத்திப் பொருட்கள், அருங்கற்களும், நகைகளும், தயாரிக்கப்பட்ட உடைகள், நிலச்சுவர் ஓடுகள், பூச்சு மைகளும், எண்ணெய்களும், உலோகத் தளபாடங்கள், சிலவகையான மின்சார உறுப்புக்கள் உபபகுதிகள், அத்துடன் மின்விசிறிகள், குளிரேற்றிகள், குளிர்ப்பெட்டிகள் போன்ற மின்சாரப் பொருட்களும், அத்தகைய ஆடம்பரப் பொருட்களும் ஆகிய உற்பத்திகளின்மீது தற்போதுள்ள 5 சதவிகித வரியானது 10 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.1

1. இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,820/4, 1968 செத்தெம்பர் 26.

தற்போதுள்ள விதிவிலக்கெல்லேயான ரூபா 100,000க்கு அமைவாகப் பயில்தொழில்கள் சேவைகளிலிருந்து பெறும் வருமானங்களே இவ்வரிக்கு உட்படுத்தும் நோக்கமாக வரியின் அடிப்படை அகட்டப்பட்டது. அத்தகைய சுழல்வுத் தொகைகளின்மீது 1 சதவிகிதமான வரி விதிக்கப்படும்.[1] அத்துடன், ஓர் உரிமைக்காரரின் கீழுள்ள சகல வர்த்தகங்களினதும் மொத்த விற்பனவு வருமானங்களை ஒன்றுகூட்டி அத்தொகையின்மீது வரி மொத்த விற்பனவு விதிப்பதற்காக, மொத்த விற்பனவு வரி சம்பந்தமான சட்டம் திருத்தியமைக்கப்பட்டது.[2] முன்பு இம்மொத்த விற்பனவுவரி ஒவ்வொரு கிளையின் மீதும், அல்லது வர்த்தகத்தின்மீதும் வெவ்வேருக விதிக்கப்பட்டது. அன்றியும் மேற்கூறிய திருத்தம் நடைமுறையிலுள்ள சட்டத்திற்கு வரைவிலக்கணம் தருவதோடு குறிக்கப்பட்ட விவசாயத் தொழிற்றுறைகளை மொத்த விற்பனவு வரியிலிருந்து விதிவிலக்குச் செய்கின்றது.

### (ஆ) புகையிலை வரி

புகையிலையின்மீது தற்போதுள்ள உள்ளூர் வரி இருத்தலுக்கு ரூபா 33/- இல் இருந்து இருத்தலுக்கு ரூபா 4.50 சதத்தால் அதிகரிக்கப்பட்டது.[3] இதிலிருந்து ரூபா 150 இலட்சம் கொண்ட கூடுதலான அரசிறை எதிர்பார்க்கப்படுகிறது.

### (இ) சாதாரண சாராயத்தின் விற்பனை விலை

சாதாரண (சுத்தத் தெங்கு) சாராயத்தின் விலை போத்தலுக்கு 8 ரூபாவிலிருந்து 10 ரூபாவுக்கு உயர்த்தப்பட்டது.[3] இதிலிருந்து ரூபா 50 இலட்சம் கொண்ட கூடுதலான அரசிறை எதிர்பார்க்கப்படுகிறது.

### (ஈ) ஆடைகள்மீதான இறக்குமதித் தீர்வை

சீத்தைத் துணி, வெள்ளை அல்லது சாயம் ஊட்டப்பட்ட பப்பிளின், வெள்ளைத் துணி ஆகியவற்றின்மீது தற்போதுள்ள யாருக்கு 25 சதவீதமான இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டது.[4] இதனுலேற்படக்கூடிய தேறிய அரசிறை இழப்பு ரூபா 150 இலட்சமென எதிர்பார்க்கப்பட்டிருக்கிறது.

### (உ) மீண்டெழுஞ் செலவு

ரூபா 33 இலட்சம் கொண்ட இரண்டு மேலதிக வாக்குப் பணங்களும் அநுமதிக்கப்பட்டன. இதில் ரூபா 30 இலட்சம் காலித் துறைமுகத் தொழிற்பாட்டு நட்டங்களுக்காகவும், ரூபா 3 இலட்சம் "எக்ஸ்போ 70" பொருட்காட்சியில் இலங்கைப் பங்குபற்றுவதனுலேற்படும் செலவுக்காகவும் உள்ளன.

### (ஊ) மூலதனச் செலவு

ரூபா 97 இலட்சம் கொண்ட கூடுதலான மூலதனச் செலவு அநுமதிக்கப்பட்டது. இதில் ரூபா 67 இலட்சம்கொண்டவொரு வாக்குப்பணம் துறைமுகக் (கப்பற்சரக்கு) கூட்டுத்தாபனத்துக்கான கடனுகவும், ரூபா 30 இலட்சம் கொண்ட வாக்குப்பணம் சிறு நீர்ப்பாசன வேலைகளுக்காகவும் உள்ளன.

### (எ) வரிமுறைகளைச் சீர்திருத்தியமைத்தல்

வரவுசெலவுத் திட்டப் பேச்சில் ஏனைய அரசிறை நடவடிக்கைகளும், வரிமுறையைத் திருத்தியமைக்கும் வழிவகைகளும் அறிவிக்கப்பட்டன. இவை உடனடியாக நடைமுறைக்கு வராமல் உள்ளனவாகும். இவை, வரிமுறை

---

1. இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,820/4, 1968 செத்தெம்பர் 26.
2. 1968ம் ஆண்டின் 50ம் இலக்க நிதிச் (திருத்த) சட்டம்.
3. 1968 ஒகத்து 2ந் தேதிய அரசாங்க வர்த்தமானி இல. 14,813/4.
4. 1968 நவம்பர் 25ல் இலங்கையில் ஆடை இறக்குமதிகளில் தனிஉரிமை வகிக்கும் லங்கா சதொச லிமிற்றெட்டுக்கு சட்டத்துக்குப் புறம்பானதோர் இறக்குமதித் தீர்வை விலக்கும் அளிக்கப்பட்டது.

விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையிலுள்ள விதந்துரைகளையும்[1] 1967 நவெம்பரின் ரூபா நாணய மதிப்பிறக்கத்தின் தாக்க விளைவுகளையும், 1968 மேயில் புகுத்தப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்தின் விளைவுகளையும் கருத்திற்கொண்டு உத்தேசிக்கப்பட்டவையாகும். இவற்றின் சுருக்கம் பின்வருமாறு:

### (அ) "உழைக்கும்பொழுதே இறுத்தல்" திட்டமுறையான வருமான வரி

1970, ஏப்பிறல் தொடக்கம் ஊழியர்களால் இறுக்கப்படவேண்டிய வருமான வரி, வருமானம் உழைக்கப்படும் நேரத்தின்போதே கழிக்கப்படும். தற்பொழுது வருமான வரியானது வரியிறுப்போரால் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் முந்தைய ஆண்டின் வருமானத்தின்மீது விதிக்கப்படுகின்றது. வரிமுறை விசாரணை ஆணைக் குழுவின் விதந்துரைகளுக்கமைந்த இப்புதிய திட்டம் ஏறக்குறைய 75,000 வரியிறுப்போரிடமிருந்து தரவுகள் பெறப்படவேண்டிய தேவையைக் குறைப்பதான நிர்வாக வசதியுடையதாக அமைவதோடு, வரியிலிருந்து தப்பித்துக்கொள்ளுதலையும் குறைப்பதற்கும் உதவியாகும்.

### (ஆ) சொந்த வருமான வரி குறைத்தல்

1969/70 வரி மதிப்பீட்டு ஆண்டு முதல் குடியான தனியாட்கள் சம்பந்தமாகப் புதிய வருமான வரி விகிதப்பட்டியல் புகுத்தப்படும்.[2] இதன் முக்கிய அம்சங்கள்:—

(i) 7½ சதவீதத்திலிருந்து 65 சதவீதம்வரை உயர்ந்துசெல்லும் வரி விகிதமும், 11 படிகளையும் கொண்டதுமான ஒரு புதிய பட்டியல். குடும்பச் சூழ்நிலைகளோடு வேறுபடுகின்ற முதல் இரு படிகளும் முறையே 7½ சதவீத, 10 சதவீத வரிகளுக்கு இலக்காகும். ஒவ்வொன்றும் ரூபா 2,400 கொண்ட அடுத்த இருபடிகளும் முறையே 12½ சதவீத, 15 சதவீத வரிகளுக்கு இலக்காகும். ஒவ்வொன்றும் ரூபா 3,600 கொண்ட அடுத்த மூன்று படிகளும் முறையே 17½ சதவீத, 20 சதவீத, 25 சதவீத வரிளுக்கு இலக்காகும். ஒவ்வொன்றும் ரூபா 4,800 கொண்ட அடுத்த இரு படிகளும் முறையே 30 சதவீத, 40 சதவீத வரிகளுக்கு இலக்காகும். ஒவ்வொன்றும் ரூபா 9,600 கொண்ட அடுத்த இரு படிகளும் முறையே 50 சதவீத, 60 சதவீத வரிகளுக்கு இலக்காகும். எஞ்சிய தொகை 65% வரிக்கு இலக்காக உள்ளது. எனவே, தற்போதுள்ள உயர்ந்த மட்டமான 80 சதவீத வரி 65 சதவீதத்துக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

(ii) தனியாளுக்கான ஊதிய வருமானச் சலுகை ரூபா 500ல் இருந்து ரூபா 900க்கு உயர்த்தப்படும். எனவே, தற்போதுள்ள மட்டமான ரூபா 3,500ற்கு எதிராக ரூபா 3,900க்கு மேற்படாத வருமானமுடைய ஊதிக வருமானச் சலுகைக்கு உரிமையுடைய ஒரு தனியாள் வருமான வரிக்கு உட்படமாட்டார். ஒப்பியல்பாக ஓர் உயர்ந்தபட்சக் குடும்பச் சலுகைக்கு உரிமையுடைய ஒருவருக்கான புதிய வரிவிலக்கு எல்லை தற்போதுள்ள ரூபா 5,000 இற்கு எதிராக ரூபா 5,700 ஆகவிருக்கும்.

---

1. 1968ம் ஆண்டின் 10ம் இலக்க இலங்கைப் பருவப் பத்திரிகை. வரிமுறை விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கை, இலங்கை அரசாங்க அச்சகம், கொழும்பு, 1968.
2. வருமான வரிக்கான மதிப்பீட்டு ஆண்டு ஏப்பிறலில் ஆரம்பித்து, மாச்சில் முடிவடைவது. உதாரணமாக இவ்விடயத்தில் வரிமதிப்பாண்டு 1969/70ன் வரி 1968 ஏப்பிறல் முதல் 1969 மாச்சுவரையான காலப் பகுதியில் உழைத்த வருமானத்தின் அடிப்படையாகும்.

(iii) வரியில்லாதத் தொகை, மனைவிக்கு ரூபா 500லிருந்து ரூபா 600 ஆகவும், பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் தற்போது, ஒவ்வொன்றிற்குரிய ரூபா 250லிருந்து முதலாம், இரண்டாம் பிள்ளைகளுக்கு ஒருமிக்க ரூபா 600 ஆகவும், அடுத்த இரு பிள்ளைகளுக்கு ஒருமிக்க ரூபா 600 ஆகவும் உயர்த்தப்படும்.

(iv) இந்நாட்டில் வதிவோருக்குரிய புதிய வீத அட்டவணைக்கு அமைய, பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்கட்கும், இங்கு வதியாதவர்கட்குமுரிய வரிவீத அட்டவணைகளும் மாற்றப்படும்.

## (இ) சேமிப்பு சலுகை நீக்கப்படல்

1965/66ற்குரிய வரவுசெலவுத் திட்டத்தில் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட சேமிப்புச் சலுகை அளிக்கும் திட்டம், 1969/70 மதிப்பீட்டு ஆண்டிலிருந்து நீக்கப்படும். ஏற்கனவே, சேமிக்கப்பட்ட தொகைகள் 1970 மாச்சு 31ந் தேதிவரை வைத்திருக்கப்படல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளாக மாற்றப்படல் வேண்டும். குறிப்பிட்ட தேதிக்கு முன்னர் பணமாக மாற்றப்பட்டால் ஏற்கனவே அளிக்கப்பட்ட சலுகை மீளப்பெறப் படும். 1968/69 மதிப்பீட்டு ஆண்டிலிருந்து, 1968 ஒகத்து 2ந் தேதிக்குப்பின் செய்யப்பட்ட எந்தச் சேமிப்புக் காரணமாகவும் சேமிப்புச் சலுகை அளிக்கப்படமாட்டாது.

## (ஈ) சலுகை சம்பந்தமான வரி

சேமநிதி, இளைப்பாறல் நிதி உதவுதொகைகட்கும், ஆயுட்காப்புறுதிக் கட்டுப்பணங்கட்கும், ஆண்டுத்தொகைக் கட்டுப்பணங்கட்கும், அங்கீகரிக்கப்பட்ட நன்கொடைகட்கும், அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகட்கும், வரிச்சலுகை அளிப்புதற்குரிய அடிப்படையை மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் மேற்கூறிய விடயங்களுக்காக அளிக்கப்படும் சலுகை, மொத்த மதிப்பீட்டிலிருந்து இவ்விடயங்களின் தொகையில் அரைப்பங்கைக் கழிப்பதன் மூலம் நிர்ணயிக்கப்படும். மேற்கூறிய ஒவ்வொரு விடயத்திலும் சலுகைபெறுவதற்குரிய பாகம் தற்போதுள்ள ஏற்பாடுகளால் கட்டுப்படுத்தப்படும். 1969/70 வரி மதிப்பீட்டு ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் இத் திருத்தங்கள், குறைந்த வருமானத் தொகுதியினருக்குச் சலுகையளிப்பதுடன், வரி சம்பந்தமான நிர்வாகத்தை எளிமையாக்கும்.

## (உ) வருமானவரி தொடர்பான வேறு பிற மாற்றங்கள்

ஊழியர்களின் பயணப்படிகளும் உணவுப் படிகளும், உயர்தொழில், தொழில்நுட்பச் சங்கத்திற்கான உதவுத்தொகைகள், உயர்தொழில் சார்ந்த அல்லது தொழில்நுட்ப நூல்களை வாங்குதல், வெளிநாட்டு நிபுணர்களின் வேதனங்கள், பதவியிழப்புக்குரிய நட்ட ஈடு, வாடகையிலிருந்து திருத்தங்களுக்காகக் கழிக்கப்படக்கூடிய செலவுகள், வதிவிடத்தை விற்பதனுற் கிடைக்கும் வேதன இலாபங்கள் முதலியவற்றைப் பொறுத்தவரையில் வருமான வரிக் கணக்கெடுப்பு அடிப்படையை மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக, ஒரு முயற்சிக்கு அளித்துள்ள வரிவிலக்கு நீடிக்கும்வரை, அம் முயற்சியிலீடுபட்டிருக்கும் வெளிநாட்டு நிபுணர்களின் வேதனங்களுக்கு வரி விலக்களிக்கப்படும். மேலும், ஒருவர் குறித்தவொரு காலயெல்லைக்குள் வேறொரு வதிவிடத்தைக் காட்டுவாராஞல், அல்லது வாங்குவாராஞல், அவரது முதலாம் விற்பனையிலிருந்து கிடைக்கும் இலாபத்துக்கு விதிக்கப்படும் வரி பின்போடப்படும்.

## (ஊ) செல்வ வரி

1959 யூலை 1லிருந்து வரிவிலக்களிக்கப்பட்டுவந்த அரசாங்கப் பிணைகளின்மீதான முதலீடு, 1969/70 வரி மதிப்பீடு ஆண்டிலிருந்து வரி விதிக்கத்தக்க செல்வமாகக் கருதப்படும்.

(எ) வரியோய்வு நீக்கப்படல்

25 பேருக்கு மேற்பட்டோரை வேலையிலமர்த்தியுள்ள புதிய முயற்சிகளுக்கு இப்பொழுது பெறத்தக்கதாகவுள்ள ஐந்தாண்டு வரியோய்வை விலக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், இப்போது வரியோய்வு பெற்றுவரும் முயற்சிகளும், 1969 மாச்சு 31ந் தேதிக்கு முன்னர் செயலாற்றம் தொடங்குவதற்கென மாற்றமுடியாத நடவடிக்கைகள் எடுத்துள்ள முயற்சிகளும், ஒரு குறித்த தேதிக்குமுன் வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட ''விசேட குத்தகைத் திட்டத்தின்''[1] கீழமைந்த வேளாண்மை முயற்சிகளும், இந்த நலனைத் தொடர்ந்து பெறும். இந்த நலன் வருங்காலத்தில் ''முன்னோடியான தன்மையுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய முயற்சிகளுக்கு'' மாத்திரம் வழங்கப்படும்.[2]

(ஏ) கூட்டுநிலைய வரிமுறை

வரையறுக்கப்பட்ட பொதுக் கூட்டுநிலையங்கள் உருவாகுவதை ஊக்குவிக்கும் நோக்குடன், பரந்த அடிப்படையான பங்குரிமைகொண்ட வரையறுக்கப்பட்ட பொதுக் கூட்டுநிலையங்களின்மீதான தற்போதுள்ள 50 சதவீத வரியை, 5 ஆண்டுகளுக்கு 25 சதவீதமாகக் குறைக்கும் விடயம் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இந்த உத்தேசத்தினைப் பரிசீலனை செய்வதற்கு குழுவொன்றினை நியமிக்கப்பட்டு, விரைவிற் சட்டமியற்றப்படும்.

(ஐ) சுங்கச் சீர்திருத்தங்கள்

1968 ஒகத்து 3லிருந்து இலங்கைச் சுங்கத் தீர்வைப் பட்டியல் பல்நாட்டு முறைமையாக ஏற்கப்பட்ட பிரசெல்ஸ் இடுபெயர்த் தொகுதி முறைக்கமைய மாற்றப்பட்டுள்ளது.[3] இது சுங்கத் தீர்வை அட்டவணையிற் கூடிய தெளிவையும் எளிமையையும் கொண்டுவந்துள்ளது. அதே காலத்தில், இறக்குமதித் தீர்வை அறவிடும்முறை, மொத்தச் சந்தைப் பெறுமானத்திலிருந்து கொ.கா.க. பெறுமானமுறைக்கு மாற்றப்பட்டுள்ளது. இப்பொழுதுள்ள சுங்கக் கட்டளைச்சட்டங்களை எளிதாக்கி ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன், ஒரு புதிய சுங்கச் சட்ட மசோதா நாடாளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்படும். மேலும், தற்போது நிலவுகின்ற 4 வெவ்வேறு சேவைகளான தடுப்பு, மதிப்பீடு, பொதிபொட்டணம், இறக்கம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து ஒருமுகப்படுத்திய சுங்கச் சேவையை நிறுவுதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது.

## ஏனைய நிதி நடவடிக்கைகள்

இலங்கை ரூபா மதிப்பிறக்கத்தின் பயனாக உயர்ந்த விலைகளினால் வாழ்க்கைச் செலவிலேற்பட்ட தாக்கத்தைக் குறைப்பதற்கும், ஏற்றுமதியாளர்களுக்குச் சேருகின்ற மேலதிக வருவாய்களின் ஒரு பங்கினைப் பெறுவதற்குமென 1968 நவெம்பரிலும், அதனையடுத்த காலத்திலும் எடுக்கப்பட்ட நிதி நடவடிக்கைகள்பற்றிய விளக்கம் 1967ம் ஆண்டறிக்கையிற் கொடுக்கப்பட்டது. 1968ல் எடுக்கப்பட்ட ஏனைய முக்கிய நிதி நடவடிக்கைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

---

1. இத் திட்டத்தின்கீழ் பயரிடப்படாத முடிக்குரிய காணிகள் தனியாட்களுக்கும், தனியார் துறை நிறுவனங்களுக்கும் பயிர்செய்வதற்காகக் குத்தகைக்கு விடப்படுகின்றன.

2. வரவுசெலவுத் திட்டப் பேச்சு 1968/69; 57ம் பக்கம், இலங்கை அரசாங்க அச்சகம், கொழும்பு, 1968.

3. இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,813/2, 1968 ஒகத்து 2.

### (அ) தேயிலைமீதான ஏற்றுமதித் தீர்வை

1967 நவெம்பரில் சகல தேயிலைகள்மீதுமான ஏற்றுமதித் தீர்வை இருத்தலுக்கு 5 சதங்களால் 40 சதங்களுக்கு அதிகரிக்கப்பட்டதென கடந்த ஆண்டிற் கூறப்பட்டது.[1] பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட தேயிலைகளினது ஏற்றுமதியை ஊக்குவிக்கும் நோக்கமாக (வழக்கமாகக் குவியலாகவே ஏற்றுமதி செய்யப்படுகின்றவையிலும் புறம்பானது) ஒரு கிலோகிராமுக்கு (2.2 இருத்தல்களுக்கு) மேற்படாத பைக்கற்றுக்களிலடைக்கப்பட்ட தேயிலைகள் மீதான ஏற்றுமதித் தீர்வை இருத்தலுக்கு 15 சதங்களால் இருத்தல் 25 சதங்களுக்குக் குறைக்கப்பட்டது.[2] மேலும், கரையுந் தேயிலைகளின் ('திடீர்த் தேயிலை') ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக அவ்வேற்றுமதிகள்மீதான தீர்வை நீக்கப்பட்டது.[3]

### (ஆ) அருங்கற்கள்மீதான ஏற்றுமதித் தீர்வை

அருங்கற்கள், ஓரளவு அருங்கற்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள்மீதான 5 சதவீதப் பெறுமான ஏற்றுமதித் தீர்வை 1968 நவெம்பரில் நீக்கப்பட்டது.[4] இது இரத்தினக் கற்கள் வியாபாரத்தில் சட்டரீதியான வாணிபத்தொடர்பை ஊக்குவிக்குமுகமாக அளிக்கப்பட்ட மற்றுமொரு தூண்டுகோலாகும் (இரத்தினக் கற்களினது ஏற்றுமதிகளுக்கு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் வழங்குதல் முறை முன்பு அளிக்கப்பட்ட ஒரு தூண்டுகோலாகும்).

### (இ) அந்நிய செலாவணி உரிமைச் சன்றிதழ்த் திட்டத்துடன் புகுத்தப்பட்ட ஏற்பாடுகள்

(1) இறக்குமதிகள்மீதான உத்தரவுச் சீட்டுக் கட்டணம்:

1968 மே 6ந் தேதி புகுத்தப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டத்துடன் நடைமுறையிலிருந்த இறக்குமதிகள் மீதான 10% உத்தரவுச் சீட்டுக் கட்டணம் நீக்கப்பட்டது. எனினும், அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் கையளிக்க வேண்டாத ''விசேட உதவி உத்தரவுச் சீட்டின்'' கீழ் வந்திறங்கும் சில உதவி இறக்குமதிகள்மீது, பண்டவுதவியைப் பொறுத்தமட்டில், 14 சதவீத உத்தரவுச் சீட்டுக் கட்டணமும், சர்வதேசத் தாபனங்களிலிருந்து பெற்ற கடன்களைப் பொறுத்தமட்டில், 20 சதவீத உத்தரவுச் சீட்டுக் கட்டணமும் விதிக்கப்படுகின்றது.

(2) இறக்குமதித் தீர்வை

கைத்தொழில் இயந்திரம், உறுப்புக்கள், அடிப்படை மூலப் பொருட்கள் (உருவாக்கப்பட்ட பொருட்கள், உறுப்புக்கள், பொதிப் பெட்டிகள், உள்ளடக்கிகள் ஆகியவற்றைத் தவிர்த்து) ஆகியவற்றின் இறக்குமதிகள்மீது, தீர்வை நீக்கப்பட்டது. ஒருங்கமைப்பதற்கு அல்லது தயாரிப்பதற்குத் தேவையான உறுப்புக்கள் 5 சதவீத விருப்புத் தீர்வைக்கும் 15 சதவீதப் பொதுத் தீர்வைக்கும் உள்ளடக்கப்பட்டன.

(ஈ) 1968 ஓகத்து 3ந் தேதி பல்நாட்டுமுறைமையாக ஏற்கப்பட்ட பிரசெல்ஸ் இடுபெயர்த் தொகுதி முறைக்கமைய ஒரு புதிய சுங்கத் தீர்வை எஸ்.ஐ.ரி.சி. அடிப்படையிலமைந்த சுங்கத் தீர்வையைப் பதிலீடு செய்தது. புதுத் தீர்வைத் திட்டத்தின்கீழ் சகல இறக்குமதிகளும் குறித்து வரையறுக்கப்பட்டு இறக்குமதித் தீர்வைகள் பின்வரும் அடிப்படையில் அமைக்கப்பட்டன.

---

1. மேற்கூறிய நூல்.
2. 1968 மே 5ந் தேதிய இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,800/8.
3. 1968 ஒற்ரோபர் 8ந் தேதிய இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,822/4.
4. 1968 நவெம்பர் 15ந் தேதிய இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,828/1.

(1) தீர்வையற்றவை:—உணவுப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், அத்தியாவசிய நுகர்ச்சிப் பொருட்கள், கைத்தொழில் விவசாய இயந்திரங்கள்.

(2) 10% விருப்புச் சலுகையும், 20% பொதுவும்: அத்தியாவசிய விடயங்கள்.

(3) 50%-60 %மட்டங்கள்: அநேகமாக வருமான நோக்கத்துக்காகப் புகைப்படப் பொருட்கள், மின்விளக்குச் சாதனம், சைகைச் சாதனங்கள், ஒலிபெருக்கி போன்றவை மீது விதிக்கப்படும் தீர்வைகள்.

(4) 100% பாதுகாப்பு வீதங்கள்:—மேலதிக இறக்குமதியைத் தடுக்குமுகமாக அல்லது உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாக்கும் முகமாக சில க.பொ.உ. விடயங்கள் மீது விதிக்கப்படும் தீர்வைகள்.

(5) 300%வரை—தடுப்பு வீதங்கள்: மதுபானம், புகையிலை, ஆடம்பர வாகனங்கள் போன்றவை மீது விதிக்கப்படும் தீர்வைகள்.

புதுச் சுங்கத் தீர்வைத் திட்டத்தின்கீழ் இறக்குமதித் தீர்வைகளைக் கணக்கிடும் முறை, ''மொத்தச் சந்தை விற்பனவுப் பெறுமதியில்'' அமையாது ''கொ.கா.க. பெறுமதியின்'' அடிப்படையில் அமையுமென்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.